உள்ளே....
* புலிகளின் தாக்குதல்கள்
* பிரெஞ்சுத் தேர்தல்
* கரும்புலிகள் பற்றி...
* தமிழீழச் செய்திகள்
* நண்டாரின் அலசல்
* ரணசுரு - சூரய அழிவு
* கவிதைகள்
* விளையாட்டு



France: 10FFrs. GB: 75P Germany: 2.50DM Suisse: 2SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 1 27 ஏப்ரல் - 03 மே 1995 முழக்கம் : 15



உள்ளோ....
* பாலச்சந்தரின் முகங்கள்
* ஆருக்குச் சொல்லி அழ?
* சடையரின் அலசல்
* பாசக்கடிதங்கள்
* புகலிட முரண்பாடுகள்
* தமிழரசன் கட்டுரை
* அரசு-புலிகள் முறிவு ஏன்?
* இளம்பரிதியின் உரை


# தொடரும் புலிகளின் தாக்குதல்கள் செய்திகளை இருட்டடிப்புச் செய்யும் அரசு

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து பாரிய தாக்குதல்களை சிறீலங்காவின் அரச படைகளுக்கு எதிராக மேற்கொண்டு வருகின்றனர். கடந்த 19-ம் திகதி அதிகாலை கடற் புலிகளின் தாக்குதலில் கடற்படையின் இரண்டு விரைவு பீரங்கிப் படகுகள் முற்றாக அழிக்கப்பட்டதுடன், கிழக்கில் பாரிய தாக்குதல்களை விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ளனர். இத் தாக்குதல் பற்றிய விபரங்களை சிறீலங்கா அரசு இருட்டடிப்புச் செய்வது தெரியவந்துள்ளது.

## சமாதானத்துக்கும் நல்லவர்கள் போருக்கும் வல்லவர்கள் – சந்திரிகா



"சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த புலிகள் மறுத்தால் யுத்தம் புரிவதற்கும் நாங்கள் தயாராய் இருக்கின்றோம். எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவே நாங்கள் விரும்புகின்றோம்" என 'டைம்ஸ் ஒவ்ப் இந்தியா' என்ற பத்திரிகைக்கு ஜனாதிபதி சந்திரிகா அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் தரப்பைப் பொறுத்த மட்டில் ஒரு முழு அளவிலான யுத்தம் இருக்காது. சமாதானத்தையே நாடி நிற்கின்றோம் என்றும் ஜனாதிபதி சந்திரிகா கூறி இருக்கின்றார்.

இது ஒரு தற்காலிக பின்னடைவு என்றே நாங்கள் கூறி இருக்கின்றோம் புலிகள் விரும்பினால் நாங்கள் பேச்சுவார்த்தையை தொடங்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத்துக்கான நிலைப்பாட்டை அரசு எவ்வாறு கொண்டிருக்கிறதோ, அதே அளவு நிலைப்பாட்டையே நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக்காப்பதிலும் அரசு கொண்டுள்ளது. நாங்கள் சமாதானத்துக்கு நல்லவர்கள்; ஆனால் அதேபோல போருக்கும் வல்லவர்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா தனது பேட்டியில் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் பணத்தில் உலகம் சுற்றும் லக்ஷ்மன் கதிர்காமர்



பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மக்கள் பணத்தில் வெளிநாடுகளுக்கு சுற்றுலா போய்வருவதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இச் சம்பவம் பற்றி மேலும் குறிப்பிடுகையில், கடந்த நான்கு மாத காலத்தில் அவர் சுற்றுலா சென்ற நாடுகளையும் செலவழித்த பணத்தையும் எதிர்க் கட்சிகள் பட்டியல் போட்டுள்ளது.

அவர் சுற்றிய நாடுகள் அமெரிக்கா, பங்களாதேஷ், இந்தியா மற்றும் மாலைதீவு எனவும் அச் சுற்றுலாக்களின் போது அவர் விரயம் செய்த பணத்தின் மொத்தத் தொகை 5 லட்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## கட்டுமுறிப்புக்குள இராணுவ முகாமில் புலிகளால் கைப்பற்றப்பட ஆயுதங்கள்

| | |
|---|---|
| GPMG | - 02 |
| TRI POD (ஸ்ராண்ட்) | - 02 |
| T.K. LMG | - 01 |
| TRI POD (ஸ்ராண்ட்) | - 01 |
| 60மி.மி. மோட்டார் | - 02 |
| TRI POD BASE PLATE (தாங்கி சுழல் மேடை) | - 01 |
| SILENCER | - 02 |
| SNIPER | - 02 |

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## கட்டுமுறிவுத் தாக்குதலில் வானூர்திகளும் விரட்டியடிப்பு

மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள கட்டுமுறிவுக் குளம் இராணுவ முகாம் சுமார் 1000 இற்கு மேற்பட்ட விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு மூர்க்கமாக தாக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மணி நேரத்துக்குள் முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் பல மணி நேரம் இராணுவத்தினரைத் தேடி அழிக்கும் முயற்சிகளில் புலிகள் ஈடுபட்டதாகவும் தமிழீழச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## போரதீவு அதிரடிப்படை முகாமையும் புலிகள் தாக்கினர்

போரதீவு அதிரடிப் படை முகாம் மீதும் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணி ஒன்று திடீர்த் தாக்குதலை மேற்கொண்டது.

இத் தாக்குதலின் மூலம் இராணுவ முகாம் பலத்த சேதத்துக்குள்ளானதுடன் பல படையினரும் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. கட்டுமுறிப்புக் குளம் இராணுவ முகாம் தாக்குதலின் போது, இராணுவத்தினருக்கு உதவி வழங்க போரதீவு இராணுவத்தினர் புறப்பட்ட வேளையிலேயே இவ் அதிரடித் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

## வாகரையில் புலிகள் தாக்குதல்

விடுதலைப் புலிகளால் கட்டுமுறிவுக்குளம் இராணுவமுகாம தாக்கப்பட்ட அதே நேரத்தில், விடுதலைப் புலிகளின் மற்றுமொரு அணி வாகரை இராணுவ முகாம் மீதும் தொடர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது. அதி நவீன மோட்டார்களைப் பயன்படுத்தி முகாமைச் சுற்றி நின்ற புலிகளின் அணி தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டது.

இத் தாக்குதலால் நிலை குலைந்த வாகரை இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறாதபடி முடக்கப்பட்டனர். இத் தாக்குதலிலும் பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாரிஸ் மாநாட்டுக்கு சந்திரிகா வருவாரா?

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக 26-ம் திகதி பாரிஸ் வர இருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் பயணம் தொடர்பாக முரண்பட்ட செய்திகள் கொழும்பில் இருந்து வெளிவருகின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் பயணம் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவே அரசு செய்திகள் தெரிவித்த போதிலும், தற்போதைய சூழ்நிலையில் அவர் இலங்கையை விட்டு வெளியேறுவது பற்றி தீவிரமாக ஆராயப்படுகின்றதாம்.

இதேவேளை, பாரிஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அரச பிரதி நிதிகள் பாரிஸ் வந்து சேர்ந்துள்ளனர்.

இக்குழுவில் இம்முறை விசேடமாக இலங்கையின் தனியார் துறையைச் சேர்ந்த இலங்கையின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் கடிதம்?

விடுதலைப் புலிகளின் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து விலகி, தாக்குதல்களை ஆரம்பித்த பின்னர் மீண்டும் சந்திரிகா விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு, கடிதம் ஒன்று எழுதி இருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலே பேச்சுவார்த்தை தொடங்கிய பின்னர் பல கடிதங்கள் இருபகுதியினருக்கும் இடையே பரிமாறப்பட்டுள்ளன. இறுதியாக மோதல் தவிர்ப்பில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக, சந்திரிகாவுக்கு 18-04-1995 திகதியிடப்பட்டு எழுதியிருந்த கடிதத்தில் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது போர் மீண்டும்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு

# சாவை முத்தமிட்டு எதிரியை அழிக்கும் கரும் புலிகள்



அந்த வட / கிழக்கில் எல்.ரீ.ரீக்கு முழு மனதுடன் அணு அளவேனும் பிசகாத விசுவாசத்துடன் செயல்படும் இளைஞர்கள், யுவதிகளை காண்கிறேன். தங்கள் வாழ்க்கையைப் பற்றி சற்றும் சிந்திக்காத இந்த இளம் வட்டங்கள், புலிகளின் போராடும் போராளிகளாக இருப்பதை விட, தன்னையும் அழித்துக் கொண்டு, எதிரியும் அழிந்து போகும் கரும் புலியாக உருவாகவே அவர்கள் விரும்புகின்றார்கள். எனினும் அவர்கள் விரும்பியவுடன் கரும்புலியாகிவிட முடியாது. இது கெரிலாப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு வீரனுக்கும், வீராங்கனைக்கும் தெரியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆலோசனையில் உருவாகும் இந்தக் கரும் புலி என்னும் தற்கொலைப் படை உலகிலேயே ஒரு தனி இடத்தைப் பிடித்த தன் நிகரில்லாப் படை என்பது மறைக்க முடியாத உண்மை.

எதிரியை அழித்துக் கொண்டு தன்னையும் அழிக்கும் சேவையை செய்யப் புறப்படும் வீரர்கள், சாதாரண வீரர்களாக களத்திலிருந்துதான் உருவாகிறார்கள். ஆயினும், சாதாரண போராளிக்கும் ஒரு கரும்புலிக்கும் இடையே இருக்கும் கதையில் ஒரு மகத்துவமே இருக்கின்றது. அது ஒரு விசித்திரமான கதை. அதை நம்மால் புரிந்து கொள்ள முடியாது.

வடக்கு - கிழக்கில் இருக்கும் போராளிகள் தம்மை கரும் புலியாக இணைக்கும்படி தினமும் தலைவர் பிரபாகரனுக்கு கடிதமூலம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். எனினும், எல்லோருடைய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அவர்கள் தங்கள் விண்ணப்பத்துடன் எழுதும் கடிதங்களில் தலைவர் பிரபாகரனை, பிரபா அண்ணா என்றே முறை கூறி அழைக்கிறார்கள். இவ்வாறு கிடைக்கும் கடிதங்களில் மிக சொற்பமானவையே கரும்புலி படையில் சேர தகுதி பெறுகின்றன. போராளிகள் அனுப்பிய விண்ணப்பங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் கரும்புலி விண்ணப்பம் மீண்டும் மறு பரிசிலனை செய்யப்படுகின்றது. அதைத் தொடர்ந்து அந்த ஆண், அல்லது பெண் போராளியின் போராட்டகால சிறப்பு தகுதிகள், அவர்களின் குடும்பத்தின் உண்மையான நிலை, அதுமட்டுமல்ல, இது வரை அவர்கள் பழகிவந்த நண்பர்களின் குணாதிசயங்கள் போன்றவை மிக நுணுக்கமாக ஆராயப்பட்ட பின்னரே அவர்கள் கரும்புலி என்னும் சிறப்புப்படையில் சேர அனுமதிக்கப் படுகிறார்கள். விசேட முகாமில் பயிற்சி பெறும் இவர்களது தலைமைத்துவம், இயோடு போராடுதல், வெடிமருந்துகள் பற்றிய சிறப்புப் பயிற்சி, மனோபலம், பரிபாஷைகள் இதுடன் பல சிறப்பம்சங்கள் நிறைந்த பாடத் திட்டங்களை பயிலுகின்றார்கள். அவற்றுடன், உலகிலேயே மிகச்சிறந்த தாக்குதல் படங்கள் என வர்ணிக்கப்படும் வீடியோ படங்கள், இவர்களுக்கு முன் தாக்குதல்கள் நடத்தி வீர மரணம் அடைந்த போராளிகளின் வீடியோ படங்களையும் பார்க்க அனுமதிக்கப் படுகிறார்கள். மனோபலமும், பரிபாஷையும் போதிக்கப்படுவது இவர்களின் பயிற்சியின் இறுதிக் கட்டத்திலேயே. எனினும், இறுதியின் வடிவம் என வழங்கப்படுவது வெடிமருந்தினை வெடிக்க வைக்கும் தொழில் நுட்பக் கலையே. ஒரு கரும்புலியின் பயிற்சிக்காலம் மூன்று வருடமாக கணிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் வாழும் இளைஞர்கள், யுவதிகளின் வாழ்நாளில் அதிக நாட்கள் கழிவது போராட்டத்துடன் தான். இவர்களின் இனிமையான வாழ் நாட்களில் பெரும் பகுதி கழிவது பதுங்கு குழிகளிலும், காவல் அரண்களிலும் தான். இது ஒரு ஜீரணிக்க முடியாத துக்கமான சம்பவம். இருந்தாலும் அவர்கள் இவைகளை பற்றி கவலைப்பட்டுச் சிந்திப்பதில்லை.

உலக பிரசித்தி பெறும் இவர்களை கரும்புலியாக உருவாகியதும் சொந்த பந்தங்கள், உறவுகள் நண்பர்கள் இவரர்களிடமிருந்து மேலும் ஒருபடி விலகி மேலேபோய் விடுகிறார்கள்.

ஈழ விடுதலைப் புலிகள் என இவர்களை உலகிற்குக் காட்டுவது இவர்களின் "பொற்றாசியம் சயனைட்" குப்பிதான். அரச படைகளிடம் அகப்படும் வேளைகளில் இவர்கள் இதை கடித்து தங்கள் உன்னத வாழ்வுக்கு முடிவைத் தேடிக் கொள்கிறார்கள். இவர்களுக்கு இந்த சயனைட் குப்பி கிடைப்பது கெரில்லா பயிற்சியை முடித்துக்கொண்ட பின்தான். பயிற்சியை முடிக்கும் ஒரு கொரில்லா வீரனுக்கு அந்த பயிற்சி முகாமிலிருக்கும் தலைவராலேயே "சயனைட்" கழுத்தில் அணிவிக்கப்படுகின்றது. இவர்கள் இந்த நஞ்சுக் கயிற்றை கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டதும், தங்கள் போராட்ட வாழ்வில் மேலும் ஒருபடி உயர்ந்து விடுகின்றார்கள். இருப்பினும் இந்தக் கரும்புலிப் பயிற்சிக்கு உட்படுத்தப்படும் ஒரு போராளி, பயிற்சி தொடங்கும் நாளில், இந்த நஞ்சை கழட்டி வைத்துவிட்டு தன் பயிற்சி முடிந்த பின்னரே இதை மீண்டும் அணிந்து கொள்கிறார். இதை இவர்கள் அணிந்து கொள்வது தங்கள் கையால் அல்ல தங்கள் தன்னிகரில்லா தலைவன் பிரபாகரன் கரத்தாலேயே.

பயிற்சியை முடிக்கும் இறுதி நாளில் தலைவர் பிரபாகரனால் இவர்களுக்கு ஒரு விருந்தளிக்கப்படும். அவ்விருந்தில் தலைவர் இக் கரும்புலிகளுக்கு சிறப்புரை ஒன்றும் ஆற்றுவார். தங்கள் அன்புத் தலைவருடன் கூடி இருந்து ஒருவாய் சோறு சாப்பிடுவதை இவர்கள் பெரும் பாக்கியமாகவே நினைக்கிறார்கள். ஏனெனில் விடுதலைப் போராளியாக களத்தில் இருப்பவர்கள் எல்லோரும் இலகுவில் பிரபாகரனை நேரில் பார்த்துவிட முடியாது. எப்போவாது தான் நேரில் காண்பார்கள்.

பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் கரும் புலிகள் சாதாரண மக்களுடன் மக்களாக பழகுவார்கள் அவர்களுக்குகென்று தனியான சீருடை அணிந்து கொண்டு மக்களை நெருங்குவதில்லை. தங்களுக்கென்று ஒரு தாக்குதல் வேலை கொடுக்கும்வரை அவர்கள் மக்களைவிட்டுப் பிரிவதில்லை. தாக்குதலுக்கு தெரிவு செய்யப்பட்டபின் அவர்களுக்கு அதற்கான பயிற்சி வழங்கப்படும். பின்னர், தலைவரை சந்திக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வேளை அவர்களுக்கு சிறப்பு விருந்தொன்றும் தலைவரால் அளிக்கப்படும். இது அவர்களின் தலைவரின் ஒரு சம்பிரதாயம் எனவும் கூறலாம்.

தாக்குதலுக்கு புறப்படும் கடைசி நேரத்திலும் கூட, கரும் புலியாக புறப்படும் புலி வீரன், தங்களின தலைவரை வாழ்த்திச் செல்ல மறப்பதில்லை. அத்துடன், தலைவருடன் சேர்ந்து படம் எடுத்துக் கொள்வதையும் தவிர்த்துக் கொள்வதில்லை.

புகைப்படத்தில் தலைவருடன் இணையும் அவர்கள் தலைவரின் மனத்திலும் பின்னிப் பிணைந்து விடுகிறார்கள். தனக்குக் கொடுக்கப்படும் தாக்குதல் இலக்கில் தன் மரணம் நிச்சயிக்கப்பட்டிருக்கும் உண்மையை உணர்ந்து சிரித்துக் கொண்டே சென்று அந்தத் தீப் பிழம்பில் தங்களை சங்கமிக்க விடுகிறார்கள். "தமிழீழ விடுதலைப் பாதையில் கரும்புலிகள் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியவர்கள்" என்பது மறைக்க முடியாத உண்மை.

**"லக்பிம" சிங்களப் பத்திரிகையின் விவரணம்**

எழுதியவர் கிறிஸ்னா விஜயபண்டார
தமிழாக்கம்: சு.ஜோநேசன்


நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவங்களின் அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட இரு தமிழீழத் திரைப்படங்கள்

மேஜர் கிண்ணியின் வீர வரலாற்றிலிருந்து

அகன்ற வெண் திரையில்

ஒரு நெருப்பு மனிதனான கடற் கரும்புலியின் கதை





சுவிசில்:
29.04.1995 மாலை 5.30 மணிக்கு
LIMMATHAUS
LIMMAT STR. 118, 8005 ZURICH

இத்துடன் செவ்வரத்தம் பூ குறும்படமும் காண்பிக்கப்படும்

இன்னும் ஒரு நாடு

உயிர்ப்பு

பாரிசில்

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க, மீண்டும் 29.04.1995 - 7.30 மணிக்கு
LE TRIANON, 80, Bld. Rochechouart, 75018 Paris. M°: ANVERS

# நாளும் நடக்கும் நாட்டிலே

நண்டு

ஏப்ரல் 19ம் திகதி விடுதலைப் புலிகளின் காலக்கெடு முடியும் போது தொடர்வது யுத்தமா அல்லது பேச்சுவார்த்தையா என்ற கேள்வியினை கடந்த வாரம் நண்டார் எழுப்பியிருந்தார் அல்லவா! நிலைமை யுத்தமாகவே தொடரும் போலுள்ளது.

ஏப்ரல் 19ம் திகதி காலக்கெடுவுக்குள் சிறீலங்கா அரசு உரிய நடவடிக்கை எடுக்காமையால் பேச்சுவார்த்தையில் இருந்தும் யுத்த நிறுத்தத்தில் இருந்தும் விலகிக் கொள்வது என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். காலக்கெடு முடிவடைந்த சில நிமிடங்களில் திருகோணமலையில் நடாத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலில் இரு கடற்படைப் பீரங்கிப் படகுகள் அழிக்கப்பட்டன. 11 கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும், 23 பேர் படுகாயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

இங்கு நண்டார் குறிப்பிட விரும்பும் விடயம் இதுதான். ஏப்ரல் 27, 28ம் திகதிகளில் பாரிசில் நடைபெறவிருக்கும் சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் வரை ஜனாதிபதி சந்திரிகாவால் மோதல் எழும்பாது சமாளிக்க முடியாமல் போனது ஏன்? விடுதலைப் புலிகள் தாங்களாகவே யுத்தத்தினை ஆரம்பிக்க விரும்பவில்லை என சந்திரிகாவுக்கு கிடைத்த நம்பகமான தகவல இதற்குக் காரணம் எனலாம். தனது இராணுவ தலன்களை இம்மியேனும் விட்டுக் கொடுக்க சந்திரிகா தயாராக இல்லாதது மறு காரணம்.

விடுதலைப் புலிகள் யுத்தத்தினை ஆரம்பிக்க விரும்பாத போது, தாம் உரிய காலக்கெடுவுக்குள் விடுதலைப்புலிகள் கோரிய விடயங்களை நிறைவேற்றாவிட்டாலும் விடுதலைப் புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்கத் தயங்குவார்கள் என சந்திரிகா எதிர்பார்த்திருக்கலாம். யுத்தத்தினைத் தாமாக ஆரம்பிப்பதில் விடுதலைப் புலிகள் தயக்கம் காட்டிய போதும், சிறீலங்கா அரசின் உதாசீனமான போக்கின் பின் மோதல் தவிர்ப்பில் இருந்தும் பேச்சுவார்த்தையில் இருந்தும் வெளியேற வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

தொடர்ந்து என்ன நடைபெறப் போகின்றது? மூன்றாம் கட்ட ஈழப் போரா? அல்லது பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட சந்தர்ப்பம் உண்டா? பொறுத்திருந்து பார்ப்போம்.

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதில் ஐரோப்பிய நாடுகள் அக்கறையாகவே உள்ளன என்பதை அறிவோம். இவ்வாறு அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்தவர்களில், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்புவதில் நோர்வே நாடும் முன்னணியில் நிற்கின்றது.

இலங்கைத் தீவின் பாதுகாப்புப் பகுதியினைச் சேர்ந்த, அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவது என்பதே நோர்வேயின் முடிவு. பாதுகாப்பான பகுதி என்றால் என்ன? என்பது குறித்து தெளிவான வரையறை இருப்பதாகத் தெரியவில்லை. கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கைப் பகுதிகள் பாதுகாப்பானவை என ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் 1992ல் வகுத்த வரையறையினைப் பின்பற்றுவதாக முன்னர் கூறப்பட்டது. இப்போது 'தம்பலகாமம்' பகுதியினைச் சேர்ந்த ஒருவருக்கு அப்பகுதி பாதுகாப்பானது என்பதால், அங்கு போய் வாழலாம் எனக் கூறி அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாம். வயோதிபர்களுக்கு பிரச்சினை இல்லை எனக் கூறி அகதி விண்ணப்பமும் நிராகரிக்கப்படுகின்றதாம்.

## தொடர்வது மூன்றாம் கட்ட ஈழப் போரா?
## நோர்வே கூறும் புதிய காரணங்கள்
## நாமும் 'நாடாளுமன்றம்' அமைத்தால் என்ன?
## அடுத்த சுப்பர் ஸ்டார் 'பிரபுதேவாவா'?

எப்படியாவது திருப்பி அனுப்புவது என முடிவு எடுத்துவிட்டால் காரணங்களைக் கண்டுபிடிப்பது ஒரு கடினமான விடயமா என்ன?

நெதர்லாந்தில் 'குர்திஷ்' நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட செய்தியினை கேள்வியுற்றதும், நாமும் இப்படி ஒரு நாடாளுமன்றம் அமைத்தால் என்ன என்றார் நண்பர் ஒருவர் நண்டாரிடம்.

தமது நிலப்பரப்பினை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத மக்களே வெளிநாடுகளில் அரசினை (Gouvernement in Exile) தோற்றுவிப்பதுண்டு. இவ்வகையில் தமது நிலப்பரப்பினை ஆக்கிரமிப்பாளர்களிடம் பறிகொடுத்த 'குர்திஷ்' மக்கள் நெதர்லாந்தின் அவ் அரசினைத் தோற்றுவிக்கும் முகமாக நாடாளுமன்றத்தினை உருவாக்கியுள்ளனர். ஆனால் எமது பிரதேசத்தில் பெரும் பகுதி விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு, மீட்கப்பட்ட பிரதேசங்களில் அரசுக் கட்டுமானம் நடைபெற்று வருகின்றது. இதனால் வெளிநாடுகளில் நாடாளுமன்றம் அமைக்கவேண்டிய தேவை தமிழீழ மக்களுக்கு இல்லை - இவ்வாறு நண்டார் ஒரு குட்டி அரசியல் விளக்கமே நடாத்திவிட்டார்.

1982-ல் என நினைக்கிறேன். வெளிநாடு ஒன்றில் தமிழீழ அரசாங்கத்தினை நிறுவ எடுத்த முயற்சிக்கு விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்தனர். இது தொடர்பாக 'நாடுகடத்தப்பட்ட நிலையில் தமிழீழம்' என்ற பிரசுரத்தையே வெளியிட்டிருந்தனர். இன்று விடுதலைப் புலிகளால் தமிழீழ அரசு, தமிழீழ மண்ணிலேயே உருவாக்கப்பட்டு வருகின்றது.

'குர்திஷ்' நாடாளுமன்ற அமைப்பு நிகழ்வு தொடர்பாக நண்டாரின் மனதில் விழுந்த விடயம் - இந் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திலகர் பேச எழுந்ததும் மிகுந்த வரவேற்பு வழங்கப்பட்டதாம். ஆங்காங்கே கதைத்துக்கொண்டிருந்தவர்கள் கதையினை நிறுத்திவிட்டு மிக உன்னிப்பாக அவதானித்ததுடன், அவரது பேச்சு முடிவடைய பலத்த கரவொலி மண்டபத்தை நிறைத்ததாம்.

தமிழ்நாட்டுத் திரையுலகின் அடுத்த 'சுப்பர் ஸ்டார்' யார் என்ற கேள்வியனை திரை ரசிகர் ஒருவர் நண்டாரிடம் எழுப்பினார்.

'சமூக முன்னேற்றத்திற்கு மிக அவசியமான கேள்வி' என்ற ஒரு பீடிகையுடன் நண்டார் யோசிக்கத் தொடங்க 'பிரபு தேவா' என்ற பதிலுடன் திரை ரசிகர் மறைந்து விட்டார்.

அவர் போன பின்பு அவர் கூறியது காதில் எதிரொலிக்க - ஈழத் தமிழ்த் திரையுலகிற்கு 'சுப்பர் ஸ்டார்'கள் வேண்டாம் - 'சுப்பர்' படங்களே வேணும் என்ற எண்ணமே நண்டாரிடம் எழுந்தது.


ஆர்த்தி


PHOTO SERVICE

16, RUE DE PARADIS,
75010 PARIS.
M°: GARE DE L'EST OU CHATEAU D'EAU
TEL: 42 46 42 07



* உங்கள் அனைத்து வைபவங்களும் சிறந்த முறையில் படம் பிடித்து அல்பத்தில் பெற்றுக் கொள்ளவும்
* உங்கள் புகைப்பட சுருள்களை உயர்தர பேப்பரில் Devalope செய்து 30 நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்
* உங்கள் Camera பற்றி தெரிந்துகொள்ளவோ, பயிற்சி பெறவோ எங்களை நாடுங்கள்

PHOTO COPY SERVICE



கலர் 4.50*
கறுப்பு வெள்ளை 50* Cts
* 100 பிரதிக்கு மேல்

# இலங்கை சமரசப் பேச்சு:

(சென்றவாரத் தொடர்ச்சி...)

* "ரா" அமைப்பின் ஆலோசனைகளை ஏற்றுச் செயல்பட்டதன் விளைவாக இலங்கையில் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் படுதோல்வியை ராஜீவ் சந்திக்க நேர்ந்தது.
* "ரா" திட்டமிட்டு உருவாக்கிய வரதராசப்பெருமாள் அரசு கப்பலேறி இந்தியா ஓடி வர நேர்ந்தது.
* "ரா" உருவாக்கிய தமிழ்த்தேசிய இராணுவம் ஆயுதங்களைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டுச் சரணடைந்தது.
* தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி சிங்களருக்குத் துணைபுரிய சென்ற இந்திய அமைதிப்படையை சிங்கள அரசே வெளியேறும்படி கூறியது.

னைத் தடுக்க முடியவில்லையா?

"ராவ்" பயப்படுவதன் பின்னணி வேறு. சோனியா காந்தியின் அதிருப்திக்கு இரையாகி விடக்கூடாதே என்றுதான் தயங்குகிறார். ராஜீவ் கொலை வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்துவதாக அர்ஜுன்சிங் போன்றவர்கள் காட்டும் குற்றச்சாட்டு அவரைக் கலவரப்படுத்துகிறது. எனவே, ஈழத் தமிழர் பிரச்சனையில் உண்மைகள் தெரிந்தும் அதை உணர மறுக்கிறார். அவரின் இந்தத் தயக்கத்தை "ரா" அமைப்பும் சுப்பிரமணியசாமி போன்ற விடுதலைப் புலி எதிர்பாளர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

சுப்பிரமணியசுவாமி, வாழப்

மட்டுமல்ல தென்னாசியாவில் எந்த நாடும் இந்தியாவின் உண்மையான நண்பனாக இருக்கவில்லை. தென்னாசிய அமைப்பான சார்க் அமைப்பின் எதிர்காலமே கேள்விக் குறியாகிவிட்டது ராஜீவ் கையாண்ட தவறான கொள்கைக்கும் "ரா" உளவமைப்பின் அடாவடிச் செயல்களுமே இதற்குக் காரணமாகும்.

ராஜீவ் கையாண்ட தவறான கொள்கையைக் கைகழுவ பிரதமர் ராவ் இன்னமும் தயங்கினால் இந்தியா முற்றாகத் தனிமைப்பட்டுப் போகும்.

நேருவின் காலத்தில் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் தலைமை இந்தியா வைத் தேடிவந்து அடைந்தது. காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடுகளுக்

ஆனால் அவரது பேரன் ராஜீவ் காலத்தில் தேசிய இனப் போராட்டங்களை இராணுவம் கொண்டு ஒடுக்க முற்படுகின்ற புதிய ஏகாதிபத்திய நாடாக இந்தியா உருவெடுத்து இந்தியாவிற்குள்ளாகவே காஷ்மீர், பஞ்சாப், அசாம், நாகலாந்து, மிசோரம், திரிபுரா, போன்ற பல மாநிலங்களிலே மக்களை ஒடுக்க இந்திய இராணுவம் ஏவி விடப்பட்டுள்ளது. இம்மாநிலங்களில் நடைபெறும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களை பல அமைப்புகள் கண்டனம் செய்துள்ளன. உலக மனித உரிமை மாநாடுகளில் இந்தியா குற்றவாளியாகக் காட்சி தருகிறது.

தமிழீழ மக்களின் உண்மையான தேசிய விடுதலை இயக்க



"பூனை கண்ணை மூடிக் கொள்வதால் உலகம் இருண்டு விடாது". இந்திய அரசு புலிகளை அங்கீகரிக்க மறுப்பதால் தமிழீழம் உருவாவது தடைப்படாது.

செஞ்சீனம் உருவாவதைத்

# இந்திய அரசின் நிலைப்பாடு என்ன?

சின்னஞ்சிறு நாடான இலங்கையிலிருந்து மிகப்பெரிய அவமானத்துடன் இந்தியாவை வெளியேற வைத்ததுதான் "ரா" அமைப்பின் மகத்தான சாதனையாகும்.

பிரதமர் நரசிம்ம ராவ் காலத்திலும் "ரா" அமைப்பு தனது சீரழிவு வேலைகளைத் தொடருகிறது.

**பழ. நெடுமாறன்**

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சர்வதேச பயங்கரவாத இயக்கமாகச் சித்தரித்துக் காட்ட "ரா" துடிக்கிறது. அப்போது தான் கனடா, நோர்வே, நெதர்லாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இப்பிரச்சனையில் தலையிடாமல் ஒதுங்கும். புலிகள் தனிமைப்பட்டுப் போவார்கள் என "ரா" கருதுகிறது.

தளபதி கிட்டுவின் கப்பலை நடுக்கடலில் வழிமறித்து அவரை உயிரோடு பிடித்து வந்து இந்தியாவில் பயங்கரவாதச் செயல்கள் புரியவந்ததாகக் குற்றம் சாட்டி விசாரணை நாடகம் நடத்தி உலகநாடுகளை ஏமாற்றும் நோக்குடன் "ரா" செயல்பட்டது. ஆனால் இந்த சூழ்ச்சியைத்தளபதி கிட்டுவும் அவரது வீரத் தோழர்களும் தங்களுடைய தியாக மரணத்தினால் முறியடித்தார்கள். உலகமெங்கும் உள்ள தமிழர்களின் உள்ளங்களில் கிட்டுவின் மரணம் என்றும் ஆறாத நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் நிலையை "ரா" ஏற்படுத்திவிட்டது.

பிரதமராக இருக்கக் கூடிய நரசிம்ம ராவ் இதையெல்லாம் அறிய மாட்டாரா? 1983 ஆம் ஆண்டில் இந்திராவின் அமைச்சரவையில் வெளிநாட்டு அமைச்சராக நரசிம்ம ராவ் இருந்த காலம் முதல் இன்று வரை இலங்கைப் பிரச்சனை பற்றிய சகல உண்மைகளையும் அவர் அறிவார். ஆனாலும் அவரால் "ரா" செயற்பாடுக

பாடி ராமமூர்த்தி, எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், குமரி அனந்தன், போன்றவர்கள் புலிகளுக்கெதிராக அவ்வப்போது கொடுக்கும் அறிக்கைகள் உண்மையில் அவர்கள் எழுதியவை அல்ல "ரா" தயாரிக்கும் அறிக்கைகள் அவர்கள்பெயரில் வெளியிடப்படுகிறது.

தங்கள் விற்பனைக்குப் பரபரப்புச் செய்திகளை உருவாக்கி வெளியிடுவதையே நம்பியிருக்கும் பெரும்பாலான தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் இவர்கள் அறிக்கைகள் பொய்யானவை எனத் தெரிந்தாலும் வெளியிடத் தவறுவதில்லை ஆனால் தமிழக மக்கள் இந்த அறிக்கைகளை நம்புவதில்லை.

இந்து ராம், துக்ளக் சோ, தினமணிமாலன், போன்றவர்கள் தமிழின உணர்வுக்கு எதிரிகள். எனவே இவர்கள் தமிழின உணர்வுக்கு ஊற்றாக விளங்கும் விடுதலைப் புலிகளை கடுமையாக எதிர்த்தெழுதுகிறார்கள் இவர்களின் உள்நோக்கம் மக்களுக்குப் புரியாமலில்லை.

பிற மாநிலங்களில் வெளியாகும் பத்திரிகைகளும், டில்லிப் பத்திரிகைகளும், புலிகளைப் பற்றி ஓரளவு சரியான செய்திகளையே வெளியிட்டு வருகின்றன. பிறமொழிப் பத்திரிகைகள் உண்மைகளைத் திரித்துக் கூறுவதில்லை: தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் உண்மைகளையே கூறுவதில்லை.

## பொலிஸ் வேலை


தென்னாசியாவின் பொலீஸ்காரனாக இந்தியா விளங்க வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த றீகன் ஒருமுறை கூறினாராம். உலகப் பொலீஸ்காரனாக தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா இவ்வாறு கூறியதும் பிரதமராக இருந்த ராஜீவிற்கு உச்சி குளிர்ந்து விட்டது. தென்னாசியாவின் பொலிஸ்காரனாக தன்னைத்தானே கருதிக் கொண்டு செயற்பட்டார். இலங்கையில் அவருக்கு கௌரவ பங்கம் ஏற்பட்டது இலங்கை

கும் விடுபட போராடும் நாடுகளுக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியா திகழ்ந்தது. அடிமைத் தளையை அறுத்தெறிய போராடிய நாடுகளுக்குத் துணையாக இந்தியா குரல் கொடுத்து. உலக அரங்குகளில் ஏகாதிபத்திய நாடுகளுக்கு எதிராக இந்தியா முழங்கியது.

மாக விடுதலைப் புலிகள் இயக்கமும், தேசியத் தலைவராக பிரபாகரனும் விளங்குவதை உலக நாடுகள் அங்கீகரிக்கத் தொடங்கிவிட்டன. தமிழீழம் உருவாகப்போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை. இந்த யதார்த்த பூர்வமான உண்மையை இந்தியா உணரவேண்டும்.

**சுப்பிரமணியசுவாமி, வாழப்பாடி ராமமூர்த்தி, எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், குமரி அனந்தன் போன்றவர்கள் புலிகளுக்கெதிராக அவ்வப்போது கொடுக்கும் அறிக்கைகள் உண்மையில் அவர்கள் எழுதியவை அல்ல "ரா" தயாரிக்கும் அறிக்கைகள் அவர்கள்பெயரில் வெளியிடப்படுகிறது.**

தடுக்க அமெரிக்க வல்லரசு எல்லாவகையிலும் முயன்றது. சியாங்கே ஷேக்கின் அரசுக்கு கப்பல் கப்பலாக ஆயுதங்களையும் நிதியையும் வாரி வாரி வழங்கியது. அமெரிக்காவின் கடும் எதிர்ப்பையும் மீறி சீனாவில் மாவோ சேதுங் மகத்தான வெற்றி பெற்றார். அதற்குப் பின்னரும் அதை அங்கீகரிக்க மறுத்து அமெரிக்கா பிடிவாதம் செய்தது. ஆனால் நீண்ட காலம் இப்பிடிவாதம் நிலைத்து நிற்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதியான நிக்சனே சீனாவிற்குப் பறந்துபோய் மாவோ சேதுங்குடன் கை குலுக்க வேண்டிய அவசியம் உருவானது. உலக சரித்திரம் உணர்த்தும் இந்தப்பாடத்தை எவ்வளவு விரைவாக இந்தியா உணர்கிறதோ அவ்வளவிற்கு நல்லது.




கட்டவுட் கலாச்சாரம் தொடங்கி ரி.வி. கலாச்சாரம் வரை...

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பெயரில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள ஜெ.ஜெ. தொலைக் காட்சி நிறுவனம் பற்றி கதிரவனில் வெளிவந்துள்ள காட்டூன்.

### தமிழகத்திலிருந்து புங்குழலி

# தமிழக அரசியலில் திடுக்கிடும் திருப்பங்கள்

தமிழக அரசியலில் திரை உலக செல்வாக்கு எந்த அளவுக்கு உண்டு என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனாலும் திரைப்படங்களில் வரும் திடுக்கிடும் திருப்பங்கள் கொண்ட நிகழ்ச்சிகள் தமிழக அரசியலிலும் நடைபெறத் தொடங்கியிருப்பது சுவையாக உள்ளது.



சுப்ரமணியசாமி

முதலமைச்சர் ஜெயலலிதா மீது வழக்குத் தொடர ஆளுநர் சென்னாரெட்டி அனுமதித்து விட்டார். இதன் மூலம் மாபெரும் அரசியல் சட்டச் சிக்கல் உருவாகியுள்ளது.

பல காரணங்களால் ஜெயலலிதா மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள காத்திருந்த சென்னாரெட்டி சரியான சமயத்தில் பழிதீர்த்துக்கொண்டிருக்கிறார்.

அரசியல் தரகரான சுப்ரமணியசாமியும் தனது நீண்ட கால கோபத்தைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்.

சந்தர்ப்பம் நோக்கிக் காத்திருந்த தி. மு. க. தலைவர் கருணாநிதியும் 'ஜெயலலிதா பதவி விலக வேண்டும்' என்ற முழக்கத்துடன் போராட்டம் நடத்த அணி திரட்டி களத்தில் குதித்துவிட்டார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான ஜெயலலிதா உடனே பதவி விலகவேண்டும் எனக் கூறும் மேற்கண்ட மூவரின் யோக்கியதை என்ன?

தேர்தலில் ஊழல்புரிந்த குற்றத்திற்காக 6 ஆண்டு காலம் எந்தத் தேர்தலிலும் கலந்து கொள்ளக்கூடாது என உயர் நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டவர் சென்னாரெட்டி.

கருணாநிதியின் ஊழல்களை விசாரித்த சர்க்காரியா கமிஷன் பல குற்றச்சாட்டுக் களில் உண்மை உண்டு எனத் தீர்ப்பு வழங்கிற்று.

பணத்திற்காகவும், பதவிக்காகவும் யாருக்காக வேண்டுமானாலும் எந்த வேலை வேண்டுமானாலும் செய்து கொடுக்கும் அரசியல் தரகர் சுப்ரமணியசாமி.

இந்த மூவரும் ஊழல் ஒழிப்பு அவதாரம் எடுத்திருப்பதைப் பார்த்து மக்கள் நகைக்கிறார்கள். இந்த மூவரும் இணைந்து செயல்படுவது, ஜெயலலிதா மீது மக்களுக்கு அனுதாபத்தை ஏற்படுத்தினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வில்லன் நடிகர் கதாநாயகனாக மாறி நடிப்பது தமிழக திரையுலகில் மட்டுமல்ல. அரசியலிலும்தான். இது என்ன புதிர் என்று கேட்காதீர்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக தி. மு. க. ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டதற்கான முழுப் பெருமையையும் தனக்குத்



ஜெயலலிதா

தானே சூட்டிக்கொண்டவர் இதே சுப்ரமணியசாமிதான். இந்த வீர தீர பராக்கிரம செயல் புரிந்ததற்காக சென்னையில் மாபெரும் பாராட்டுக் கூட்டம் நடத்தி சுப்ரமணியசாமிக்கு வெள்ளிவாள் பரிசளித்து மகிழ்ந்தது யார் என்று நினைக்கிறீர்கள்? சாட்சாத் ஜெயலலிதாவேதான். அப்போது அவர் கதாநாயகன். இப்போது வில்லன்.

பதவி இழந்த கருணாநிதி சுப்ரமணியசாமி மீது கடுங் கோபம் கொண்டிருந்தார்.



கருணாநிதி

தனது முரசொலி நாளிதழில்:

'அரண்மனை நாயே
அடக்கடா வாயை'

என எழுதினார். அப்போது சுப்பிரமணியசாமி அவருக்கு வில்லன். இப்போது கதாநாயகன்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அரசியலில் இவை எல்லாம் சர்வசாதாரண நடவடிக்கைகளாகிவிட்டன. ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதும், வழக்குகள் தொடுக்கப்பட்டு ஆண்டுக் கணக்கில் இழுக்கப்பட்டு இறுதியில் ஒன்றுமில்லாமல் போவதும் வழமையே.

ஆனாலும் இப்போது ஆளுநர் சென்னாரெட்டி எடுத்துள்ள இந்த நடவடிக்கை ஒரு தவறான முன்னுதாரணத்தை வழி வகுத்துவிட்டது. இனி எதிர்காலத்தில் மாநில முதல்வர்கள் தலை மீது ஆளுநர்கள் கத்திகள் தொங்கிக்கொண்டே இருக்கும் நிலையை உருவாக்கிவிடும்.

இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த ஜயில்சிங் அவர்களை பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி எப்படியெல்லாம் அவமதித்தார் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனாலும் போபர்சு ஊழல் குற்றச்சாட்டை யொட்டி ராஜீவ் மீது நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு ஜயில்சிங்கை வலியுறுத்திய போது இக் கோரிக்கையை ஏற்க அவர் மறுத்துவிட்டார். பிரதமர் மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்த தான் விரும்பவில்லை என்று அவர் கூறிவிட்டார்.

ஆளுநராயிருக்கும் சென்னாரெட்டியின் இந்த நடவடிக்கையை ஆந்திர முதல்வர் என். டி. இராமராவ், கர்நாடக முதல்வர் தேவகௌடா, பீகார் முதல்வர் லல்லு பிரசாத், பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வாஜ்பாய் போன்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் கண்டித்துள்ளது கருணாநிதியின் கோபத்தைக் கிளறியுள்ளது.

வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் ஒருவன் துரும்பு அகப்பட்டால் கூட அதைப் பிடித்துக் கொண்டு கரையேறத் துடிப்பதைப் போல சுப்ரமணியசாமி என்னும் துரும்பைப் பிடித்துக் கொண்டு கரையேற கருணாநிதி துடிக்கிறார். ★★



ஜெயலலிதா தொடர்ந்த வழக்கு விசாரணைக்காக சுப்பிரமணியசுவாமி கோட்டுக்குச் சென்றபோது...

## அழகிப் போட்டிக்கு தடை வேண்டும்

### டில்லியில் பெண்கள் ஊர்வலம்

ஆடை அலங்கார அணிவகுப்பு மற்றும் அழகிப் போட்டிகள் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவற்றிற்குத் தடைவிதிக்கக் கோரியும், டெல்லியில் பல்வேறு பெண்கள் நல அமைப்புகள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

டெல்லியில் சாந்தினி சவுக் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு ராஜ்கட் காந்தி சமாதி வரை ஊர்வலமாகச் சென்று, அங்கு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துணை மந்திரி செல்ஜா வீணா வர்மா எம்.பி. ஆகியோரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

## தடாவை நீக்கப் போராட்டம்

சிறுபான்மையினரை ஒடுக்கப் பயன்படுத்தும் தடா சட்டத்தை நீக்கக் கோரி விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்று மக்கள் சிவில் உரிமைக் கழகம் சென்னையில் நடத்திய மாநாட்டில் அறிவித்துள்ளது.

மத்திய அரசு 1985ம் ஆண்டு பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் என்ற தடாச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தது. அது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. இச் சட்டத்தின் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்கள்.

தமிழகத்தில் முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன், ' கவிஞர் பெரும் சித்திரனார், பேராசிரியர் நெடுஞ்செழியன் உட்பட 250 இற்கு மேற்பட்டவர்கள் தடா சட்டத்தின் மூலம் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளனர். இதே வேளை, தடாச் சட்டத்தை புதுப்பிக்கும் மசோதாவை மே மாதம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப் போவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனைக் கண்டித்து மக்கள் உரிமைக் கழகம் கடந்த ஏப்ரல் 10 ம் திகதி தொடக்கம் 15 ம் திகதி வரை தடா எதிர்ப்பு வாரமாக அனுஷ்டித்தது. அத்துடன் கடந்த 13 ம் திகதி தடா எதிர்ப்பு நாளாகவும் அறிவித்து மாநாடு ஒன்றினையும் நடத்தியுள்ளது.

தடாவுக்கு எதிராக அணிதிரளுமாறு அனைத்து மக்களையும் மாநாடு கேட்டுள்ளதுடன், தொடர்ந்து போராட்டத்துக்கு தயாராகுமாறும் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## தொலைக்காட்சியில் 'சத்தசபை' சோ வெளியேறினார்

கோல்டன் ஈகிள் கம்யூனிக் கேஷன (ஜி. ஈ. சி) என்ற பெயரில் துக்ளக் பத்திரிகையின் ஆசிரியர் 'சோ' மற்றும் கங்கை அமரன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்புக்களுடன் தொழிலதிபர் இராமசாமி உடையாரால் கோலாகலமாகத் தொடங்கப் பட்டது ஒரு தமிழ் சாட்டிலைட் சானல்.

இதில் அரசியல் சம்பந்தப் பட்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தயாரிக்கும் பொறுப்பு 'சோ'விடம் விடப்பட்டது. அவரும் அவருடைய பாணியில் ஆளுங்கட்சியை கடுமையாக விமர்சித்து நிகழ்ச்சிகளைத் தயாரித்தார். அதில் ஒன்று 'சத்தசபை'. தமிழக சட்டசபையை கேலி செய்து தயாரிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சியில் ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வது, எதிர்க்கட்சியினர் எதற்கெடுத்தாலும் வெளிநடப்பு செய்வது, சபாநாயகரின் ஒருதலைப்பட்ச நடவடிக்கை, சபையில் எதிர்க்கட்சியினர் இல்லாமலேயே தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிப்பது போன்ற இன்றைய சூழ்நிலையை அப்பட்டமாக சித்தரிக்கும் பல காட்சிகள் காட்டப்பட்டன.



சோ


இந்நிகழ்ச்சி நேயர்களின் அமோக ஆதரவினைப் பெற்றது. விளைவு 'சோ' நிர்வாகத்தினரால் கண்டிக்கப்பட்டார். 'பிரச்சினைகளைக் கிளப்பாத நிகழ்ச்சிகளை' தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

அவ்வளவுதான் வந்ததே கோபம் சோவுக்கு! நீயும் வேண்டாம் உன் வேலையும் வேண்டாம்! என அந்த நிறுவனத்தை விட்டே விலகிவிட்டார்.

தமிழ்நாட்டில் நடக்கும் அரசியல் நிகழ்ச்சிகளை விமர்சிக்கக் கூட ஒருவருக்கு உரிமை இல்லை என்பதைத்தான் இந் நிகழ்ச்சி காட்டுகிறது. அதையும் மீறி விமர்சித்தால் அராஜகம் தான்.

தனிமனித சுதந்திரத்தைப் பற்றி வாய் கிழிய பேசும் இந்த நாளில் 'சோ'வைப் போன்ற ஒரு பிதவாத பத்திரிகையாளராலேயே இதனை எதிர்த்துப் போராடமுடியாமல் பின் வாங்க நேரிட்டது என்றால் தமிழ்நாட்டில் ஒரு சாதாரண குடிமகனின் நிலை என்ன? அவனது கருத்துச் சுதந்திரம் தான் எந்த அளவு?

# புகலிட வாழ்வின் முரண்பாடுகள்



**"ஊர் இப்போ அடியோடு மாறிப் போச்சு. சாதி முற்று முழுதா இல்லையெண்டு நான் சொல்ல வரயில்லை. சாதி வெறியும், சாதி அடிமைத்தனமும் ஒழிஞ்சு போச்சு.**

கலாச்சாரத் தேடல் என்ற போர்வையின் கீழ், மக்களின் மத நம்பிக்கையைப் பயன்படுத்தி, புகலிட நாடுகளில் வசிக்கும் தமிழர்களை பிரிக்க நடக்கும் சதிமுயற்சிகள் தொடர்பாக நான் இத் தொடரில் எழுதியதை படித்த பல நண்பர்கள் என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவற்றில் ஜேர்மனியில் வசிக்கும் இராசதுரை என்ற நண்பர் தெரிவித்த கருத்தும் அவரது கதையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

தென்மராட்சிப் பகுதியில் சாதிக் கலவரங்களுக்குப் பெயர் பெற்ற ஒரு கிராமத்தில், இந்து அடிப்படை வாதிகளால் ஒதுக்கி வைக்கப்பட்ட 'பறையர்' குலத்தில் பிறந்த அவர் தனது 15வது வயது வரை தனது தந்தையுடன் சோர்ந்து சாவுச் சடங்குகள், மற்றும் கோவில், வேள்விகளுக்குப் பறை மேளம் அடிக்கச் சென்று வந்தார். அவர்களுக்கென்று சொந்த நிலம் இடையாது. அவர்கள் ஊரில் பிரசித்தி பெற்ற கோவிலுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் (ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள நிலம்) தான் அவர்கள் மண்வீடு கட்டி குடியிருந்தார்கள். அதேபோல் இந்தியாவிலுள்ள சிதம்பரம் கோவிலுக்குச் சாசனம் செய்யப்பட்ட தோட்ட நிலத்தில் பரம்பரை பரம்பரையாக வாரத்திற்கு (வாரம் என்பது உழைப்பின் ஒரு பகுதியை நில உரிமையாளர்களுக்குக் கொடுப்பது. குத்தகை என்றும் சொல்லலாம். குத்தகைக்கு அளவு, பெறுமதி உண்டு. 'வாரத்திற்கு' உடமையாளனின் விருப்பு வெறுப்புக்கேற்றளவு மாறுபடும்) விவசாயமும் செய்து வந்தார்கள்.

1970ம் ஆண்டு அந்தச் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அடித்து விளையாடிய பந்து அருகிலுள்ள கோவிலுக்குள் சென்று விட்டது. அப்போது 15 வயது சிறுவனாக இருந்த இராஜதுரை- 'யாரும் பார்க்க மாட்டார்கள்' என்ற தைரியத்தில் கோவிலுக்குள் சென்று பந்தை எடுத்து வந்துவிட்டான். சமய ஆசாரத்திலும், சாதி வெறியிலும் ஊறிப் போயிருந்த அந்த ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள் சிலர் இதைப் பார்த்துவிட்டனர். பிரச்சினை பெரிதாகிவிட்டது 'ஒரு சிறுவன் தெரியாமல் செய்த குற்றம்' என்ற அடிப்படையில் கூட அந்தப் பிரச்சினையைப் பார்க்காமல், சாதி குறைஞ்சவன் கோவிலுக்குள் போய்விட்டான் என்று பெரிது படுத்தி, இராஜதுரையைக் கட்டி வைத்து பிரம்பாலடித் தார்கள்.

அடி வாங்கிய இராஜதுரை அலறிய அலறல் - அவர்களது சமூகத்தை ஒரு உலுக்கு உலுக்கி அவர்களுக்கு ரோசம் வரவைத்தது. அவர்கள் ஒன்று திரண்டு, இனி எவரது இழவு வீட்டிற்கும், எந்த ஆலய விழாக்களுக்கும் பறைமேளம் அடிக்க மாட்டோம் எனப் போர்க்குரல் கொடுத்தார்கள். இந்தச் சம்பவம் பற்றி இன்று 40 வயதாகும் இராஜதுரை நினைவு கூரும்போது...

"எனக்கு முதல் பயமாக இருந்தது. நான் கோவிலுக்குள் போனது பிழை என்டுதான் நினைச்சேன். ஆனால் கோயில் வாசலில அவர்கள் என்னைக் கட்டி வைத்து அடிக்கும்போது, அந்தக் கடவுள் பார்த்துக்கொண்டுதான் இருந்தார். எனது சாதிப் பேரோடு நாயைச் சேர்த்து- இனி கோயிலுக்கை போவியா? என்று கேட்டுக் கேட்டு அவர்

## அழிந்து போகின்ற சாதியம்

கள் அடிக்க அடிக்க எனக்குள் ஒரு ஆவேசம் வந்தது. 'நாங்கள் கோயிலுக்கைபோகக் கூடாது. நாங்கள் எப்பவும் மற்றவர்களுக்கு அடங்கி இருக்கவேணும் என்டு காலாகாலமாக இருந்து வந்த சம்பிரதாயத்தை உடைக்க வேணும்' என்ற வெறி எனக்குள் ஏற்பட்டது."

"நாங்கள் 2 வருசம் எதிர்த்து நின்டம். அடிதடி, வெட்டுக் குத்து என்று அவர்களுக்கு நாங்களும் சளைக்கவில்லை. இந்த இரண்டு வருசத்தில் அவர்கள் எங்களுக்குச் செய்த கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. எங்களது தோட்டத்தில் வெட்டுவதற்கு தயாராக இருந்த புகையிலைக் கன்டுகளுக்கு, இலந்தை முள்ளைப் போட்டு இழுத்து நாசப் படுத்தினார்கள். எங்கடை வீடுகளுக்கு எல்லாம் நெருப்பு வைத்தார்கள். நாங்கள் தண்ணி அள்ளிக் குடிக்கிற துரவுகளுக்குள்ள மலத்தைக் கொண்டு வந்து போட்டார்கள். அந்த இரண்டு வருசத்திலை நாங்கள் பட்ட கஷ்டம் சொல்லி மாளாது."

"படிப்பும் வசதியும் இல்லாத எங்களால் எத்தினை நாளைக்குத் தாக்குப் பிடிக்க முடியும்? அவர்கள், வறுமையையும், எங்கடை ஆக்களின்ரை அறியாமையையும் பயன்படுத்தி - எங்களுக்குள்ளே கொஞ்ச ஆக்களை தங்கடை பக்கம் இழுத்து எங்களைப் பிரிச்சு எங்கடை எதிர்ப்பை அடக்கிப் போட்டாங்கள்." என்றார்.

இராசதுரையின் குடும்பம்- அந்த ஊரில் தொடர்ந்து இருந்து - அடிமைச் சேவகம் செய்ய விரும்பாமல், 1973ல் முத்தையன் கட்டுக்குப் போய் விவசாயம் செய்தது. 1978 வரை அங்கே இருந்து ஓரளவு கைப்பொருள் தேடிய பிறகு JR இன் வருகையோடு விவசாயம் நலிந்துபோக, தனது மகளுக்கு அந்த நிலத்தை சீதனமாகக் கொடுத்துவிட்டு, இராசதுரையின் தந்தை மீண்டும் தென்மராட்சிக்கே வந்து, ஒடுக்கப்பட்ட இன்னொரு சமூகத்தினர் இருந்த பகுதியில் காணி வாங்கி நிரந்தரமாகக் குடியேறி விட்டார்.

1979ல் அரபு நாடுகளுக்கு வேலைக்கு ஆட்கள் போய்க் கொண்டிருந்த நேரம். இராசதுரையின் தந்தை, இவரையும் பாஹ்ரினுக்குப் போகும்படி வற்புறுத்தினார். ஆனால் இராசதுரைக்கு அதில் நாட்டம் இல்லை. தங்களை அவமானப்படுத்திய சாதிய சமூகத்தையும், சாதிய வெறியர்களையும் பழிவாங்க வேண்டும் என்ற உணர்வே அவருக்கிருந்தது. ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டுமென்ற அவாவோடு அதில் சம்பந்தப் பட்டவர்களைத் தேடித் திரிந்தார்.

1981 சாதி ஒழிப்பு, சமத்துவமான சமூகம், சமதர்ம தமிழீழம் என்றெல்லாம் முழங்கிக் கொண்டிருந்த ஒரு அமைப்பின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. சோத்துப் பார்சல் வாங்குவதில் பெயர் பெற்ற அந்த அமைப்பு, ஒடுக்கப்பட்ட மக்களிடம் வாங்கிய பார்சல்களுக்கு அவற்றை வேறுபடுத்துவதற்காக நூல் கட்டி, அதை ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்த இளைஞர்களுக்கே கொடுத்த துரோகத்தனத்தைப் பார்த்து மனம் வெறுத்து, 1985ல் அதிலிருந்து வெளியேறி ஜேர்மனிக்கு வந்தார்.

வந்த புதிதில், டென்மார்க் எல்லைக்கு சமீபமாக உள்ள ஒரு பெருநகரத்தில் அவர் தங்கவைக்கப்பட்டார். அவர் வரும்போதே மனைவியையும், தனது 8 வயதும், 7 வயதும் நிரம்பிய ஆண், பெண் குழந்தைகளையும் அழைத்து வந்திருந்தார். அந்த நகரத்தில அப்போது இருபதுக்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் இருந்தன. எல்லாமே குடாநாட்டைச் சார்ந்தவைதான். ஒரு வருடம் இவர்களுடன் எல்லோரும் மிக அந்நியோன்னியமாகப் பழகினார்கள். இவர்களது குழந்தைகளும், அந்தக் குடும்பங்களின் குழந்தைகளும் நட்பு வைத்துக்கொண்டார்கள். சேர்ந்து விளையாடினார்கள். சேர்ந்து பள்ளிக்கூடம் போனார்கள்.

ஒரு நாள் தமிழர் என்ற அடிப்படையில் நடந்த பொங்கல் விழாவின்போது எல்லோரும் ஒரே இடத்தில் கூடியிருந்த நேரத்தில் ஒவ்வொருவருடைய ஊர், தொழில், பற்றிய பேச்சு வந்த போது, இராசதுரை தனது தொழிலைப் பற்றியும், சாதியைப் பற்றியும், தனக்கு நேர்ந்த அவமானத்தைப் பற்றியும் எதனையும் மறைத்து வேசம் போடாமல் பகிரங்கமாகச் சொன்னார்.

ஐரோப்பாவிற்கு வந்திருக்கும் தம்மவர்கள், இவ் ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்டு இங்கே வந்திருப்பவர்கள். எமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களும், ஐரோப்பிய சமூக வாழ்வும், எம்மிடமுள்ள பிற்போக்குத் தனங்களை மாற்றியிருக்கும் என்ற நம்பிக்கையில்தான் அவர் அதைச் சொன்னார்; ஏமாந்தும் போய்விட்டார். தம்மவர்கள் ஒவ்வொருவராக அவரைக் காய்வெட்டத் தொடங்கி விட்டார்கள். ஒரு வாரத்திலேயே எல்லாக் குடும்பங்களும் அவருடன் பழகுவதை நிறுத்திவிட்டார்கள். இவரே வலிய வீடுக்கு வருகிறோம் என்று டெலிபோன் செய்தால் கூட, நாங்கள் வீட்டில் நிற்க மாட்டோம், நேரமில்லை என்ற பதில் வந்தது. முதலில் இராசதுரைக்கு ஒன்றும் புரியவில்லை.

ஒருநாள் அவரது பிள்ளைகள் சொல்லித்தான் அவர்கள் 'சாதி' பார்க்கிறார்கள் என்று புரிந்தது. அதை அவரே சொல்கிறார்.

"அப்பா, எங்களை தமிழாக்கள் தங்கடை வீட்டை வரவேண்டாமெண்டு சொல்லுகினம். அவையின்ரை பிள்ளையள் எங்களோடை விளையாட மாட்டினமாம். நாங்கள் குறைஞ்ச சாதியாம். சாதி என்டால் என்னப்பா? என்று எனது பிள்ளைகள் என்னைக் கேட்டபோது... நான் அதிர்ந்து போய்விட்டேன். சாதி வெறியர்கள் ஊரில் என்னைக் கட்டிவைத்து அடித்த அடியைவிட இது எனக்கு அதிக வலியைத் தந்தது. விமானமேற்றி, ஐரோப்பாவிற்கு சாதியைக் கொண்டுவந்து, பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைக் கலக்கும் இவர்களை துப்பாக்கி ஒன்று வாங்கி சுட்டுத்தள்ளிவிட்டு சிறைக்குப் போகலாமா என்றுகூட நான் நினைத்தேன். எனக்கு குடும்பம் ஒன்று இல்லாதிருந்தால் அப்படிச் செய்திருப்பேன். அன்றைக்கு அவ்வளவு ஒரு ஆத்திரம் ஆவேசம் எனக்கு வந்தது."

"அன்றே நான் தீர்மானித்தேன், இனி தமிழ் - தமிழர் தொடர்பு ஒன்றே நமக்கு வேண்டாம் என்று எனது பிள்ளைகளுக்கு டொச்தான் எங்கடை மொழி, டொச்சுக்காரர்தான் எங்கடை ஆக்கள். நீங்கள் அந்த மொழியைப் படியுங்கோ, அவையோடு பழகி அவையை உங்கடை சிநேகிதர்களாக்கிக் கொள்ளுங்கள் என்று எனது பிள்ளைகளை அறிவுறுத்தினேன்."

"சாதிமான்கள் புறக்கணித்ததால், இன்றைக்கு எனது பிள்ளைகள் ஒன்றும் படிப்பில் குறைந்துபோய் விடவில்லை. மகன் பல்கலைக்கழகம் தெரிவாகியிருக்கிறான். மகள், அடுத்த வருடம் பல்கலைக்கழகம் போவாள். அவர்களுக்கு டொச், ஆங்கிலம் இரண்டும் தண்ணிபட்டபாடு. தமிழ்தான் தெரியாது. போன வருடம் ஊருக்குப் போகும்வரை தமிழை நாங்கள் புறக்கணித்ததால், சாதிமான்களை புறக்கணித்ததாக நினைத்துக் கொண்டிருந்தேன்."

"ஊர் இப்போ அடியோடு மாறிப்போச்சு. சாதி முற்று முழுதா இல்லையெண்டு நான் சொல்ல வரயில்லை. சாதி வெறியும், சாதி அடிமைத்தனமும் ஒழிஞ்சு போச்சு. எங்கடை ஊரிலை உள்ள இளைக்க சங்கத்து என்ரை அப்பா தலைவர். முந்தி பறை சின்னான் என்று ஒதுக்கி வைச்சவை, இண்டைக்கு அவரை சின்னான் அண்ணை என்டு தான் கூப்பிடுகினம். என்னை முந்தி கட்டி வைச்சு அடிச்ச ஒருவரை இப்ப கேட்டன்- இப்பவும் சாதி பாக்கிறியளோ? என்டு; அவர் சொன்னார், 'ஐயோ தம்பி அதெல்லாம் அந்தக் காலம். இப்ப, எப்ப பொம்பர் வந்து தலையிலை குண்டு போடும். எப்ப ஷெல் வந்து வெடிச்சு உயிர் போகும் என்டு பயந்து கொண்டுதான் நாங்கள் இஞ்சை வாழ்க்கை நடத்திறம். ஷெல்லும் குண்டும், உயிரைப் பறிக்கிற போது சாதி அந்தஸ்த்து தராதரம் பார்க்காது ராசா. இது அனுபவம் எங்களுக்கு கற்றுத் தந்த பாடம்' என்றார்.

நான் இப்பதான் உணருறன். ஒரு சில சாதி வெறியர்களின் மேல் உள்ள கோபத்தில் என்ரை பிள்ளையளுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்காமல் விட்டது பிழை என்டு. இதுகூட எங்கடை பிள்ளையள் மொழிப்பற்று, நாட்டுப் பற்றில்லாமல், வளர்க்கப்பட்டடும் எண்டு, சாதி என்ட பேரிலை எங்கடை இனத்திற்கு எதிரானவை செய்யிற வழி என்டுதான் நான் நினைக்கிறேன்." என்றார்.

**நக்கீரன்**

பிரதி வெள்ளி தோறும் பிற்பகல் 3.00 மணிக்கு

"ஈழநாதம்"

FM 104.5 MHZ

அலைவரிசையில்

சூரிச், சுக், லுசேர்ண், அரோ, சபவுசன்

ஆகிய கன்டோன்களில்

சிறுகதை

# அகதி ஆகிட...

சு. கருணாநிதி

யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது 'சுபா கதவைத் திறவும்!' கதவுக்குப் பக்கத்தில் நின்ற சுபா அறையின் உள் நோக்கி நகர்ந்தாள்.

'சுபா இப்படி எல்லாத்துக்கும் பயந்து சாகக்கூடாது.' வயதில் கூடியவளும் வாயாடியுமான வேணி போய்க் கதவைத் திறந்தாள்.

முறுவலித்து நின்றான் ஆனந்தன்.

'நான் சாப்பிடப் போறன், உங்களுக்கும் நாலு பார்சல் எடுத்துக்கொண்டு வாறன்.'

சுகுணா, வதனா, வேணி வியப்போடு ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். சுபா சட்டை செய்யாதவளாய் ரி.வியில் இலயித்திருந்தாள். மனதிறகுள் இருந்த பதில்களை வெளிவரவிடாமல் வெட்கம், பயம், கௌரவம் தடுத்தன.

'மனேச்சர் சாப்பாடு எடுக்கப் போயிட்டார் நாங்கள் சாப்பிடறம் தாங்ஸ்.'

'ஏன், பொய் சொல்லுறீங்க.. சலீம் நானா எல்லாம் சொல்லிப்போட்டார். மத்தியானம் ரெண்டு பார்சல் எடுத்து நாலு பேரும் சாப்பிட்டனீங்களாம்.. ஏஜன்சி ஏமாத்திப் போட்டுப் போயிட்டானாம். மனிதாபிமானத்தில் கேட்கிறேன் என்ன பார்சல் எடுத்துக் கொண்டு வர.. பயப்பிடாமல் சொல்லுங்க.'

'இனிப் பயப்பிடுறதுக்கு என்ன இருக்கு இவ்வளவு தூரத்துக்கு வந்து இவ்வளவு அவலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறம்'. சுகுணா சொன்னாள்

'சரி இண்டைக்கு என்ரை விருப்பத்துக்கு சாப்பிடுங்க, நாலு கொத்துரொட்டிப் பார்சல் எடுத்துக் கொண்டு வாறன்.' ஆனந்தன் திரும்பினான். கதவை மூடினாள் வேணி.

'வேணி இண்டைக்கு நான் மச்சம் சாப்பிடுறதில்லை எண்டு சொல்லியிருக்கலாம்தானே.' சுகுணா பரிந்துரைத்தாள்.

இவவுக்கு கண்டறியாத விரதம் இஞ்சை வந்தும்' வதனா கண்டிப்போடு சொன்னாள்.

'ஏன்டி நீ சொல்லியிருக்கலாமல்லா... வெக்கப்பட்டியா ? உங்கட ஊர்தானே ஆனந்தன், உன்னாலைதான் எங்களுக்குப் பழக்கம் வந்தது.' சுகுணாவை ஏசி விட்டு வேணி வெளியே போய் 'ஆனந்தன்.. ஒரு மரக்கறிப் பார்சல்'.

'வேணியக்கா உங்களுக்குத் தேவையில்லாத வேல இது. என்ன 'கேஸ்' எண்டு தெரியாது? தொடர்ந்து வாங்கித் தருவான் பிறகு தன்ரை றூமுக்கு வரச்சொல்லுவான்..'

ஆளைப் பார்க்க அப்படியான குணம் உள்ளவனாய்த் தெரியவில்லை, சுகுணாவின்ரை ஊர்ப் பொடியன்தானே.'

'சுகுணா பத்து வருடத்துக்கு முத்தித்தான் ஆளைப் பார்த்தாள் இப்ப எப்படி இருப்பான் எண்டு தெரியாது. மனுச மனம் ஒவ்வொரு நிமிசமும் மாறிக் கொண்டு போகுது..' இவை சுபாவின் கடுமையான வார்த்தைகள்.

'சுபா ஏன் இப்படி ஆத்திரப்படுகிற எண்டு எனக்கு விளங்குதில்ல. ரெண்டு கிழமையா தர்மச் சாப்பாடுதான் சாபபிட்டுக் கொண்டு இருக்கிறம். சாப்பாடு கொண்டு வந்தால் நீ சாப்பிட வேண்டாம் பேசாமல் இரு.'

பசியில் பற்றி எரியும் வயிறு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றை மறுத்து, மறக்கடிச்சுக் கொண்டிருக்கிறது. நேற்றிரவு ஆளுக்கொரு மசாலா தோசை, காலை வெறும் தேத்தண்ணி, மத்தியானம் மனேஜர் சலீம் எடுத்துக் கொடுத்த இரண்டு சோத்துப் பர்சல்கள். சிங்கப்பூர் வந்த நாளில் இருந்து கால், அரை வயிற்று சீவியமாய் நாட்களை தள்ளிக் கொண்டு போகிறார்கள். இரவு தண்ணீரைக் குடித்து விட்டு படுப்பதாய்த்தான் தீர்மானம் எடுத்தனர். அப்படி இருக்க பாரிசிலிருந்து தாயகம் போக வந்திருக்கும் ஆனந்தனின் காருண்யத்தால் இரவு சாப்பாடு கிடைக்கிறது.

சுகுணா, சுபா, வதனா, வேணி நால்வரும் ஐரோப்பா வர, ஏஜன்சி பாலாவால் சிங்கப்பூரில் வந்து நிற்கின்றார்கள். இரண்டரை மாதமாக பயண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதாக பாலா சொல்லிக் கொண்டும் ஒடிக்கொண்டும் திரிகின்றான். நேற்று, இன்று, நாளை என்று இவர்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

பாலா, பிரபலமான புள்ளி அவர் பிரதான ஏஜன்சி அல்ல, அப்படிச் சொல்லிக்கொண்டு திரியும் 'மாமா'. ஆள் சேர்க்கும் சப் ஏஜன்சி. எவருடைய காலைக் கையைப் பிடித்தாவது ஒருவரை வெற்றிகரமாக அனுப்பிவிட்டு, அவரைச் சாட்சியாக்கி, பலரைச் சேர்த்து சில இலட்சங்களையும் வாங்கிக் கொண்டு சிங்கப்பூர், பாங்கொக் என்று இழுத்துக் கொண்டு அலைந்து திரிந்து காசு காணாது என்று கூட்டி வந்தவர்களின், ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் சகோதரர்களிடம் மேலும் சில இலட்சங்களை வாங்கி சரியான திட்டம் இன்றி ஒருவரை அனுப்பி விமான நிலையத்தில் பிடிபடவிட்டுவிட்டு சிறையனுப்பி, அவரைக் காரணம் காட்டி மற்றவர்களை தாயகத்துக்கு திருப்பி அனுப்பி, அங்கும்

பொலிசாரின் கெடுபிடிகளுக்கு ஆளாக்கி அவஸ்தைப்படவைத்து 'றூட் நாறிப் போச்சு; புது றூட் கண்டு பிடிக்கும் வரை பொறுத்திருங்கள் என்று' எல்லாவற்றுக்கும் முற்றுத் தரிப்பிட்டு ஆக்குதல், அழித்தல் எல்லாம் தானாகக் காட்டிவிட்டு சில காலம் அஞ்ஞாத வாசம் செய்வான். திரும்ப வருவான்.

பாலா தரம் கெட்ட சந்து மாத்துப் போர்வழி என்று தெரிந்தும் 'ஒரு இலட்சம் முதல் தரவேணும் மிச்சம் போய்ச் சேர்ந்த பின்பு' என்ற வசிய வாசகத்தை நம்பித்தான் இந்த நான்கு பேதைகளும் வந்து மாட்டிக் கொண்டனர்.

கதவு தட்டும் சத்தம் ஆவலாய் கதவைத் திறந்தாள் வேணி. ஓட்டல் மனேஜர் 'கொழும்பிலிருந்து



பாலாவின்ர வைப் பேசுறா. முப்பதாம் நம்பர் றூமில இருக்கிற வதனாவைப் பேசட்டாம்'

'வதனா நீர் இரும், நான்தான் வதனா எண்டு போய்க் கிழிக்கிறன் இண்டைக்கு' வேணி முந்திக் கொண்டு போனாள்.

'கலோ..'

'நான் பாலாவின்ர வைப் கதைக்கிறன். பாலா அங்க இல்லையா...?

'பாலா இங்க இல்லை. மூண்டு கிழமைக்கு முந்தி பாங்கொக்குக்கு எண்டு சொல்லிப்போட்டுப் போனவர், ஒரு கிழமையால வாறதெண்டு. எங்கட காப்புச் சங்கிலியள வாங்கி அடைவு வைச்சுப்போட்டு போயிற்றார். எங்கட கையில ஒரு சதக் காசுமில்லை. இங்க பட்டினி கிடந்து சாகிறம், யோக்கியமான வேலை பார்த்து போட்டுப் போயிட்டார்...' வானொலியில் செய்தி வாசித்தது போல் சுருக்கமாய் வேகமாய் முடித்தாள்.

'... இஞ்ச உங்கட மச்சான் ரெண்டு போய்ஸையும் கூட்டிக் கொண்டு வந்து, பாலா உறுதியான முடிவு சொல்ல வேணும் அதுவரையும் ஆயுத முனையில்தான் எங்களை வைச்சிருக்கப் போயினமாம்... எனக்கெண்டால்ப் பயமாய்க் கிடக்கு.. அவற்றை இந்தியா மனிசியின்ரை ரெலிபோன் நம்பர் தெரியுமா...?'

'எங்களுக்குத் தெரியாது, அவவும் நேற்று இஞ்சை அடிச்சவா, ஆள் எங்கையெண்டு தெரியாது எங்களுக்கு. இஞ்சை விசாவும் முடிஞ்சுது வெளியே போக ஏலாமல் சிறையிலை இருக்குமாப் போலைதான் இருக்கிறம்'.

'சரி கன நேரம் கதைக்க விடுகினம் இல்லை, அவர் வந்தால் கட்டாயம் எடுத்துக் கதைக்கச் சொல்லுங்கோ'.

ரிசீவரை வைத்தாள்.

றூமுக்குள் வந்து செய்தியை வதனாவிடம் சொன்னாள்.

'நமக்கு வாற ஆத்திரத்தை அழுது தீர்க்கிறம்; அவையால முடிஞ்சதை அங்கை செயயினம் வேற என்ன செய்யிறது'.

"அற வழி தேடு. அது தோற்பின் மறு வழி நாடு" வதனா நியாயப்படுத்தினாள். 'அந்த மனுசியை "கௌஸ் அரஸ்ரிலை" வைச்சால் இவனுக்கென்ன. இந்திய மனுசி இருக்கிறாள். பரதேசியின்ரை இலட்சணத்திலை ரெண்டு பெண்டாட்டி. நாயை நடு ரோட்டிலை விட்டு கல்லால அடிச்சுக் கொல்ல வேணும்' சுகுணா நச்சரித்தாள்.

'உள்ள வரலாமோ' நீக்கலாகக் கிடந்த கதவைத் தள்ளிக்கொண்டே வந்தான். பார்சல்களைக் கொடுத்து மரக்கறிப் பார்சலை அடையாளப் படுத்திச் சொன்னான்.

'ஆரு விரதம் பிடிக்கிறது'

'சுகுணாதான்'

'இப்ப கட்டாயம் தேவையான விசயம்'

'தாங்ஸ் எ லொட், தெரியாதவயிட்ட எல்லாம் கடமைப்பட வேண்டி இருக்கு.' என்றாள் வேணி.

'நோ மென்சன்.. இதுக்கு சொந்த பந்தங்களெல்லாம் தேவையில்ல ஒரு மனிதாபிமானத்தில செய்யிற உதவிதான், என்னால முடிஞ்சது இது.'

பாலாவின் மனைவியின் தொலைபேசி விடயத்தையும் ஆனந்தனுக்குச் சொல்லி ஆறுதல் தேட முனைந்தனர்.

ஆனந்தன் சூடாகினான். 'பொறுக்கி நாய், இபப வந்தானெண்டால் இப்ப இதில வைச்சு மேடர் பண்ணுவன்.'

'ஐயோ அப்பிடிச் செய்யாதீங்க பிறகு உங்களுக்கும் தூக்குத் தண்டனைதான் இங்க.' சுகுணா சொல்லிச் சிரித்தாள். எங்கட காசு அவங்கட திருவிழா. இவன் ஏஜன்சி இல்ல வயித்துப்பாட்டுக்கு வக்கில்லாத, வழியில்லாத பன்னாடை காசு பறிக்கிறதுக்கு எடுத்த ஐடியா.. இப்பிடி கொண்டுவந்து அந்தரிக்க விட்டுட்டு, காசு கறக்கலாம் எண்டுதான் நினைக்கிறான்.

'பாதிக்கப்பட்டவை மாதிரி நல்லா ஆத்திரப்படுகிறீங்க...'

'பாதிக்கப்பட்டவைக்கு எண்டு சொல்லாதீங்க. மனிதாபிமானமுள்ள எல்லாருக்கும் இப்பிடி ஆத்திரம் வரத்தான் செய்யும். சரி நாளைக்குச் சந்தித்துக் கதைப்பம், குட் நைட்.'

'இந்த போய், கொஞ்சம் நல்ல போய் மாதிரித்தான் தெரியுது. உங்கள்ள ஒருத்தருக்கும் சொல்லயில்ல; ரெண்டு கிழமைக்கு முந்தி நான் ஒரு அக்ஸிடென்ரில மாட்டப்பாத்திட்டன்.'

'ஏன் சொல்லயில்ல?'

'அப்ப தேவையில்ல எண்டு விட்டிட்டன். இப்ப சொல்ல வேண்டிய தேவையிருக்கு.. சாப்பாடு வாங்கித் தந்த களடா போய்... என்னைப் பற்றி விசாரிச்சுப்போட்டு, "நீர் கறுப்பெண்டாலும் நல்ல வடிவா இருக்கிறீர். உம்மட மெல்லிய தோற்றமும் எனக்குப் பிடிச்சிருக்கு. உமக்கு என்னப் பிடிச்சிருந்தால் மேலே என்ர றூமுக்கு வாரும்." எண்டு கேட்டவன். அப்பிடியான கேசா இருக்குமோ எண்டுதான் ஆனந்தனையும் நினைச்சன்.

'அதுக்கு நீ என்ன சொன்ன?'

'செருப்பால அடிச்சிருப்பன்,

(தொடர்ச்சி 18ம் பக்கம்)



# கே. பாலச்சந்தர்: மூன்று முகங்கள்



பாலச்சந்தருக்கென்று தமிழ்ச் சினிமாவில் முக்கிய இடமுண்டு. மத்தியதர வர்க்கத்தின் இயக்குனர் இவர். மத்தியதர வர்க்கத்தின் கனவுகள், மதிப்புணர்ச்சிகள், ஊசலாட்டங்கள், கையாலாகாத்தனங்கள், கற்பிதங்கள், ஆசைகள் செயலற்ற தன்மை போன்றவற்றைச் சுற்றியதே அவர் படங்கள்.

அவருக்குள் மூன்று முகங்கள் உண்டு.

1. தீவிர சமூக விமர்சனங்களுக்குச் செயல்பட வேண்டும் எனும் ஆசையுள்ள, பொறுப்புள்ள இயக்குனர்.
2. மத்தியதர வர்க்கத்தின் வாழ்வுப் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகுவதாகத் தொடங்கி, நாடகபாணி தீர்ப்புகளுக்குள் / செயலற்ற தன்மைக்குள் முடங்கும் மத்தியவர்க்கக் குடும்பக்காரர்.
3. நிலவும் வியாபார சினிமாவுக்குள் மூழ்கி காசு சேர்க்க முனையும் வியாபாரியான சினிமாக்காரர்.

தீவிர சமூக விமர்சகனாக கறாரான சினிமாவாக அவர் கொடுத்தவை எல்லாம் கலை, இலக்கிய தளத்தில் ஏற்கெனவே சமூகப் பிரக்ஞையுடன் இயங்கிக் கொண்டிருந்தவர்களின் கதைகள் / படங்கள் / மொழி மாற்றங்கள்.

1. கோமல் சுவாமிநாதனின் 'தண்ணீர் தண்ணீர்'
2. அனுராதா ரமணன் கதைகள் 'ஒரு வீடு இரு வாசல்'
3. சேதுமாதவனின் படமான 'நிழல் நிஜமாகிறது'

பாலச்சந்தருக்குச் சமூக மாற்றத்தில் அக்கறையுள்ளவர்களுக்கு மத்தியில் இடம் பெற்றுத் தந்தவை இப்படங்கள் தான். மத்தியதர வர்க்கத்தின் வாழ்வுப் பிரச்சினையைச் சித்தரித்த படங்கள் இரு வகையில் அமைகிறது.

1. பெண்கள் தொடர்பான படங்கள்
2. பிற பிரச்சினைப் படங்கள்

பெண்கள் தொடர்பான படங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் பற்றிய பிரச்சினைகள், கல்யாணம், குடும்ப அமைப்பு தொடர்பான பிரச்சினைகள், மத்தியதர வர்க்கத்தின் அபிலாசை தொடர்பான பிரச்சினைகள் என்று சொல்லப்படுகின்றது.

'மனதில் உறுதி வேண்டும்'
'அரங்கேற்றம்'
'அவள் ஒரு தொடர் கதை'
'அவர்கள்'
'கல்யாண அகதிகள்'

போன்றவை, இம் மாதிரிப் படங்கள்.

மத்தியதர வர்க்கத்தின் பிற பிரச்சினைப் படங்களான வேலையின்மைப் பிரச்சினை, தற்கொலை எண்ணம், பாலுறவுச் சிக்கல், திருமணம் மீறிய உறவு, அரசியல் வன்முறை போன்றவற்றைச் சித்தரித்த படங்கள், பிற பிரச்சினைப் படங்கள் வரிசையில் வருகின்றது.


'நூல்வேலி'
'வறுமையின் நிறம் சிவப்பு'
'வானமே எல்லை'
'மன்மதலீலை'
'அபூர்வ ராகங்கள்'
'சிந்து பைரவி'
'ஜாதிமல்லி'

போன்றவை இவ்வரிசைப் படங்கள்.

இப்படங்கள் எல்லாம், நூல்வேலி தவிர பாலச்சந்தர் கதை, வசனம் எழுதி, கலாகேந்திரா நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட படங்கள்.

இப்படங்கள் எடுத்துக் கொள்ளும் கரு, அதன் மீதான அணுகுமுறை, தீர்வு, நாடக பாணி முடிவு எல்லாமும் முழுக்க முழுக்க பாலச்சந்தரின் முழுக் கவனத்தில் உருவானவை.

அதன் முழு அர்த்தத்தில் இவையே பாலச்சந்தரின் படைப்புக்கள்.



வியாபார சினிமாவுக்குள் இறங்கி தனது உதவி இயக்குனர்கள் மூலம் அன்றைய தினம் வியாபார சினிமாவிற்காக உத்தரவாதம் உள்ள இயக்குனர்கள் மூலமும், கவிதாலயா நிறுவனத்தின் மூலம் பாலச்சந்தர் கொடுத்தவை மூன்றாவது வகையான படங்கள்.

அமீர்ஜான்
அனந்து
எஸ். பி. முத்துராமன்
பி. வாசு

மணிரத்னம் போன்றவர்கள் பாலச்சந்தருக்காக இயக்கிக் கொடுத்த படங்கள்.

'பூவிலங்கு'
'புதுக்கவிதை'

ரோஜா படங்கள் இவ் வரிசைப் படங்கள். இத் தொடரில் இப்போது சேரும் படம், கே. எஸ். ரவிக்குமார் இயக்கி



ரஜனி நடிக்க, ஏ. ஆர். ரஹ்மான் இசையமைக்கும் படம்.

இப் படங்கள் முழுக்க முழுக்க வியாபார நோக்கத்திற்காக பாலச்சந்தரின் மத்தியதர வர்க்க வாழ்வுச் சிந்தனை வீச்சைத் தாண்டி வெளிவரும் படங்கள்.

இப்படங்களில் பாலச்சந்தரின் பொறுப்பு என்பது தயாரிப்பாளர் என்பது மட்டும் தான்.

பாலச்சந்தர் தமிழ் சினிமா பார்வையாளனின் மனத்தில் இடம் பெற்றிருக்கும் பிம்ப இடம் மிகவும் மங்கலானது தெளிவில்லாதது.

அவர் ஒரு பொறுப்புள்ள / பிரச்சினைகளைச் சித்தரிக்க வல்ல / நல்ல பொழுதுபோக்கு தரவல்ல ஒரு இயக்குனர் என்பதுதான் அவர் தமிழ் சினிமா பார்வையாளனுக்கு ஏற்படுத்தியிருக்கும் பிம்பம். பாலச்சந்தர் அடிக்கடி தன்னைப் பாதித்தவர்கள் பின் Inspiration என இருவரைக் குறிப்பிடுவார்.

1. சத்யஜித்ரே
2. ஷியாம் பெனிகல்

இவர்களின் பாதிப்பில் உருவானவையாக இவர் கருதிக் கொள்பவர்கள் என;

A. தீவிர சினிமா விமர்சகருக்குச் செயல்பட்ட படங்களையும் (பிற படைப்பாளர்களின் மறு உருவாக்கம்)

B. மத்தியதர வர்க்க வாழ்வைச் சித்தரித்த பிரச்சினைப் படங்கள் (Down to carth பாலச்சந்தர் படங்கள்)

**ஜமுனா ராஜேந்திரன்**

எனக் கொள்ளலாம். ரேயின் படங்கள் பெரும்பாலும் புகழ் வாய்ந்த இலக்கிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டவைதான். ஆனால் ரேயின் முதல் படத்திற்கும் (பதேர் பாஞ்சாலி) அவரது இறுதிப் படத்திற்கும் (அகாந்துக்) அவரது வாழ்விற்கும் வாழ்வுக் கண்ணோட்டத்திற்கும், நடைமுறைக்கும் ஒரு இசைவுத் தன்மையைப் பார்க்க முடியும். சத்யஜித்ரேக்கு ஒரே ஒரு முகம் தான். மானுடேயப் படைப்பு முகம் அது.

ஷியாம் பெனிகலின் படங்கள் ஆங்கர், நிசாந்த், மந்தன், மண்டி, நேரு, சூரியனின் ஏழாவது குதிரை போன்றவை. சமாந்தர சினிமா சார்ந்தவர். நிலப் பிரபுத்துவ ஒடுக்குமுறை, பெண் ஒடுக்குமுறை, மனிதனின் ஆழ் மன உணர்வுகள், நவீன அரசியல் இவரது படைப்புலகம். இவரது படைப்புக்களில் முக்கியமாக தவிர்க்கப்பட்டிருப்பது நாடகப்பாணி முடிவுகள். இவர் படங்களில் முக்கியமான அம்சம் கலகமும் எதிர்ப்புணர்வுடன் வாழ்வதும். பாலச்சந்தர் படங்களில் முக்கியமான அம்சம் தோல்வியும், கையாலாகாத் தனமும், உபதேசமும், நாடகப்பாணித் தனமும்தான்.

இவ்விருவரின் பாதிப்பு பாலச்சந்தர் படங்களில் ஏதேனும் இருக்கின்றது என்று நாம் கருதுவோமானால் அது இதுவாகத்தானிருக்கும்.

சமூகத்தின் மத்தியதர வர்க்க வாழ்வின் கொதி நிலைப் பிரச்சினைகளை (Burning Problems) அவர் சித்தரிக்க முயல்கிறார். ஆனால் அதன் ஆழ்ந்த விடயங்களுக்குள் செல்வதில்லை. செல்ல முடிவதில்லை. செல்வதற்கு அரசியல் / தத்துவ தரிசனம் தேவையாகிறது.

மத்தியதர வர்க்கப் பிரச்சினைகளுக்குள் அழுந்தும் முகம் கொடுக்கும். எதிர்ப்புப் பிரச்சினை வரும்போது விட்டு விலகி கனவுகளுக்குள் மூழ்கும், தற்கொலை செய்துகொள்ள முனையும் மத, பக்தி, தேசியம், ஒழுக்கம், மறு பிறப்பு பற்றிய உபதேசங்களில் அடைக்கலம் தேடும்.

பாலச்சந்தருக்குள் இருக்கும் மூன்று முகம் மத்தியதர வர்க்கத்தின் நூறு முகங்களில் சில வேதான்.

அரங்கேற்றம் நாயகிக்குப் பைத்தியம் பிடிக்கும். பெண் அன்பு கிடைத்தும் நக்ஸலைட் அபூர்வராகங்களில் அடங்கிப்போவான். கல்யாண அகதிகள் ஆழ்ந்த மன ஆரோக்கியம் அற்று கல்யாணத்திற்காக மறுபடி அலைவார்கள். சிந்து பைரவியில் பெற்ற குழந்தையை விட்டு விட்டு Adultery க்கு ஆளான பெண் விலகிவிடுவாள். உன்னால் முடியும் தம்பியில் சமூகமாற்ற உபதேசம் செய்வான். ஜனத்தொகைதான் வறுமைக்குக் காரணம் என தத்துவ உபதேசம் வறுமையின் நிறம் சிவப்பு. பாலுறவுக்குப் பிரச்சினை சாவு பற்றிய சித்தாந்தமாகும் மன்மதலீலையில்.

Variety ஆக விசயங்களைச் சொல்லிப் பார்ப்பதும் பாலச்சந்தரின் மற்றொரு பண்பு. ரோஜாவில் தேசபக்தியை பாலச்சந்தர் பாணியில் சொல்லிப்பார்த்த முயற்சி ஜாதிமல்லி. தன்னைத்தானே பிரதி பண்ணும் பல காட்சியமைப்புக்களை மனித நடவடிக்கைகளை இவர் படங்களில் காணலாம். பாலச்சந்தரின் பலத்திற்குப் பிறிதொரு காரணமாகச் சொல்லப்படுகின்றவர் அனந்து. தமிழில் வெளிவந்த வித்தியாசமான பல படங்களுக்குப் பின்னணியாக இருக்கின்றவர். (சமீபத்தில்: நம்மவர்)

அனந்து ஆழ்ந்த சினிமா ஞானம் கொண்டவர் என்பதும் சர்வதேசிய சினிமா பற்றிய மிகுந்த படிப்பறிவும் கொண்டவர் என்பதும் செய்தி.

சமூகப் பற்றிய பிரக்ஞை, சினிமா பற்றிய ஞானம், மாற்றுச் சினிமா பற்றிய முயற்சி எல்லாம் இருந்தும் பாலச்சந்தர் சமாந்தர சினிமாக்காரராகவோ மாற்றுச் சினிமாக்காரராகவோ வர முடியவில்லை.

காரணம் இதுதான். அவரின் மூன்று சினிமா பரிமாணங்களுடன் நடக்கும் போட்டியின் இறுபதியில் அலைபடுதலில் சினிமா வியாபாரியும், மத்யதரவர்க்க இயக்குனருமே வெற்றி பெறுகின்றார்கள்.

இந்த வெற்றி மனிதனின் ஆத்ம திருப்தியை விடவும் பொருளாதாரத்தையும், அது தரும் சுகங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

சத்யஜித்ரே கடைசிவரை வாடகை வீட்டில்தான் வாழ்ந்துவந்தார். அவரது இறுதிக் காலத்தில்தான் மேற்கு வங்காள மார்க்ஸிஸ்ட் அரசு, அவரது உடல்நிலை கருதி அவரது வீட்டு மாடிக்குப்போக லிப்ட் வசதி செய்து கொடுத்தது.

அவர் படைப்புக்களும் வாழ்வும் கவிதை

## வாசகர் கவனத்திற்கு!

13-19 ஏப்ரல் இதழில் வெளியாகியிருந்த எனது "இந்தோ ஆங்கிலப் படங்கள் கட்டுரையில் A City of Joy படத்தின் இயக்குனர் Roland Joffee என்பதற்குப் பதிலாக Patrick Sweesu எனத் தவறாக அமைந்து விட்டதென்பதை வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

# "தானே எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா"

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவு தினம் கடந்த 13.04.95 ஆகும். அவரது நினைநாளிலே அவரின் நினைவலைகள்.

திரை இசை பாடல்களால் சமூக ஈடுபாட்டுடன் தனித்த முத்திரை பதித்து நின்றவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் மனித வாழ்வின் விழுமியங்கள் அனைத்தையும் அவரது பாடல்கள் தொட்டு நின்றன. கேட்போரின் நெஞ்சை தொட்டன. சிந்திக்கத்தூண்டின.

முதியவர்கள் தொடங்கி சிறியவர்கள் வரையிலும் அவர்களின் தேவைகளைத் தேடிச் சென்றன இவரது பாடல்கள். மக்கள் மனங்களை ஊடுருவிச் சென்று தான் பெற்றுக்கொண்ட அநுபவங்களை திரை இசைப் பாடல்களாக்கி ஒளிர்ந்தார். இந்த மக்கள் கவிஞர் 'தனியுடமைக் கொடுமைகள் தீர தொண்டு செய்யடா தானே எல்லாம் மாறும் என்பது' பழைய பொய்யடா' என நாம் வாழும் சமூக அமைப்பைச் சாடி அதனை மாற்றியமைக்க மக்களுக்கு அறைகூவல் விடுத்தவர்.

மக்கள் மத்தியில் நிலவும் மூட நம்பிக்கைகளை சாடி நின்ற கவிஞர் "வேப்ப மர உச்சியிலே நின்று பேய் ஒன்று ஆடுதுன்னு விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க; உன் வீரத்தை கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க" என்று இளமைப் பராயத்திலே சீரழிக்கும் சமூகத்தின் மீதான தன் பார்வையை மிக அழகாக எளிமையாக மக்கள் மனங்களிலே பதிய வைத்தார்.

பட்டுக்கோட்டை பட்டப் படிப்புகள் படித்தவர் அல்ல. சாதாரன பள்ளிப் படிப்புத்தான் அனுபவப் பள்ளியிலேயே மக்கள் கவியாய் திகழ்ந்தார். தனது பத்தொன்பதாவது வயதிலே கவிதை படைக்கும் திறனைப்பெற்ற கவிஞர். நாடகத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்த இக்கவிஞர் விவசாயிகளின்பால் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். விவசாயிகளின் இயக்கங்களிலும் சேர்ந்து பணியாற்றியவர். இந்திய பொது உடமைக் கட்சியில் ஒரு உறுப்பினராக இருந்தவர்.



இவரது பாடல்கள் ஆரம்பத்திலே 'ஜனசக்தி' என்ற பத்திரிகையில் நிறையவே வெளிவந்தது. ஜனசக்தி இவருக்கு அளித்த ஆதரவு திரைப்பட உலகமும் இவரை வரவேற்றது.

1951ல் "படித்த பெண்" என்ற திரைப் படத்திற்கு பாடல் எழுதி திரையுலகிற்குள் நுழைந்தவா.

சக்தி மிக்க மக்கள் வெகுசனச் சாதனமான திரைப்படத் துறையினூடாக தன்பாடல்கள் மூலம் மக்களுக்கு நிறையவே கருத்துக்களை சிந்திய கவிஞன் கல்யாணசுந்தரம். கிராமிய, ஏழை மக்களையெல்லாம் மிக நெருங்கிச் சென்று அவர்களோடு இரண்டற உறவாடிக் கலந்தது இவரது பாடல்கள்.

கருத்துச் செறிவும், இலக்கிய நயமும் எளிமையும் நிறைந்த இவரது பாடல்கள் என்றுமே சாகாது வாழும் சக்தி வாய்ந்தவை. இன்றைய திரைப் பாடல்களையே ஒலித்துக் கொண்டிருக்கும் "முக்காலா முக்காப்பிலா...", "எப்படி எப்படி சமைந்தது எப்படி..." என்று சீரழிவுச் சந்தையிலே நின்று கொண்டிருக்கிற நாங்கள் அந்த மக்கள் கவிஞனின் மகத்துவத்தை மனதில் நிறுத்துவோம்.

*நவநீதன்*

# புலம் பெயர் இலக்கியம்

இன்றைய இலக்கிய உலகில் புலம் பெயர்ந்தோர் இலக்கிய வகை என்று ஒன்று உருவாகி உரம் பெற்று வருவது கண்கூடு. இவ்வகையில் நிறைய இலக்கிய முயற்சிகள்.... கதை கவிதை, நாடகம், சினிமா என்று வருகிறது. இவற்றில் பலம் பெற்று நிற்பவர்கள் ஈழத்தவர் எனும் போது பெருமை தரத்தான் செய்கிறது. கனடா, மொஸ்கோ, டென்மார்க், நோர்வே, அவுஸ்திரேலியா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, ஒல்லாந்து என பரவி வாழ்கின்றவர்கள் தமது உள்ளத்து உணர்வுகளை வெளிக் கொண்டுவருகின்றனர். எழுத்தாளர்களும், அவர்களுக்கூடாக பத்திரிகைகளும் பெருகி வருகின்றன சில இயக்கங்களின் பலம் சார்ந்தும், சில தனிப்பட்டும் வெளியீட்டுத் தளங்களில் கால் ஊன்றியுள்ளனர்.

இன்றைய பெண்களும் ஆண்களும் போட்டியிட்டபடி எழுதுகின்றனர்; புதிய சிந்தனைகளின் கண்கூடு.

எனினும் எத்தன் பேர் வாசகர்களை மனங்கொள்கின்றனா! எத்தனை வெளியீடுகள் வாசகர்களைச் சென்றடைகின்றன! வெளியீட்டுப் பலமுள்ளவர்களா பலதாகவே பதிப்பகங்கள் கொண்டு வெளிவருவதாகச் சொல்லாலும், வாசகர்களை, படைப்பாளர்களை ஏமாற்றி விடுகிறார்கள். இந்த ஏமாற்றம் வாசகர்களை, படைப்பாளர்களை, இலக்கிய வயலைத் தேடிச் செல்ல தயக்கம் கொள்ளவைக்கின்றது. சிலருக்கு வெளியிடும் ஆர்வம் உண்டு. அனுபவம் இல்லை. ஏனோதானோ என்று தமிழீழ சஞ்சிகைகள் மனம் கொண்டு வெளியிடுகின்றன.

புற்றீசல் போல புறப்பட்டு விட்ட தமிழ் வெளியீடுகளை ஒருங்கிணைத்து 'டிரஸ்ட்' அமைப்பு இருப்பின் நல்ல வாசகர்கள் வாங்க ஏதுவாகுமல்லவா! சந்தா அனுப்பும் வாசகர்களை ஏமாற்றாமல் அவர்களின் பணம் பலமாகக் கருதி அனுப்புவதும், நல்ல வளா ஆக்கங்களை திரும்பிப் பார்க்க வைக்கும். இதனை பலர் செய்வதில்லை. ஏமாற்றி விடுவதனால் தொடர்ந்து வெளியீடுகளை அனுப்புகின்ற வெளியீட்டாளர்களை வாசகர்களும் சட்டை செய்வதில்லை. இது மாற வேண்டும்.

நல்ல வாசகர்களை

நல்ல படைப்புகளை

குறுகிய மனமின்றி ஒருமித்த வெளியீட்டுக்களை ஏற்படுத்தின் புலம் பெயர் இலக்கியம் வளம் பெறும், சரித்திரத்தில பெயர் பெறும்.

**முல்லை அமுதன்**

## எழுத்தாளர்களின் குழப்பம்!

கேள்வி: எழுதிக் கொண்டு போகும்போது எழுத்தாளனை ஒருவித மனநிலை வாட்டி எடுக்கும் போது - "என்னடா" இத்தனை எழுதுகிறோமே இதனால் யாருக்காவது பயன் உண்மையிலேயே இருக்கிறதா என்று தோன்றும்போது - நிச்சயம் குழப்பம் நேரும். அப்போது என்ன செய்வது?

பதில்: இது தவிர்க்க இயலாதது. எழுத்தாளர்கள் அரசியளார்களாக போராட்டக்காறர்களாக இருக்க முடியாது அல்லது இருக்கக் கூடாது என்றில்லை. மிகப் பெரிய எழுததாளர்கள் சிலா அப்படி இருந்திருக்கின்றார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். சட்டசபை உறுப்பினர்களாக இருந்திருக்கின்றார்கள். ஆபிரிக்காவில் ஜனாதிபதியாகக்கூட இருந்திருக்கிறார்கள், ஆனால் அத்தகையவர்கள் இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை. இலக்கியமும அரசியலும் போராட்டமும் சுயேச்சையான களங்களாகவே அவர்கள் இருந்தார்கள். போர்ராட்டத்தில் இருக்கும்போது நான் கவிஞன் என்று தோன்றும் எண்ணமும் அல்லது கவிதைகள் எழுதும்போது 'நான் அரசியல்வாதி' என்று தோன்றும் எண்ணமும் ஆபத்தைத்தான் விளைவிக்கும்.

கர்நாடகக் கவிஞர் சித்திரலிங்கையாவின் நேர்காணலிலிருந்து—

நன்றி: 'நிறப்பிரிகை'

## காட்சியும் கவிதையும்



இது யாழ் கோட்டையில் அமைந்திருந்த தூக்கு மேடை.

அன்று எம்மவர்க்கு தண்டனை வழங்க அந்நியர்களால் உருவாக்கப்பட்டது. இதனைப் பார்க்கும்போது உங்கள் மனங்கள் எழும் மனவெழுச்சியை கவிதைகளாக எழுதி அனுப்புங்கள்.

(15ம் பக்கத் தொடர்ச்சி)

## அகதி ஆகிட...

பிறகு பிரச்சினை பெரிசானா, நமக்கு விசாவுமில்ல. வயித்துப்பாட்டுக்கு வழியுமில்லாத நிலைமையில என்னத்தைக் கதைக்கிறது– நான் அப்பிடியான ஆளில்ல எண்டு சொன்னன்.'

'எங்க விட்டுக் கேட்டவன்?'

'அன்னைன்ர கோல் வந்து, கதைச்சுப்போட்டு வரேக்க எங்கட றூமுக்கு முன்னுக்கு விட்டுக் கேட்டவன்.'

'சரி, சாப்பிடுவம் வாங்கோ... இன்னும் எத்தினையள சந்திக்க, பட வேண்டியிருக்கு.'

சாப்பிட்டுவிட்டுப் படுக்கலாயினர்.

வதனாவுக்கு அதிகம் யோசித்தால் தூக்கம் வராது, வேணிக்கு பசியிருந்தால் தூக்கம் வராது, சுபாவிற்கு மனதில் பயமிருந்தால் தூக்கம் வராது, சுகுணாவிற்கு சோறு சாப்பிடாவிட்டால் தூக்கம் வராது. இப்படி ஒவ்வொருவரினதும் தூக்கம் கொள்ளை போயிருந்தது. பின்னிரவில் மூவரும் தூங்கிப்போக வதனா மட்டும் தூங்காமல் இருந்தாள். "டென்மார்க் அக்கா யேர்மன் அக்காவைக் கூப்பிட்டுக் கலியாணம் செய்து வைத்து, யேர்மன் அக்கா பாரிஸ் அக்காவைக் கூப்பிட்டு கலியாணம் செய்து வைத்து, பாரிஸ் அக்கா வட்டிக்கு எடுத்துத்தான் இப்ப என்னைக் கூப்பிடுறதுக்குக் கட்டினவா– இவிட போறதும் நகைநட்டு, கலியாணம் எண்டு எவ்வளவு செலவு..? அத்தான்கள் பாவம். இப்பிடியே ஒரு சின்னப் பூகம்பம் இந்த றோட்டுக்கு மட்டும் வந்தால்..." நினைவுகளின் நெருடல்களும் கற்பனைகளின் வைகப்பலும் வதனாவை தூங்காமலே எழுப்பிவிட்டது.

அவளைத் தொடர்ந்து எல்லோரும் எழுந்தனர். மனக்குழப்பத்தால் இரவு சிறிதளவையே சாப்பிட்டுவிட்டு வைத்திருந்த மீதியை எடுத்துச் சாப்பிட்டாள் வதனா. வேணி தேனீர் தயாரிக்க நாலவரும் குடித்துவிட்டு ரி.வி. பார்த்துக் கொண்டிருந்தனர்.

மறுநாள், வெளிக் ஹோலில் நின்றுகொண்டிருந்த சுகுணாவை இருவர் அணுகி 'மிஸ்டர் பாலா இங்க நிக்கிறாரா?'

'இல்ல.. போனகிழமை இங்க வந்திட்டு, பாங்கொக் போய்விட்டார்..' பயந்துகொண்டு சொன்னாள்.

'எப்ப வருவார்?'

'தெரியாது... ஏன் என்ன பிரச்சினை?' சுகுணா துணிச்சலை வரவழைத்துக் கேட்டாள்.

'போன வருசம் எங்கட ஹோட்டலில தங்கி நிண்டார். கலக்ட் கோல் எல்லாம் எடுத்து, ரூ தவுசன் டொலர் பாக்கியோட ஆள் மாறிட்டார்... இப்ப ஆளப் பிடிக்க வேணும். பாலாக்குச் சொல்ல வேண்டாம். நான் கேட்டது எண்டு சொல்லி.'

பாலாவின் வண்டவாளங்களை இறக்கி வைத்துவிட்டு இருவரும் போயினர். விடயத்தை ஏனையோருக்கும் சொல்லி ஆத்திரப்பட்டனர்.

ஆனந்தன் வந்தான்.

'இண்டைக்கு என்ன சாப்பாடு எடுத்துக் கொண்டு வர?'

'உங்கட விருப்பத்திற்கு எடுத்துக் கொண்டு வாங்கோ.'

ஆனந்தன் சாப்பாடு எடுக்கப் போய்விட்டான்.

பாலா வந்தான். கண்களின் சிவப்பு, மது போதையில் இருப்பதாய்ச் சொல்லிற்று.

யாருக்காவது அல்லது எல்லோருக்குமாவது எப்போதாவது பிளைட் என்ற நல்ல செய்தியுடன் வராமாட்டானா என்ற நப்பாசையுடனும், சின்ன நம்பிக்கையுடனும் இருந்த யுவதிகள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அவனது சுயத்தில் அக்கறை உள்ளவர்கள் போல் பாவனை பண்ணி, கொழும்பு மனைவியின் இக்கட்டான நிலையை எடுத்துச் சொல்லியபோது,

'அவள் போகட்டும் விடு– இவள் இல்லையெண்டால் அடுத்தது– இந்தியாவில ஒரு மனுசி இருக்கு எனக்கு– அவள் கறுப்பி எண்டாலும் என்னில உயிரயே வைச்சிருக்கிறாள். என்னிலும் பாக்க பதினைஞ்சு வயசு குறைய..'

'அவவும் டெலிபோன் அடிச்சவ.'

'அவவோட கதைச்சிட்டன் காலையில. இப்ப ஒரு சின்னப் பிரச்சினை நடந்துபோச்சு. நான் அனுப்ப இருந்த றூட்டால குலம் எண்டு ஒரு ஆள் ரெண்டுபேரை அனுப்பி, பிடிபட்டுக் கொழும்புக்குத் திருப்பிப்போட்டாங்கள். அதில ஒரு ஆளுக்கு ஐடென்ரிக் காட்டும் இல்லை. அவளை உள்ள போட்டுட்டாங்களாம். அதுதான் இப்ப அவசரப்பட்டு அனுப்பி நீங்களும் மாட்டாமல், நாறாமல் நாமளும் நாளையிண்டைக்கு கொழும்புக்குப் போவம். ஒரு மாதத்தால திருப்ப உங்கள வேற ஒரு றூட்டில அனுப்பிறன். கட்டாயம் செய்வன்.'

'என்னண்ண ஒரு கிழமையால அனுப்பிறதெண்டு கூட்டிக்கொண்டு வந்து ரெண்டரை மாதமாகுது இப்பிடி போக்கிலித்தனமான சுத்துமாத்துக்காரன் எண்டு தெரிஞ்சிருந்தால்..'

'பொத்தடி வாய்... வாயடிக்காதீங்க இஞ்ச வந்து சொல்லுறதக் கேளுங்க..'

'கட்டுநாயக்காவில ஏதும் பிரச்சினை நடந்தால்..'

'எல்லாம் வெட்டி ஆடலாம் யோசிக்காதிங்க.'

'நகைகள அடைவெடுத்துத் தாங்க.'

ஒவ்வொருவரும் வார்த்தைகளால் தாக்கினர்.

'எடுத்துத் தரலாம் பேசாமலிருங்கோ.'

## அம்மா

பகல் அமிழ்ந்து
சந்றைக்கெல்லாம்
இருளின் ஆட்சி எழும்
கதவருகில் அமர்ந்திருப்போம்,
குடிசைக்குள் வெளிச்சமின்றி.

வீடுதோறும் வீடுதோறும்
விளக்கெரியும்,
அடுப்பெரியும்,
ரொட்டிக்கு மாவும்
பிசையப்படும்,
கடலைகள்,காய்கறிகள்
வேகும் மணம் பரவி நாசிதொடும்.

எங்கள்
வயிறுகளில் இருள் பெருகும்
ஏன் விழியில்
நீர் வழியும்.

இருள் பிளந்து, மயங்கியதாய்
நிழலொன்று அசைந்து வரும்
அவள் நடக்க
தலையில் சுமை குலுங்கும்,தடுமாறும்.

கறுத்து மெலிந்த உடல்
எனது அம்மா.

காலை முதல் விறகுதேடி
காட்டுக்குள் அலைந்திருந்தாள்.

அண்ணன் தம்பி அனைவருமே
அமர்ந்திருப்போம்...காத்திருப்போம்
அவள் வரவு
பார்த்திருப்போம்.

விறகு
விற்காவிட்டால்
பட்டினியாய் கண்ணயர்வோம்
ஒரு நாள்
ஏதோ நடந்தது, என்னவென்று
புரியவில்லை.

அம்மா வந்தாள்
காலில் கட்டோடு, ரத்தம் கசிந்துவர
அம்மா வந்தாள்.
சொன்னார்கள்
பாம்பு கடித்ததாம்.

வந்தது...கடித்தது...சென்றது
என்றார்கள்.

பாயில் படுக்கவைத்து...
மஞ்சள் கயிறு கட்டி...
மந்திரங்கள் ஜபித்து...வைத்தியரை
அழைத்துவந்து...

பகல் போனது
பகலோடு சேர்ந்து அவள் உயிரும்
போனது

எங்கள்
புலம்பல் உடைந்து
காற்றில் கரைந்து
அம்மா போய்விட்டாள்,
பெற்ற குழந்தைகளைப்
பெருங் காற்றில் அலையவிட்டு.

எனது கண்கள் அவளைத் தேடும்
இன்றும் மனம் புழுங்கும்

ஏலும்பாக ஒரு அம்மா
விறகு விற்பதைப் பார்த்தேன்
எல்லாவற்றையும் வாங்கினேன்.

*வாமன் நிம்பல்கர்*

* * * * * * * * * * *

## இந்த தெருவில்தான்...

முத்திரம் கரைந்த சாணியை
வைக்கோல் கருணையால் வழித்து
தட்டுக்கூடையில் அள்ளி
குப்பையில் சேர்த்தான்.

இந்த தெருவில்தான்...
முன்னங்கால்களையும்
பின்னங்கால்களையும்
இணைத்து கட்டி
மூங்கில் கழி நுழைத்து
செத்த மாட்டை தோளில் சுமந்தான்.

இந்த தெருவில்தான்...
அய்யனாரும்
செல்லியம்மனும்
திரௌபதியும்
ஊர்வலம் போக
வீசியெறிந்த காசுக்கு...
சாராயம் குடித்து
கை நோக பறையடித்தான்.

இந்தத் தெருவில்தான்...
தீபாவளிக்கும் பொங்கலுக்கும்
உங்கள் பாதங்கள் கூச
விழுந்து வணங்கினான்.

இந்த தெருவில்தான்...
பச்சை மூங்கில் பிளந்து
பாடை செய்தான்
நீங்களில் யாராவது
செத்துப் போனால்.

இந்தத் தெருவில்தான்...
அமர்ந்து ஓட்டாமல்
பாரவண்டியின் முக்கணையை அழுத்தி
நடந்து செலுத்தினான்
மாட்டோடு மாடாய்.

இந்த தெருவில்தான்...
மணியத்தையும்
நாட்டாமையையும்
எதிர்கொண்டால்
துண்டை இடுப்பில் கட்டி
"கும்பிடுறேனுங்க எசமான்"
குறுகிப் போவான்

ஆனாலும் ஆண்டைமார்களே
மறுத்துவிட்டீர்கள்
இதோ... இந்தத் தெருவில் அவன்
என் அப்பனின் பிணம்போக.

*கரிகாலன்*

# பிரான்ஸ் ஜனதிபதித் தேர்தல்

## கருத்துக் கணிப்புக்களைப் பொய்யாக்கி ஜொஸ்பன் முதலிடம்

கடந்த 23ம் திகதி நடந்த பிரான்சின் 5வது குடியரசுக்கான ஜனாதிபதித் தேர்தலில் சோசலிஸ்ட் கட்சி வேட்பாளர் லியனல் ஜொஸ்பன் 23.7% அதிகப்படியான வாக்குகளைப் பெற்று இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளார். ஆளும் RPR கட்சி வேட்பாளரும், பாரிஸ் மேயருமான ஜக் சிராக் 20.4% வாக்குகளைப் பெற்று இரண்டாவதாக வந்து, அவரும் இரண்டாவது சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். பிரான்சின் தற்போதைய



பிரதமரான எதுவார் பலதூர் உட்பட இத் தேர்தலில் போட்டியிட்ட ஏனைய 7 வேட்பாளர்களும் மே மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்தனர்.

உள்நாட்டு அமைச்சரான சாள்ஸ் பஸ்குவா இறுதியாக உத்தியோக பூர்வமாக அறிவித்தபடி தேர்தல் முடிவுகள் வருமாறு;

இத் தேர்தலில் 39,107,482 பேர் வாக்களித்துள்ளனர். 20.81% மானவாகள் வாக்களிக்கவில்லை. வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்,

| | |
|---|---|
| லியனல் ஜொஸ்பன் | 23.24% |
| ஜக் சிராக் | 20.64% |
| எதுவார் பலதூர் | 18.54% |
| ஓர் பென் | 15.15% |
| றொபெர் ஹூ | 8.72% |
| லகியர் | 5.34% |
| பிலிப் து வில்லியே | 4.78% |
| வேயர் | 3.38% |

தேர்தலுக்கு முன் நடத்தப்பட்ட சகல கருத்துக் கணிப்புக்களும் சிராக் முதலிடத்திலும், ஜொஸ்பன் - பலதூர் போட்டியின் அடிப்படையில் இரண்டாம், மூன்றாம் இடத்திலும் வருவார்கள் என்று தெரிவித்ததை பொய்யாக்கி, ஜொஸ்பன் முதலாமிடத்தில் வந்தது, அரசியல் அவதானிகளுக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. 1988 தேர்தலைவிட இத் தேர்தல், அதிதீவிர வலதுசாரி வேட்பாளரான ஓர் பெனுக்கு ஆதரவு அதிகரித்திருப்பதை அண்மைய தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன. ஓர் பெனின் தேசிய முன்னணி, 6 மாவட்டங்களிலும் 10 க்கும் மேற்பட்ட நகரங்களிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது. வடக்கு, அல்சாங் என்பன குறிப்பிடத் தக்கவை.

தேர்தல் முடிந்தபின் அரச

# அடுத்த ஜனாதிபதி ஜொஸ்பனா? சிராக்கா?

தொலைக்காட்சி நிறுவனமான 'பிரான்ஸ் 2' அமைத்த நிகழ்ச்சியில், சகல வேட்பாளர்களும் தங்களது அபிப்பிராயத்தையும் நன்றியையும் நேரடியாகத் தெரிவித்திருந்தனா. பலதூர் கருத்துத் தெரிவிக்கும்போது, தனது வழமையான நிதானத்தை இழந்தவராகக் காணப்பட்டார். இரண்டாங்கட்ட வாக்கெடுப்பில் தான் சிராக்கை ஆதரிக்கப் போவதாக அவர் அறிவித்தார். சிராக், பிரதிபலிப்பு எதையும் வெளிப்படுத்தாது அமைதியாக இருந்தார். சிராக்கின் சார்பில் பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர் அலன் ஜூப்பே விவாதங்களுக்குப் பதிலளித்தார். ஓர் பென், தனது வீட்டிலிருந்தபடி கருத்துத் தெரிவித்தபோது, அதிக குறுக்கீடுகள் ஏற்பட்டது. இரண்டாங்கட்டத் தேர்தலில் நீங்கள் யாரை ஆதரிப்பீர்கள் என கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்க முன்பே, அலன் ஜூப்பே குறுக்கிட்டு, 'நாங்கள் (சிராக்) உங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை' என்று கூறினார். 'உங்களது செல்வாக்கு அதிகரிப்பு, பிரான்சுக்குப் பிடித்துள்ள நோயின் அடையாளம்' என்று பலரும் குற்றம்சாட்ட, ஓர் பென் தனது தொலைக்காட்சித் தொடர்பை துண்டிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள இரண்டாங்கட்டத் தேர்தல், வலதுசாரிகளுக்கும், இடதுசாரிகளுக்கும் இடையிலான நேரடிப் போட்டியாக அமைகின்றது. சிராக் - பலதூர் - ஓர் பென் முதலானோர் வாக்குகளைக் கூட்டும்போது, வலது சாரிகளின் கை ஓங்கியிருப்பதும், சிராக் வெற்றி பெறுவது நிச்சயம் என்று தெரிந்தாலும், மக்களின் மனோபாவத்தை கணிப்பது கஷ்டம் என்றே பல அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். இப்போதுள்ள நிலைமைகளின்படி சிராக்கிற்கு 57% வாக்குகளும் ஜொஸ்பனுக்கு 43% வாக்குகளும் இரண்டாங்கட்டத் தேர்தலில் கிடைக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

கடந்த 14 வருட சோசலிஸ்ட் ஆட்சியினால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் கூடியுள்ளமை, உள்நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பு - குறிப்பாக அல்ஜீரியத் தீவிரவாதிகளின் செயற்பாடுகள், எயிட்ஸ் நோய் அச்சுறுத்தல் என்

> 1988 தேர்தலைவிட இத் தேர்தல், அதிதீவிர வலதுசாரி வேட்பாளரான லூ பெனுக்கு ஆதரவு அதிகரித்திருப்பதை அண்மைய தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன, லூ பெனின் தேசிய முன்னணி, 6 மாவட்டங்களிலும் 10 க்கும் மேற்பட்ட நகரங்களிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

பன அதிகரித்துவிட்டது. இப்போதுள்ள கேள்வி, மாறுதல் வேண்டுமா? வேண்டாமா? என்பதே என வலது சாரிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆயினும் சோசலிஸ்டுக்களின் ஆட்சியை வெறுக்கும் வலது சாரிகள்கூட ஓர் பெனின் அதி தீவிர வலது சாரித்தனத்தை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. ஜனநாயகத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய பிரான்சில் அதற்கெதிரான வன்முறையை ஓர் பெனின் போக்குத் தூண்டிவிடும் என்று பலரும் கவலை கொள்கின்றனர். சிராக்கிற்கு உள்ள பிரச்சினையும் இதுவே என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஓர் பென், சிராக்கை ஆதரிக்க முன்வந்தால், சிராக்கை ஆதரிக்கும் ஒரு பகுதியினரின் ஆதரவை அவர் இழக்க நேரிடும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரே கட்சியிலிருந்து சிராக்கிற்கு எதிராக பலதூர் தேர்தலில் நின்றபோது அவரை ஆதரித்த அனைவரும், அவரின் சொற்படி சிராக்கை ஆதரிக்க முன்வருவார்களா? என்ற சந்தேகத்தையும் சிலர் எழுப்பியுள்ளனர்.

மறு புறத்தில் லியனல் ஜொஸ்பன், முதல் சுற்றில் முன்னணியில் நின்றாலும், இடதுசாரிகளின் ஒட்டுமொத்த வாக்குகள் என்று பார்க்கும்போது 2வது இடத்திலேயே அவர் உள்ளார். அதுவும் 1988ல் மித்திரோனுக்கு (35%) கிடைத்த ஆதரவைவிட இவருக்கு ஆதரவு குறைந்தே உள்ளது. வலது சாரிகளுக்கிடையே ஏற்படக் கூடிய பிளவே அவரது வெற்றியை நிர்ணயிக்கக் கூடியதாக அமையும். பிரான்ஸ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற முன்னாள் ஐரோப்பிய கொமிசன் தலைவர் ஜக் திலோர், அவர் பக்கம் இருப்பது சாதகமான ஒரு அம்சம். கம்யூனிஸ்ட் கட்சி நாளை (25.04.1995) யாரை ஆதரிப்பது என்பது பற்றி முடிவெடுக்கும் என றொபர் ஹூ அறிவித்துள்ளார். அநேகமாக இடது சாரிகளின் வாக்குகள் இடது சாரிகளுக்கே இருக்கும்.

லியனல் ஜொஸ்பன், தான் பதவிக்கு வரும் பட்சத்தில் தற்போது 7 வருடமாக உள்ள ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 வருடமாகக் குறைப்பேன் என்று கூறியுள்ளார். சாள்ஸ் பஸ்குவாவால் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டவர் குடியுரிமைச் சட்டத்தை ரத்துச் செய்யப்போவதாகவும், சம்பளத்தைக் குறைக்காமல் வேலை நேரத்தைக் குறைக்கப் போவதாகவும் 2 வருடங்களுக்கு மேலாக வீடு துவும் இல்லாதவர்களுக்கு வீடு வழங்க முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், 97 98ல் ஐரோப்பா ஒரே நாணயக் கொள்கையை அமுல்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளார்.



மறு புறத்தில் சிராக்கும், ஐரோப்பிய இணைப்பு, ஒரே நாணயக் கொள்கை, ஒரு குழந்தை உள்ளவர்களுக்கும் அலக்கேஷன் (சமூக உதவி) தொடர்ந்து வழங்கும் திட்டம், வேலை நேரக் குறைப்பு, அகதிகள் விடயத்தில் ஜனநாயக உரிமைகளைப் பேணுவது என்று பல திட்டங்களை அறிவித்துள்ளார். இன்னும் இரு வார காலத்துக்குள் பிரான்ஸ் மக்களின் மனநிலை எப்படி மாறும் என்பதை சொல்ல முடியாதுள்ளது.

இதேவேளை மே 7ம் திகதி தேர்தல் முடிவில் சிராக் வெல்வாரேயானால், பலதூர், தனது பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வாரென்றும், அவ்விடத்திற்கு அலன் ஜூப்பே வருவாரெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஜொஸ்பன் வென்றாலும், பலதூர் தன் செல்வாக்கின்மையை கருத்தில் கொண்டு தனது பதவியை ராஜினாமாச் செய்வாரென்றே அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

14 வருட மித்திரோனிசம் முடிந்தபின் வரப்போவது எது? 'கோல்' இசமா? (சிராக், சார்ள்ஸ் டி கோலின் கொள்கைவாதி), சோசலிசமா? 'மாறுதலா? மாறுதல் இன்றி இருப்பதா? என்பது மே 7ம் திகதி இரவுதான் தெரியும்.


கலை நுணுக்கத்துடன் கூடிய உங்கள் தங்க நகைகளை,
நீங்கள் விரும்புகின்ற வடிவங்களில்
பெற்றுக்கொள்ளவும் மற்றும் அன்பளிப்புப்
பொருட்கள், அலங்காரப் பொருட்கள், மணிக்கூட்டு
வகைகள் அனைத்தையும் மிகக் குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ள

ரூபி நகைமாளிகை



RUBI JEWELLERY

உரிமையாளர்: ப. நாகலிங்கம்

M°: MARCADET POISSONNIERS OU JULES-JOFFRIN

18, RUE SIMART 75018 PARIS TEL: 46 06 94 11

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social - முகவரி
136, Bd de la Villette,
75019 Paris.

RCS PARIS
B 399673110

Directeur de la publication:
P. Velupillai

Redacteur:
K. Kesenthiran

Impression:
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

ஆசிரியர்:
க. கஜேந்திரன்

தொடர்புகளுக்கு:
பாரிஸ்:
TeL: 42 05 93 30
Fax: 42 05 99 02

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 49 - 041333896

டென்மார்க்:
G. ANANTH - Tel: 97217686

சுவிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374

லண்டன்:
துவாரகா: Tel: 0813 9126

இத்தாலி:
N. பாஸ்கரன்:
VIA DANTE - 296, PALARMO


# திருமலையில் கப்பலைத் தகர்த்த கரும்புலிகள் நால்வர்

திருமலை துறைமுகத்தினுள் கடற்புலிகளின் விசேட நீரடி நீச்சல் குழுவினர் கடந்த 19.04.95 புதனன்று அதிகாலை தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

சிறிலங்கா கடற்படையின் அதிவேக பீரங்கிப் படகுகளான "சங்காய்" ரகத்தைச சேர்ந்த "சூரையா", "ரணகுரு", என்பனவே கடற்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதலில் 12 கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 27 படையினர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலில் கடற் கரும்புலிகள் மேஜர் கதிரவன் (பரந்தன்), மேஜர் தணிகைமாறன் (கட்டைக்காடு), மேஜர் மதிசா (குச்சவெளிதிருமலை), கப்டன் சாந்தா(புங்குடுதீவு) ஆகிய போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளார்கள்.

இவர்கள் சுலோயன் விசேட நீரடி நீச்சல் குழுவின் பிரிவிலிருந்தும், அங்கயற்கண்ணி விசேட நீரடி நீச்சல் குழுவின் பிரிவிலிருந்தும் வந்து சேர்ந்து இத்தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர்.

1986 இல் காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்த கப்பல் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நிகழ்த்த முயற்சித்து வீரமரணமடைந்த போராளி சுலோயன் பெயரில் 1994 இல் விசசேட நீரடி நீச்சல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு காங்கேசன் துறைத் தளத்தினுள் தாக்குதல் நடத்திய அங்கயற்கண்ணி நினைவாக விசேட நீரடி நீச்சல் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெலிக்கந்தையில் இன்னுமொரு தாக்குதல்?

பொலனறுவைப் பகுதியில் அமைந்துள்ள வெலிகந்த இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருப்பதாக இந்திய செய்தித் தாபனமொன்று திங்களன்று(25.04.95) செய்தி வெளியிட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான புலிகள் சுற்றி வளைத்து இவ் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செய்தி பற்றி மேலதிக தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

# வடக்கு கிழக்குக்கு ஜெரி டி சில்வா விஜயம்



மூன்று மாதகால சமாதானத்தின் பின் மீண்டும் விஸ்வரூபம் எடுத்திருக்கும் யுத்தத்தின் நிலைபற்றி ஆராய சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஜெரி. டி. சில்வா வடக்கு கிழக்குக்கு விஜயமொன்றை மேற்கொண்டு படை முகாங்களில் படையினரையும் முகாம் அதிகாரிகளையும் சந்தித்துள்ளார்.

## கட்டுமுறிவுக்குள........

| | |
|---|---|
| AK LMG | - 04 |
| AK LMG ரவைக்கூடு | - 22 |
| AK LMG ரவைகள் | - 1000மேல் |
| T56 | - 12 |
| T56 புதியரகம் | - 02 |
| T56 ரவைக் கூடு | - 56 |
| T81 | - 02 |
| T81 ரவைக்கூடு | - 07 |
| 40 மி. மீ. மோட்டார் | - 01 |
| 40 மி. மீ ஷெல் | - 06 |
| கிளைமோர் | - 15 |
| மிதி வெடிகள் | - 65 |
| புகைக் குண்டு | - 04 |
| T81மோட்டார் ஷெல் | - 71 |
| கிரனைட் | - 65 |
| 60 மி. மீ மோட்டார் செல் | - 31 |
| நடுத்தர ரவைகள் | 21500 க்கு மேல் |
| தொலை நோக்கி பார்வை சாதனம் | - 03 |
| இரவு தொலை நோக்கி பார்வை சாதனம் | - 02 |
| புகைப்படக்கருவி | - 02 |
| பரா லைட் | - 06 |
| கிற் பை | - 32 |
| ஜெனரேட்டர் | - 01 |
| சப்பாத்து | 28 சோடி |
| புளட் புரூவ் ஜக்கட் | - 02 |
| AK ஹோல்சர் | - 11 |

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மீண்டும்....

ஆரம்பித்து நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், தலைவர் பிரபாகரனுக்கு சந்திரிகா கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாக அறியவந்துள்ளது.

கடிதம் பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரை அறியப்படவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மக்கள்....

சத்து 87 ஆயிரத்து 321 ரூபா 65 சதம் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

சந்திரிகா அரசில் எந்த அமைச்சரும் வீண் செலவு செய்வதில்லை எனும் கூற்றை இச் செய்தி பொய்யாக்கி விட்டது என எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் அரசுக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

இவ்வேளை, யாழ். மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையான கிளாலிப் பாதையில் போக்குவரவுக்காக பயன்படுத்தப்படும் படகுகளை சேவையில் ஈடுபடுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. இராணுவத் தளபதியின் மேற்படி விஜயத்தின் போது தமது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி ஆராயப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கட்டுமுறிவுத்.....

இத் தாக்குதலில் 37-இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள், 59 இற்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.இத் தாக்குதல் நடந்த வேளையில் இராணுவத்திற்கு உதவியாக சியாமா செட்டி, புக்காரா குண்டு வீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் தாக்குதல்களை நடாத்தியது. விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தி அவற்றை விரட்டியடித்துள்ளனர்.

பல இராணுவ வீரர்கள் தாக்குதல் தொடங்கிய உடனேயே காடுகளுக்குள் சிதறி ஓடத் தொடங்கினார்கள். முகாம் முற்றாக அழிக்கப்பட்டதுடன் , முகாமிலிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டன.


நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!

பாரிஸ் ஜுவல்லரி



தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து கொள்வதற்கு பாரிஸில்
கடந்த 10 வருடங்களாக பல வாடிக்கையாளர்களின் நன் மதிப்பையும்
பாராட்டுதலையும் பெற்று சிறந்து விளங்கும்
தங்க நகை ஸ்தாபனம்
பாரிஸ் ஜுவல்லரி

PARIS JEWELLERY

3, Rue Simart,
75018 Paris.
Tel: 42 62 44 85
Fax: 42 62 44 85

S.A.R.L.
M°: Marcadet Poissonniers
Bus: 31, 85, 56

# உலகச் செய்திகள்

## பாரிஸ் நிலக்கீழ் சிறையில் கொடுமை நீதிபதிகள் சங்கம் கொதிப்பு

பாரிஸ் பொலிஸாரின் கண்காணிப்பில் வெளிநாட்டவர்களை அடைத்துவைக்கும் நிலக்கீழ் சிறையை பார்வையிட நீதிபதி FRANCOIS SCOTTET ற்கு பொலிசார் அனுமதி மறுத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இச் சிறையில் ஏதோ குறைபாடுகள் இருப்பதனால்தான் நிலைமையை நேரில் சென்று நான் பார்வையிடுவதை பொலிசார் விரும்பவில்லை எனத் தெரிவித்த நீதிபதி பிரான்சில் தங்க அனுமதி மறுக்கப்பட்ட வெளிநாட்டவர் 26 பேரையும் உடனடியாக விடுதலை செய்தார். இவர்களில் ஒருவர் கையில் கட்டுடன் காணப்பட்டதை அவதானித்த நீதிபதி அதுபற்றி விசாரித்த போது தன் சக கைதி ஒருவர் தன்னை கொடுமையாக தாக்கியபோது பொலிசார் தலையிடாது இருந்ததை அக் கைதி தெரிவித்ததைக் குறிப்பிட்ட நீதிபதி "பொலிசாரின் தடுப்பு முகாமில் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலையை இச் சம்பவம் சுட்டிக்காட்டுகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி தீர்ப்பளித்த விடயங்கள் பொலிஸ் உயர் அதிகாரிகளால் முழுமையாக அமுல் படுத்தப்படவில்லை எனக் கைதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளில் ஒருவரான GERARD TCHOLAKIAN தெரிவித்துள்ளதுடன், இவ் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்களை சட்ட விதிகளுக்கு புறம்பான வகையில் பாரிஸ் பொலிசார் அடைத்து வைத்திருப்பது தொடர்பாக பிரான்ஸ் சட்டத்தரணிகள் சங்கம், நீதிபதிகள் சங்கம், மனித உரிமைக் கழகங்கள், வெளிநாட்டவா ஆதரவு மற்றும் தகவல் குழு (GROUP D'INFORMATION ET SOUTIEN AUX TRAVAILLEURS IMMIGRES) ஆகியன உட்பட பல மனித உரிமை நிறுவனங்கள் தமது ஆழ்ந்த அச்சத்தைத் தெரிவித்துள்ளன.

## ஜப்பானில் மூன்றாவது தடவையாக நச்சுவாயுத் தாக்குதல் அமெரிக்காவில் பயங்கர வெடிகுண்டுத்தாக்குதல்

கடந்த புதனன்று (19.04.95) ஜப்பானின் YOKOHAMA நகரத்தில் நச்சுவாயுத் தாக்குதலும், அமெரிக்காவின் OKLAHOMA நகரத்தில் வெடி குண்டுத் தாக்குதலும் நிகழ்த்தப் பட்டுள்ளது. இரு சம்பவங்களிலும் சமயக் குழுக்கள் சம்பந்தப் பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் நிகழ்த்தப்பட்ட இரண்டாவது நச்சுவாயுத் தாக்குதல் நிலக்கீழ் ரயில் நிலையமொன்றிலும், மூன்றாவது தாக்குதல் வர்த்தக நிலையமொன்றிலுள்ளும் நடாத்தப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரில் பாவிக்கப்பட்ட நச்சுவாயுவே இத்தாக்குதலிலும் பாவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமயத்தின் பேரால் கபட நாடகம் ஆடிய "ஓம் சின்றிக்கோ" சமயக்குழுவின் தலைவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருகின்றார்.

இச்சமயக் குழுவின் அலுவலகங்களில் இருந்து ஏராளமான இராணுவ தளவாடங்கள், ஆவணங்கள் கைப்பற்றப் பட்டுள்ளதுடன் நச்சுவாயுத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப் படக்கூடிய இரசாயன மூலப் பொருட்களும் தொடர்ந்து கைப்பற்றப்பட்டு வருகின்றன.

மேலும் இச்சமயக்குழுவின் இரகசிய தளமொன்றில் வெளிநாடொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட ஹெலிகொப்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நச்சுவாயுத் தயாரிப்பு போன்ற ஆபத்தான இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்தல், வைத்திருத்தல் போன்றவற்றை தடைசெய்யும் சட்டமூலத்தை ஜப்பானிய பாராளுமன்றம் விவாதித்துக் கொண்டிருந்த வேளை நச்சுவாயுத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஜப்பானில் நச்சுவாயுத் தாக்குதல் நடைபெற்ற அதே தினம் அமெரிக்காவில் OKLAHOMA நகரத்தில் பாரிய வெடிகுண்டுத் தாக்குதல் ஒன்று நிகழ்த்தப் பட்டுள்ளது.

இக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக அமெரிக்காவில் இயங்கிய DAVIDIANS என்ற மதக்குழு உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது பெயர் TIMOTHY Mc. VEIGH எனவும் இவர் முன்னாள் இராணுவ வீரர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தீவிர வலதுசாரி இராணுவக் குழுவின் உறுப்பினர் ஒருவர் பொலிசாரிடம் சரணடைந்துள்ளதுடன் குண்டுத் தாக்குதலில் தொடர்பிருப்பதையும் ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க அரச அறிவிப்பொன்று தெரிவிக்கின்றது. அந்த நபர் தனது ஒப்புதல் வாக்கு மூலத்தில் தமது சமயக் குழுவான DAVIDIANS தலைவர் உட்பட பல உறுப்பினர்கள் மீது அமெரிக்க பொலிசார் தாக்குதல் நிகழ்த்திய தினத்தின் (19.04.92)நினைவாகவே இத்தாக்குதலை நிகழ்த்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான எட்டு மாடிக்கட்டிடம் அமெரிக்க அரசுக்குச் சொந்தமானதென்றும், இராணுவத் துறை ஊழியர்களும், உளவுத்துறை ஊழியர்களுமாக 600 பேர் வரை இம் மாடிக் கட்டிடத்தில் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கட்டடத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 450 கிலோ வெடிமருந்து வெடிக்க வைக்கப்பட்டபோது இரண்டாம் மாடியில் இயங்கும் பாலர் பாடசாலை உட்பட அனைத்து மாடிகளுமே இடிந்து விழுந்தன.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி இக்குண்டு வெடிப்பில் பலியானோர் தொகை 80 எனவும், காணாமல்போனோர் தொகை 150 எனவும், காயமடைந்தோர் தொகை 200 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசமாகக் காயமடைந்தோரில் 40 பேர் குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் வெளியாகிய செய்திகள் இத்தாக்குதலை இஸ்லாமியத் தீவிரவாதிகளே செய்தார்கள் எனவும், அமெரிக்க WORLD TRADE CENTER மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்ட போது பாவித்த அதே தாக்குதல் முறையும் அதே வகை வெடி பொருள் உபயோகிக்கப் பட்டமையும் இச்சந்தேகத்தை கிளப்பியிருந்தன.

## ஆபிரகாம் லிங்கன் நினைவு தினம்

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, கல்வி கற்க தெருவிளக்குகளின் துணையை நாடவேண்டிய நிலைக்குள்ளாகியவர் ஆபிரகாம் லிங்கன். இறுதியில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக உயர்ந்து நின்ற ஆபிரகாம் லிங்கன், ஒரு திரைப்பட நடிகரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட நாள் 15.04.1865 ஆகும்.

அமெரிக்க ஜனாதிபதிகளில் தலை சிறந்தவராகக் கருதப்படும் இவர் அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்தவர். கறுப்பரும் வெள்ளையரும் சமன் என்ற சட்டத்தை இயற்றியவர். இவரது முடிவுகளை



எதிர்த்து பெரும் கலகம் ஏற்பட்டபோதும் இறுதியில் ஆபிரகாம் லிங்கனே வெற்றி கண்டார்.

## ருவண்டாவில் 8000 பேர் வரை படுகொலை

ருவண்டாவில் எண்ணாயிரம் (8000) HUTU இனமக்கள் அரசபடைகளால் சனியன்று (22.04.95) சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் ஏற்பட்ட இனக்கலவரத்தில் 5 இலட்சத்துக்கு மேற்பட்ட ஹுட்டு இனத்தினர் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏராளமான ஹுட்டு இனத்தினர் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர். இவ்வாறு இரண்டு இலட்சம் பேர் தஞ்சமடைந்த அகதி முகாம்களை கட்டாயமாக மூடிவிடுவதென ருட்சி பெரும்பான்மையினராகக் கொண்ட இராணுவம் முடிவு செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் தெரியுண்டும், இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலும் இவ் எண்ணாயிரம் பேர் பலியாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இனக்கலவரம் ஏற்பட்டபோது பிரெஞ்சு இராணுவம் இவ் அகதி முகாம்களை ஏற்படுத்தியிருந்தது. பின்னர் பிரெஞ்சு இராணுவம் வெளியேறிய பின்னர் இம் முகாம்கள் பாதுகாப்பின்றி இருந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ருவண்டாவில் ஏற்பட்ட ஹுட்டு - ருட்சி இன மோதல் அதன் அண்டை நாடுகளுக்கும் பரவி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## உரிமைக்குக் குரல் கொடுத்த சிறுவன் சுட்டுக்கொலை

நான்கு வயதில் பாகிஸ்தானிய தொழிலதிபா ஒருவரால் விலைக்கு வாங்கப்பட்டு 11 வயது வரை கம்பளத் தொழிற்சாலையில் அடிமையாக வேலை செய்த சிறுவன் IQBAL MASIH ஞாயிறன்று 16.04.95 பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் "சிறுவர்கள் விலைக்கு விற்கப்படுவதும் இவர்களை பெரிய முதலாளிகள் அடிமைகளாக வைத்து வேலை வாங்குவதையும் கடுமையாக எதிர்த்து பிரசாரம் செய்தவன் இச் சிறுவன் தொழிலதிபா ஒருவரின் பிடியில் இருந்து தப்பிய பின்னர் குழந்தைகள் அடிமைத்தனத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்து வந்தார்.

பாகிஸ்தானில் நிலவும் சிறுவர் அடிமைத்தனத்தை எதிர்த்த சர்வதேச பிரசாரத்தின் ஒரு அங்கமாக கடந்த நவம்பரில் சுவீடனில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.



# அமெரிக்க தலைவருக்கு இந்தியாவில் கசப்பான அனுபவமாம்!

கடந்த (18.04.95) இந்தியா விஜயம் செய்திருந்த அமெரிக்க நிதி மந்திரி றொபர்ட் ருபன் (ROBERT RUBIN) கரு கசப்பான அனுபவம் என மேற்கத்தைய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டிருப்பதாவது அமெரிக்க நிதி மந்திரி இந்தியா விஜயம் செய்த அதே நாட்களில் ஈரானிய ஜனாதிபதி ரவ்சன்ஜானி (RAFSANJANI)யும் புது டெல்லியில் சுற்றுப்பயணம் செய்தார் என்றும் ஈரானிய தலைவரின் விஜயம் பற்றி அமெரிக்க தலைவருக்குத் தெரிவிக்கப்படவில்லையாம். எனினும் இந்தியப் பத்திரிகைகள் உட்பட பல சர்வதேசப் பத்திரிகைகள் ஈரானியத் தலைவரின் விஜயத்தை முன்கூட்டியே உறுதி செய்திருந்தன.

இவ்விடயம் முன்கூட்டியே தமக்குத் தெரிந்திருந்தால் அமெரிக்கப் பிரதிநிதி தனது விஜயத்தை தள்ளிப் போட்டிருப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

ஈரானிய ஜனாதிபதிக்கு அரச மரியாதையுடன் திங்களன்று (17.04.95) இரவு விருந்து அளிக்கப்பட்டபோது அமெரிக்க நிதி மந்திரி தனிமையாக தனது மனைவியுடன் தனியார் விடுதியொன்றில் இராப்போசனத்தை உண்டாராம். இதனால் தனக்கு கௌரவக் குறைவு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க சார்பில் வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கும் இந்தியாவுக்கும் இடையே எல்லைச் சூழ்நிலைகளைப் பொருத்துவது சம்பந்தமாக பேச்சுவார்த்தையில் ஈடுபடவே ஈரானிய ஜனாதிபதி இந்தியா விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் இந்திய மாநிலமான காஸ்மீர் விடயம் பற்றிக் கருத்து வெளியிட்ட ஈரானிய ஜனாதிபதி பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே காஸ்மீர் விடயத்தில் நடுநிலை வகிக்க விருப்பம் தெரிவித்துள்ளதுடன் முதலில் அமெரிக்கர்களின் தலையீட்டை இருநாடுகளும் நிராகரித்தால் மட்டுமே அது சாத்தியம் எனத் தெரிவித்துள்ளார்.



இந்தியப் பாராளுமன்றத்தில் ஈரானிய ஜனாதிபதியின் உரையைக் உற்றுக் கேட்கும் இந்தியப் பிரதமர்

## அமெரிக்காவை வென்றார் கடாபி

அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ. நா. சபை விதித்த தடையை மீறி ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிக் கொண்டு லிபிய விமானம் மெக்கா செல்லும் என சூழுரைத்திருந்தார் கடாபி (ஈழமுரசு-13) திட்டமிட்டபடி லிபிய விமானத்தளத்தில் இருந்து 145 பயணிகளையும் ஒரு அரசியல் முக்கியஸ்தரையும் ஏற்றிக் கொண்டு விமானம் சவூதி அரேபியா சென்றடைந்தது. எகிப்திடமிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானமே இப்பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

புதனன்று (19.04.95) கடாபிக்கு இவ் வெற்றி கிடைத்துள்ளது. இதேவேளை ஐ. நா. சபை பாதுகாப்புக் கவுன்சில் அவசரமாகக் கூடி லிபியா மீது விதிக்கப்பட்ட தடையை ஹஜ் பயணத்துக்காக தளர்த்துவதெனவும் 6000 ஹஜ் யாத்திரிகர்கள் இவ்வாறு லிபியாவில் இருந்து செல்ல அனுமதிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

எனினும் பயணிகள் பற்றிய முழு விபரமும், பயண விபரங்களும் தமக்குத் தரப்பட வேண்டும் என ஐ. நா. கோரியுள்ளது.

ஐ. நாவின் இம் முடிவுகளுக்குக் காத்திராதவராக, திட்டமிட்டபடி பயண ஏற்பாடுகளைச் செய்து வெற்றியடைந்துள்ளார்.

## ஈரானுக்கு சீனாவின் அணு உலை அமெரிக்கா கடும் எதிர்ப்பு

அமெரிக்கா எதிர்த்தாலும் ஈரானுக்கு அணு உலை கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் மாற்றமில்லை என சீனா திங்களன்று (17.04.95) திட்டவட்டமாக அறிவித்துள்ளது. ஈரானுக்கு அணு உலை விற்கும் ரஷ்யாவின் திட்டத்தை தடுக்க முயற்சித்து தோல்வி கண்ட அமெரிக்கா சீனாவிடமும் அதே முயற்சியை மேற்கொண்டு தோல்வி கண்டுள்ளது.

ஈரானில் இருந்து வெளியாகும் அறிக்கைகளின்படி இவ் அணு உலைகள் மின்சார உற்பத்தி போன்ற தேவைகளுக்காகவேயன்றி வேறு இராணுவ நோக்கங்களுக்காக அல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, ஆகியன தவிர மற்ற நாடுகள் அணு ஆயுதத்தை வைத்திருப்பதை, அணு ஆயுத ஆராய்ச்சியில் ஈடுபடுவதை தடை செய்ய வல்லரசுகள் முனைந்து நிற்கின்றன.

சீனா இந் நிலைப்பாட்டை முழுமையாக ஏற்கவில்லை.

கடந்த 17.04.95 திங்களன்று நியூ யோர்க்கில் ஆரம்பமான அணுஆயுத தவிர்ப்பு ஒப்பந்த நீடிப்பு மாநாட்டில் 180 நாடுகள் கலந்து கொள்கின்றன. மூன்று வாரங்கள் நடைபெற இருக்கும் இம்மாநாடு எடுக்கும் தீர்மானம் உலக அணுஆயுத போட்டா போட்டியின் எல்லைக்கு இட்டுச் செல்லலாம்.

ஐரோப்பாவில் நிலவும் போர்ச் சூழ்நிலையை குறித்து சர்வதேசச் சஞ்சிகையொன்றில் வெளியாகிய இவ்விவரணக் கேலிச் சித்திரம் பொஸ்னியாவில் 32க்கு மேற்பட்ட பிரான்சிய சமாதானப் படைவீரர்கள் பலியாகிய நேரத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த வாரம் பொஸ்னியா சென்ற ஐ. நா. பிரதிநிதியை பணயம் வைக்கும் அளவிற்கு சேபியர்கள் சென்றுள்ளார்கள்




## வாரக் குறிப்பு

**15.04.95 சனிக்கிழமை**

- ⇨ முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியும் உலகுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கிய ஆபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்ட தினம்(15.04.1865).
- ⇨ வெளிநாட்டவர் ஒருவரைத் தாக்கியதற்காக பாரிஸ் பொலிசார் ஒருவர் கைது. எட்டுப் பொலிசார் வேலை நீக்கம்.

**16.04.95 ஞாயிற்றுக்கிழமை**

- ⇨ யசீர் அரபாத் பாலஸ்தீனப் போராளிகளுக்கெதிராக மேலும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இஸ்ரேலியத் தலைவர் கோரிக்கை.
- ⇨ பொஸ்னியாவில் போர் மோசமாவதைத் தடுக்க ஐ.நா. நேட்டோ, சபைகள் கூடவேண்டும் என பிரான்ஸ் கோரிக்கை.
- ⇨ வட அத்திலாந்திக் கடலில் மீன் பிடிப்பது சம்பந்தமான ஐரோப்பிய கொமிசனுடன் கனடா உடன்பாடு. இஸ்பானிய விவசாய அமைச்சர் கண்டனம்.
- ⇨ கடந்த வெள்ளியன்று ஐ.நா. விதித்த புதிய எண்ணை விற்பனை கட்டுப்பாட்டு விதிகளை ஏற்க ஈராக் மறுப்பு.

**17.04.95 திங்கட்கிழமை**

- ⇨ ஈரானிய ஜனாதிபதி ரவ்சன்ஜானி இந்திய விஜயம். இந்திய பிரதமர் பாரம்பரியங்களுக்குப் புறம்பாக விமான நிலையம் வரை சென்று வரவேற்றார்.
- ⇨ அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்த நீடிப்பு மாநாடு நியூயோர்க்கில் ஆரம்பம். சீனா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, ஆகியநாடுகளே மட்டுமே அணு ஆயுதம் வைத்திருக்க அங்கீகரிக்கப்பட்ட நாடுகளாகும். மற்ற நாடுகள் அணு ஆயுதம் வைத்திருக்கக் கூடாதென்றும் இஸ்ரேல், பாகிஸ்தான், இந்தியா, ஆகிய நாடுகள் அணு ஆயுத தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுவதை இவர்கள் விரும்பவில்லை.
- ⇨ சிங்கப்பூரில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் பெண்ணின் மரணதண்டனை நிறைவேற்றியதைத் தடுக்க போதிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பிலிப்பைன்ஸ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர ROBERTO ROMULO இராஜினாமா.
- ⇨ ஈரானில் வெளி நாட்டுத் தொலைக்காட்சிச் சேவைகளைப் பெற பாவிக்கப்படும் பரவளைவுத் தட்டுக்களை (PARABOLIC ANTENA) வைத்திருக்கத் தடை. அவற்றை அகற்ற 21.04.95 வரை காலக்கெடு.

**18.04.95 செவ்வாய்க்கிழமை**

- ⇨ துருக்கி எழுத்தாளரான YASAR KEMAL ஐரோப்பிய மனித உரிமை கொமிசன் முன் துருக்கிக்கெதிராக வழக்கு. இவர் வெளியிட்ட கட்டுரைத் தொகுதியான "FREEDAM OF OPINION IN TURK" எனும் புத்தகத்தை துருக்கி தடை செய்துள்ளது.
- ⇨ கடும் நோய் வாய்ப்பட்ட வின்னி மண்டேலா வைத்தியசாலையில் அனுமதி.

**19.04.95 புதன்கிழமை**

- ⇨ இலங்கையில் சந்திரிகா அரசுடன் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தில் இருந்து புலிகள் விலகல்.
- ⇨ அமெரிக்காவில் OKLAHOMA நகரில் பலத்த குண்டுத் தாக்குதல். DAVIDIAN மதக்குழு உறுப்பினர் கைது.
- ⇨ இம் மதக்குழுவின் தலைவர் உட்படப் பல உறுப்பினர்கள் தற்கொலை செய்து கொண்ட இரண்டாம் ஆண்டு நினைவு நாள்.
- ⇨ இஸ்பெயினில் தனி நாடு கேட்டுப் போராடும் ETA எனப்படும் குழுவினர் ஸ்பெயின் எதிர்க்கட்சித் தலைவர் மீது குண்டுத் தாக்குதல். எதிர்க்கட்சித் தலைவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.
- ⇨ ஜப்பானில் AUM மதக்குழு மீண்டும் நச்சுவாயுத்தாக்குதல்.
- ⇨ 5 இலட்சம் ஹூட்டு(HUTU) இனத்தவரை பலி கொண்ட ருவண்டா இனமோதலால் 2 இலட்சம் ஹூட்டு(HUTU) அகதிகள் தங்கியுள்ள முகாம்களை மூடிவிட ருவண்டாவில் பதவியில் இருக்கும் டுட்சி(TUTSI) இன அரசு முடிவு
- ⇨ ஐ. நா. தடையை மீறி கடாபியின் விமானம் சவுதி அரேபியா நோக்கிப் பயணம். இதனால் பின்னர் கூடிய ஐ.நா.சபை ஹஜ் யாத்திரிகர்கள் இவ்வாறு செல்வதை சில கட்டுப்பாடுகளுடன் அனுமதிப்பதாக அறிவிப்பு.
- ⇨ குர்திஸ் பிரதேசத்தில் இருந்து ஈராக்கியப் படைகள் மே மாதமளவில் வெளியேறி விடும் எனத் துருக்கிப் பிரதமர் அமெரிக்காவில் அறிவிப்பு.
- ⇨ அல்ஜீரிய ஜனாதிபதி மொகமட் புடியாவ(MOHAMED BOUDIAF) கொல்லப்பட்டு மூன்று வருடம்.
- ⇨ உளவு பார்த்ததற்காக மூன்று அமெரிக்கர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக ஈரானிய வானொலி அறிவிப்பு.

**20.04.95 வியாழக்கிழமை**

- ⇨ அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்த நீடிப்பில் இஸ்ரேலுக்கு விசேட வசதிகள் செய்யப்படுவது குறித்து எகிப்து கடும் எதிர்ப்பு.
- ⇨ வட கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நிகழ்ந்த அணுசக்தி தொடர்பான பேச்சுவார்த்தை முறிவு.
- ⇨ கடந்த 26.03.95 அன்று அமுலுக்கு வந்த ஐரோப்பிய எல்லைத் தளர்வை பிரான்ஸ் சரியாக அமுல்படுத்தவில்லை என பெல்ஜியம் குற்றச்சாட்டு.
- ⇨ யூகோஸ்லாவியாவில் மார்சல் டிட்டோவின் வலது கரங்களில் ஒருவராக இருந்து கம்யூனிசத்தைக் காத்த மூத்த தலைவர் மிலோவன் டிலாஸ் (MILOVAN DJLAS) தனது 83வது வயதில் காலமானார்.
- ⇨ ஜேர்மனி அதிபர் ஹேமாட் இன் அலுவலகம் பொலிசாரால் சில மணிப்பு குண்டு வைக்கப்பட்டிருப்பதாக ஏற்பட்ட புரளியே காரணம்.
- ⇨ மெக்சிக்கோவில் வாழும் மாயாக கலாச்சார இந்தியர்களுக்கும் மெக்சிக்கோ அரசுக்கும் பேச்சுவார்த்தை ஆரம்பம்.
- ⇨ கனடாவின் பிரின்ஸ் எட்வாட் தீவு (ILE DU PRINCE-EDOUARD) பாராளுமன்றத்துள் குண்டு வெடிப்பு.
- ⇨ ரஷ்சிய தொழிலாளர்களின் சம்பளத்தை (20500 ரூபிள்), இரண்டு மடங்காக (43700 ரூபிள்) அதிகரிக்கும் சட்டமூலத்தில் பொரிஸ் ஜெல்சின் கையெழுத்திட்டார்.

**20.04.95 வெள்ளிக்கிழமை**

- ⇨ ஜேர்மனிய இனவாத கட்சியான NPD கட்சித் தலைவருக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.
- ⇨ துருக்கித் தலைநகரில் உம்ஹூரியத் (UMHURIYET) என்ற இடத்தில் இடதுசாரிப் பத்திரிகைக் காரியாலயம் முன் குண்டொன்று வெடித்ததில் ஒருவர் பலி.
- ⇨ வட அயர்லாந்தில் இருந்து மேலும் 400 படையினர் விலகல்.
- ⇨ 500 பாலஸ்தீனர்கள் மெக்கா பயணம். இவர்கள் முதல் தடவையாக பாலஸ்தீனக் கடவுச்சீட்டை பாவிக்கின்றார்கள்.




அன்பான வாசகர்களுக்கு!

கடந்த வாரம் முதல் பாசக்கடிதப் போட்டிக்கான கடிதங்கள் பிரசுரமாகின்றன. இவற்றில் சிறந்த கடிதங்களை தெரிவு செய்யவேண்டிய பொறுப்பு உங்களுடையதாகின்றது.

வெளியாகும் அனைத்துக் கடிதங்களையும் சேகரித்து, இறுதியில் தரமான முதல் மூன்று கடிதங்களையும் நீங்கள் தெரிவுசெய்ய வேண்டும். இறுதியாக வெளிவரும் பாசக்கடிதப் பக்கத்தில் விதிமுறைகள் அடங்கிய போட்டிக்கான கூப்பனை இணைப்போம்.

உங்கள் தேர்வுக்கு இப்பொழுதே தயாராகுங்கள். சிறந்த கடிதங்களை நீங்கள் தெரிவுசெய்யுங்கள். உங்களில் சிறந்த அதிர்ஷ்டசாலிகளை நாங்கள் தெரிவுசெய்கிறோம்.

- ஆசிரியர் குழு -

## போட்டிக் கடிதம் - 7

டென்மார்க்
20.04.1995

என் அன்பு சர்மிளாவிற்கு!

உன்னுயிர் சாந்தி எழுதிக் கொள்வது. நான் நலமில்லை; உன் நலமறிய ஆவல்.

மேலும் உன் கடிதம் கடந்தவாரம் கிடைத்தது. அத்துடன் அம்மா, தங்கைச்சிமார், தம்பியும் எழுதிய இரு கடிதங்களும் கிடைத்தது. ஊரில் இருந்து கடிதங்கள் வராவிட்டால் ஒரே கவலை; ஒரு கவலை வந்தால் தற்கொலை செய்ய வேண்டும் எனும் விரக்தியுடன் பைத்தியம் பிடிக்காக் குறையுடன் தலையைப் பிய்க்க வேண்டியுள்ளது. என்ன செய்வதென்று தெரியவில்லை. 'சாந்தி' என்று அம்மா, அப்பா பெயர் வைத்தார்கள். ஆனால் என் மனத்தில் சாந்தியும் இல்லை; சந்தோசமும் இல்லை. செத்துவிட்டால் என்னவென்ற சிந்தனையே சுற்றிச் சுற்றி வருகின்றது. பெயருக்குத்தான் வெளிநாடு இங்கு பெருகிவழியும் எம்மவரின் சோக்குகளைச் சொல்லியழ ஒரு சுத்தமுள்ள ஜீவனில்லை. ஏனென்றால் சுயநலமும், பணமும் பெயரளவில் சுதந்திரத்தைப் பேசிக் கொண்டு, என் போன்ற சின்ன உள்ளங்களை சுடுகாட்டிற்கே அனுப்பச் சூத்திரங்கள் தயாரிக்கின்றன. இச் சுயநலவாதிகளிடமிருந்து சுதந்திரமடைவேன் எனும் நம்பிக்கை மொட்டு என்னுள் இன்னும் கருகாது இருப்பதால்தான் இன்னும் உயிருடன் இருக்கிறேன். ஆனால் நம் தமிழ்ச் சமுதாயம் இன்னும்தான் திருந்தவில்லை. இதனால்தானோ இன்னும் நாம் இப்படியே இருக்கிறோம். தேசம், தேசியம், பெண்ணடிமை, சீதனம், சுதந்திரம் என்றெல்லாம் தொண்டைகிழிய எல்லோரும் கத்துகிறார்களே தவிர எவனும் கத்துற மாதிரி தன்ர குடும்பத்தை நடத்துகிறான்களில்லை. இப்படியான உங்களுக்கெல்லாம் எதுக்கடா இதெல்லாம் என்று கேட்டுவிட்டால், எல்லாம் மேடைக்குத்தானென்றும் சிலர் சொல்லிவிட்டார்கள். இந்தப் பரதேசிக் கூட்டங்களுக்குப் பின்னால் ஒரு பன்னாடைக் கூட்டமும் அலைகிறதே என்பதை எண்ணத்தான் எரிச்சலாகவும், என்னையறியாத ஏமாற்றமும் என்னை எரிக்கிறது. இந்த எளியவர்களை விட்டு என் மண்ணிற்கு ஓடி வந்துவிடத்தான், என் வீட்டிற்கு எத்தனையோ கடிதம் எழுதிவிட்டேன். ஆனால் அவர்களோ, இந்தச் சனி வாழ்வின் சந்தோசத்தைவிட்டு வந்துவிடாதேயென்று சொல்கிறார்கள். என் நிலையை எப்படி விளக்குவதென்றும் தெரியவில்லை. அவர்களுக்கு விளங்கும் என்பதும் விளங்கிக் கொள்ள முடியாது. ஏனென்றால் என் அம்மா சரி, அப்பா சரி, சகோதரங்கள் சரி ஏன் எமது சமுதாயமும் (உன்னைத் தவிர) சரி விளங்கிக் கொள்வது என்பது இந்த ஜென்மத்தில்....

பொறுப்பில்லா அப்பா, பிள்ளைகளுக்காகத் தன்னைத் தேய்க்கும் அம்மா, படித்து முன்னேற ஏங்கும் தம்பி, தங்கைமார். பொறுப்பில்லா அப்பாவின் பொறுப்பை 18 வயதில் ஏற்று இன்று 21 வயதிற்கிடையில் ஏனடா வாழ்க்கை என்று எதிர்காலம் என்றதன் பயமே இன்றி ஏதோ எனக்கு வேண்டாம் என்னை 18 வருடம் வரை படிக்கவைத்து (அதுவும் பகல்கனவாகி) ஆளாக்கிய அம்மாவிற்காகவும், என் உடன்பிறந்த மூன்று ஜீவன்களுக்காகவும் வாழ வேண்டும் என்ற ஆசையில்தான் இந்த நரக வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இவ் வாழ்வை அவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ முடித்துவிட்டு என் தாய் மண்ணின் மடியில் படுத்துறங்குவேன் என்ற ஆசையும் என்னிதய மூலையொன்றில் அடித்துக் கொண்டுதானிருக்கின்றது.

தங்கச்சிக்கு இங்கு யாராவது பெடியனைப் பேசச் சொல்லி எழுதியிருந்தாய் சர்மிளா. ஆனால் எனக்கு அது விருப்பமில்லை. எக்கச்சக்கம் சீதனம் கேட்கிறார்கள். அத்துடன் ஊர்வசி, ரம்பை, ரேவதிபோல் அழகு இருக்க வேண்டுமாம். அடுத்தது கற்புக்கும் க்யாரண்டி தேவையாம். ஏனென்றால் ஏஜென்சி மூலம் அவர்களுக்குப் பெண்களை அனுப்பும்போது, அவர்கள் எப்படி இருந்தார்கள் என்பது தெரியாதாம். இத்தனையும் கேட்பவர் பெரும் இளவரசன் இல்லை. கையில் போத்தல், வாயில் ஊதுவத்தி (சிகரெட்), காதில் கடுக்கன் ஒன்று, கழுத்தில் இரண்டு செயின். இவர்களுக்கு எதிர்மாறான உத்தமர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் யார் தெரியுமா? இன்றும் மண்ணின் நினைவுகளுடன் வாழும் சில இளைஞர்கள்தான். என்னைத் தவிர இங்கு எவரையும் என்னால் நம்ப முடியவில்லை. ஏனென்றால் என் எதிர்பார்ப்புகள் எல்லாம் ஏமாற்றமாகவே இருக்கின்றது.

86ம் ஆண்டு வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் 6ம் வகுப்பில் சேர்ந்தபோது, எத்தனை எதிர்பார்ப்புடன் படிக்கத் தொடங்கினேன். இலங்கை இராணுவத்தால் எம் பாடசாலை தகர்க்கப்பட்டு சொந்த ஊரையும் விட்டு வெளியேறி ஊரூராய் அலைந்தபோதுகூட, பல்கலைக்கழகம் போவேன் என்றுதான் பகல்கனவு கண்டேன். பின்பு இந்திய இராணுவம் புல்லாலைக் கட்டுவன் முகாம் வாசலில் வைத்துப் புத்தகங்களைக் கிழித்தபோது துணைநின்ற தேசத் துரோகிகளின் துப்பாக்கிச்சோங்கு தோள்களில் பதிந்தும், படிக்க வேண்டும் என்ற ஆசை விடவில்லை. 90ம் ஆண்டு 10ம் வகுப்பிற்குப் போனதும் மார்கழி மாதம் பரீட்சை நடக்கும் என்ற ஆசையுடன் கண்ணாகம் வாணி ரியூசனுள் கால் வைத்தபோது, எத்தனை கனவுகளுடன் என் கற்பனை வானமும் ஆசைவிதைகளை விதைத்திருந்தது. பின்பு பரீட்சை பிற்போடப்பட்டுக் கொண்டு வரவர படிப்பும் என்னிடமிருந்து பறிபோய்க்கொண்டிருந்தும், 91 மார்கழிப் பரீட்சை நடந்தபோது பச்சைத் தண்ணியை காலில் வைத்துக் கொண்டு கண்ணால் தண்ணி ஊற்ற ஊற்ற நித்திரை முழித்துப் படித்தும், அந்தப் பரீட்சை முடிவைக் கூடப் பார்க்க முடியாது 92 சித்திரை 04 அன்று என் கற்பனைக் கனவுகளைக் காத்துவைத்திருந்த என் தாய்த் தமிழீழத்தைப் பிரிந்து இலங்கையில் கால் வைத்து, டென்மார்க் வந்தேனோ, அன்றே என் வசந்தம் தொலைந்தது. சரி போனது போகட்டும், என் சகோதரங்களாவது படித்து என் மண்ணுக்குச் சேவை செய்ய வேண்டும். அவர்கள் என் இவ் ஆசையை நிறைவேற்றுவார்கள் என்றே நம்புகிறேன்.

சர்மிளா எனக்கு இந்த நாட்டில் பிடித்தது இரண்டே இரண்டு விடயங்கள். ஒன்று அரச நிர்வாகம். அடுத்தது எந்த வயதிலும் படிக்கலாம். எல்லோரும் சமமாக வாழ வேண்டும் என்றதற்கு பொருளாதாரத்தைச் சமப்படுத்தி, இதற்குமேல் ஒரு சதமும் இருக்கக் கூடாது என்று நியால் பணமோகங்களை திருத்தி பட்டினியால் எவரையும் சாகவிடாது வாழவைத்திருக்கிறது. 60 வயதானாலும் பள்ளிக்கூடமாவது போய் ஏதாவது படி என்று எல்லோரையும் படிக்கவைக்கிறது இந்த நாட்டு அரசு. இவை நிச்சயம் நாளை நமது சுதந்திர பூமி விடியும் போது நம் நாட்டிலும் வரும். அப்போதாவது நம்மவர் நீ பெரிது, நான் பெரிது என்றதை எல்லாம் விட்டு நாமெல்லாம் தமிழர் என்று வாழ்வார்கள் என்று நம்புகின்றேன்.

சர்மிளா, நான் இப்போ உங்கு வந்து 8ம் வகுப்பிலிருந்து படிக்க வேண்டும்போல் உள்ளது. சயிக்கிளை கண்ணாகம் ஐயனார் கோவிலடியில் விட்டுவிட்டு, கந்தரோடையிலிருந்து அளவெட்டி வயல், குளக் கரைகளெல்லாம் சுற்றினால் எப்படி இருக்கும்! மறந்து, தேவதாஸ் மாஸ்ரர், சதீஸ் மாஸ்ரர், வசந் மாஸ்ரர், ஈசன் மாஸ்ரர், யசோ மாஸ்ரர், குலம் மாஸ்ரர் எல்லோரும் இப்பவும் வாணியில்தான் படிப்பிக்கின்றார்களா? கடைசியாக சதீஸ் மாஸ்ரரிடம் படித்த திரிகோண கணிதமும், வசந் மாஸ்ரரிடம் படித்த வெப்பவியலும், ஈசன் மாஸ்ரரிடம் படித்த ராமாயணமும், குலம் மாஸ்ரரிடம் படித்த சந்தான குரவர்களும் திரும்பி ஒரு தடவை இப்போது படித்தால் எப்படியிருக்கும்?. சதீஸ் மாஸ்ரர் அடிக்கடி 'பரதேசியள், பரீட்சை வருகிறது படியுங்கோ' எனும்போது சிரித்துச் சிரித்து, சித்திரை 1 இல் மையடித்த நினைவு... வசந்தம் மாஸ்ரரைக் கண்டால் அவருக்குத் தெரியாமலேயே வசந்தம் பாடிவர... எனும் பாடலை வசந்த் எனும் பெயருடன் இன்னொரு பெயருடன் இணைத்துப் பாடும் அந்தப் பாடல்... கடந்து போன அந்த வசந்த காலங்கள் திரும்பக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

செவ்வாய் தவறாது துர்க்கை அம்மன் கோயிலுக்குப் போய் வரும்போது, சுழட்டியம்மனில் என்ன வரம் வாங்கி வருகின்றீர்கள் என்று கேட்கும் சக மாணவர்களுக்குக் கடலைக் கோது சேர்த்துக் கொடுத்து கிளிக்கோடு மறித்த அந்த நாட்கள் இன்றைக்குக் கனவில் கூட வருவதில்லை. 91ம் ஆண்டு ஆனையிறவுச் சண்டை நடந்துகொண்டிருக்க வாணியில் எமது O/L வகுப்பு மாணவ, மாணவிகள் சேர்ந்து போராளிகளுக்கு உணவு தயாரித்து மண்மூட்டை கட்டுவதற்கு ஊரூராய் சாக்குகள் சேர்த்துக் கொண்டு வரும்போது, மதி கேட்டானே இத்தனை குதூகலமாய் இன்றைக்குப் பொழுதோண்டில் எடுபட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் நாளை பிரியும் போது என்ன செய்வது என்றானே. அன்று நான் சிந்திக்கவில்லை, உங்களையெல்லாம் விட்டு அப்படியொரு பிரிவு எனக்கு வரும் என்று. பகல் நேர வகுப்புக்கு வரும் ஒவ்வொருவரும் கொண்டுவரும் சாப்பாட்டை மாறி மாறி எடுத்ததெல்லாம் இன்ப நாளிகைகள்.

இந்த மண் எங்களின் சொந்தமண்... பாடல் புகழ் சாந்தனின் இசை நிகழ்ச்சி பார்ப்பதற்காக வீட்டில் எத்தனை பொய் சொல்லியிருப்பேன். புதுவை இரத்தினதுரையின் கவிதைகளை வெட்டிச் சேர்த்து அக்கவிதைகள் சிலவற்றை சில கலைக்கோட்ட ஜெயமங்களுக்கு முன்னால் சொல்லியது...

சரி சர்மிளா போனா பஸ்சுக்குக் கைகாட்டி அது திரும்பப்போவதேயில்லை. வேறு நகுலண்ணாவை ஒரு வீடியோக் கசட்டில் பார்த்தேன். சீலண்ணாவைப் பூநகரிச் சண்டைக் கொப்பியில் பார்த்தேன். மற்றும் அருளண்ணா, நந்தனண்ணா, ஜெயாண்ணா, மதியண்ணா, துசியண்ணா, ரவியண்ணா, சங்கரண்ணா, சியாமண்ணா, சிறியண்ணா, சிட்டண்ணா! (வோகி) எல்லோரும் என்ன மாதிரி இருக்கிறார்கள். மற்றும் பிரேமிளா, நித்தியா, மனோவின் நிலைமைகள் என்னமாதிரி? ஒளிவீச்சு வீடியோ கசட் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பார்ப்பேன். மாதம் ஒரு முறை எரிமலை மாத இதழ். களத்தில் பத்திரிகை மாதம் இரு முறை வரும். அவற்றைப் படிக்கும்போது மனதில் ஏதோ குற்றிக் கொண்டேயிருக்கும். இடைக்கிடை தாயகத்தில் எடுக்கப்பட்ட படங்கள் போடுவார்கள் இங்குள்ள விடுதலைப் புலிகள் அமைப்பினர். கடைசியாகப் பிருந்தாவனம், சின்ன விழிகள், உயிராயுதம் படமும் பார்த்தேன். சின்னவிழிகள் படத்தில் வரும் அந்தக் கதாநாயகி, கதாநாயகனை பார்த்துவிட்டு ஒரு கிழமையாக இரவில் அழுதிருக்கிறேன். உயிராயுதம் படத்தில் ஓர் கரும்புலி வீரன் தன் காதலிக்குக் கடிதம் எழுதிவைத்துவிட்டுப் போவதைப் பார்த்தபோது பழைய நினைவொன்று எனக்குள் மோதிக் கொண்டிருந்தது. அது என்ன என்பது உனக்குப் புரிந்திருக்கும். தனிமையில் இருந்து கடந்துபோன என வசந்த காலங்களை நினைத்து அழுதுகொண்டு வெளியில் சிரித்துக் கொண்டிருக்கும் என் தனிமையின் கொடுமையில் இருந்து விடுபட்டு என் தாயகத்திற்கு விரைவில் வந்து நானும் சுதந்திரமாக, நிம்மதியாகச் சாகவேண்டும். அந்த நாளுக்காகக் காத்திருக்கும் என் காலங்கள் விரைவில் தாயகம் திரும்பும் என்று நம்புகின்றேன்.

இன்னும் நிறைய எழுத வேண்டும் போலிருக்கின்றது. ஆனால் என் கைகள் வலிக்கிறது. அதனால் இத்துடன் முடிக்கின்றேன். வேறு உடன் பதில் எழுதவும்.

இப்படிக்கு
உன்னுயிர் நண்பி
ஆ. சாந்தினி

சூ
வி
சி
ல்
தரமான பொருட்கள் மலிவு விலையில்
உங்களின் அன்றாடத் தேவை அறிந்து
எங்களின் இனிய சேவை
மக்கள் கடை
HEINRICHSTR. 85,
8005 ZURICH
TEL: 01-271 73 74
SEILER STR. 4, 3011 BERN
TEL: 031-382 27 20

# பெண்கள் பல விதம்

## பாதை மாறுகிறார் அஸ்வினி நாச்சப்பா



இந்தியாவின் தலை சிறந்த ஓட்டப்பந்தய வீராங்கனை அஸ்வினி நாச்சப்பாவை இனி மைதானத்திலும் காண முடியாது; சினிமாவிலும் காணமுடியாது; இரண்டுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் அஸ்வினி.

'அஸ்வினி' என்ற படத்தில் ஓட்டப்பந்தய வீராங்கனையாகவே நடித்து தனது சினிமா வாழ்வை ஆரம்பித்த அஸ்வினி தெலுங்குத் திரையுலகில் முன்னணி நட்சத்திரமானார். பிரபல வர்த்தகர் தத்தாவை கைத்தலம் பற்றியதும் அஸ்வினி சினிமாவிலிருந்தும் வாபஸ் வாங்கிவிட்டார். இவர் திருமதியாவதற்கு முன் நடித்த 'மிஸ் 420' நூறாவது நாளை நோக்கி வெற்றிநடை போடுகிறது. திருமதி. அஸ்வினி தத்தா சினிமா உலகினை இனித் திரும்பிப் பார்ப்பாரா?

## லதா மங்கேஷ்கார்



இந்திச் சினிமா உலகில் தன் பாடலின் தனித்துவத்தால ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியவர் லதா மங்கேஷ்கார். இவரை யாரும் மறந்துவிட முடியாது. மங்கேஷ்கார் குடும்ப வாரிசான இவர், பாடகியாக சினிமாத் துறைக்கு அறிமுகமாகவில்லை. சங்கீதக் கலைக்கு உயிரூட்டிய குடும்பத்தில் இருந்து நடிகையாக அறிமுகமாகிய லதா முதலில் நடித்த படம் 'பாகிலி மங்களகோர்'

படித்துப் பட்டம் பெற வேண்டும் என எண்ணி இருந்த இவர், கலையுலக பிரவேசம் பண்ணவேண்டுமென தள்ளப்பட்டது தந்தையின் மரணத்தின் பின்னரே.

இவர் நடித்த இரண்டாவது படம் 'மீனா' வெளிவந்தது. வெண்திரைகளில் இவர் தோன்றினாலும் திரைமறைவில் இருந்து ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றே அவர் விரும்பினார். தன் எண்ணத்துக்கு வடிவம் கொடுக்க 1945ம் ஆண்டு ஒஸ்மான் அமான் அலி என்பவர் மூலம் பாடகியாக அறிமுகப்படுத்தப்பட்டார். இக் காலகட்டத்தில் இவரே மங்கேஷ்காரின் குருவாகவும் இருந்தார்.

சங்கீத குடும்பத்தின் வாரிசாகப் பிறந்த இவர் நடிகை என கலையுலகத்தில் தோன்றி பிரபல பாடகி என்னும் அந்தஸ்தை அடைந்து பல்லாயிரம் நெஞ்சங்களில் இடம்பிடித்து விட்டார்.

## முத்தமிழ் கலையரசி மனோரமா





கவியரசு கண்ணதாசன் அவர்களால் 'மாலையிட்ட மங்கை' படத்தில் கதாநாயகியாக அறிமுகப்படுத்தப்பட்டவர்தான் மனோரமா அவர்கள்.

தென்னிந்திய தமிழ் சினிமா உலகிலே நகைச்சுவை நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கும் இவர் 1000கரும் மேற்பட்ட படங்களில் 'கின்னஸ்' புத்தகத்தில் நடித்து இடம் பிடித்துள்ளார். இவர் ஏற்று நடிக்காத பாத்திரங்களே இல்லை எனலாம்.

மக்கள் கலையரசி என்னும் திருவனம் 'முத்தமிழ் கலையரசி' என்னும் பட்டத்தை அண்மையில் இவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது. 95 வயது வரை வாழ்ந்த தனது தாய்தான் தனது வெற்றிக்குக் காரணம் எனக் கூறும் இவர், போட்டி மனப்பான்மையை எனக்குள் ஏற்படுத்திய எதிராளிகளும் எனது வெற்றிக்குக் காரணம் எனக் கூறுகின்றார்.

தனது இளமையைப் பற்றிப் பற்றிக் குறிப்பிடும் போது 'மனசுக்கு ஏது வயது. உடல் வேணுமெண்டால் காலம் போகப் போக முதிர்ச்சியைக் காண்பிக்காலம். ஆனால் மனசு அப்படியல்லவே. இளமையின் நினைவுகளோடு புத்துணர்ச்சியாக மனதை வைச்சுக்கிட்டா அது முகத்திலும் பிரதிபலிக்கும்' என்று கூறுகிறார் இவ் இளமை மூதாட்டி மனோரமா.

## அமெரிக்காவில் பட்டினியொழிப்பு இயக்கம் நடாத்தும் பெண்



அமெரிக்காவில் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றார்கள். அதிசயம்தான்! ஆனால் உண்மை. குழந்தைகள் பட்டினியால் வாடுவதை பார்க்கப் பொறுக்கவில்லை இந்தப் பெண்ணுக்கு!

தன் சொந்த முயற்சியில், தான் வாழ்ந்த பகுதியில், உணவுப் பொட்டலங்களை விநியோகித்தார். இவரது வாகனத்தின் ஒலிச் சத்தம் கேட்டால் கொஸ்ரன் (Hosten) நகரக் குழந்தைகளுக்கு மகிழ்ச்சி பொங்கிவிடும்.

1989-ம் ஆண்டு நத்தார் பண்டிகைதான் இவருக்கு இந்த உந்துதலைக் கொடுத்தது. மக்டொனால்ட் உணவு விடுதிக் குப்பைகளைக் கிளறி சிறு குழந்தைகள் உணவு தேடுவதைப் பார்த்து அவர் மனம் பதைபதைத்தது.

இக் குழந்தைகளின் சோகம் உலகுக்குத் தெரியாவண்ணம் மறைக்கப்பட்டுள்ளது என வருந்துகிறார் இவர்.

CAROL PORTER என்னும் 50 வயதான இப் பெண்ணும் அவரது KID - CARE INC என்னும் ஆலவிருட்சமாய் வளர்ந்து, குழந்தைகளுக்கு உணவுஊட்டி வரும் நிறுவனமும், இந்த நூற்றாண்டுக்குள் குழந்தைகள் பட்டினியை வாடுவதை ஒழிப்போம் எனக் கங்கணம்கட்டி செயற்பட்டு வருகிறார்கள்

## லைப்ரரி மாமி



சென்னை மந்தைவெளி என்னும் இடத்தில் 'லைப்ரரி மாமி' என அங்குள்ளவர்களால் அன்புடன் அழைக்கப்படும் திருமதி. ஜானகி நீலமணி, 'லியோ லைப்ரரி' என்ற பெயரில் வாடகை நூலகம் ஒன்றை நடாத்தி வருகிறார்.

தமிழ் நாட்டில் பெண்மணி ஒருவர் இப்படியொரு நூலகம் நடத்துவது புதுமையே. இவரது இந்த வாடகை லைப்ரரியில் அங்கத்தவர்களாக இருப்பவர்களும் பெண்கள். சுமார் 1500 பெண்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எல்லாவிதமன நூல்களைப் பற்றிய விபரங்களையும் விரல் நுனியிலேயே வைத்திருக்கிறார் இவர்.

காயத்திரி பப்ளிகேஷன் என்ற பதிப்பகத்தை நடாத்தும் இவர் ஒரு எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 90 வயதில்தான் பற்கள் ஆடி விழுந்தனவாம்



தமிழ்நாட்டில் வாழும் 101 வயது மூதாட்டி செண்பகவல்லியை பேட்டி கண்டது ஒரு சஞ்சிகை. "10 வயதில் திருமணம் செய்த இவரை உங்கள் ஆரோக்கியத்தின் இரகசியம் என்ன?" என்று கேட்டபோது, "இதில் என்ன இரகசியம் இருக்கிறது. அதிகமாக எண்ணெயில் பொரித்த பண்டங்களை என் சிவன வயது முதலே சாப்பிடமாட்டேன். எளிய உணவுகள் எப்போதும். டாக்ரிடம் போனதாக ஞாபகமே இல்லை. என் 90 வயதில்தான் பற்கள் ஆடி விழுந்தன என்று பதிலளித்தார்.

RTR

உங்களுக்கு வழங்க இருக்கின்றது, வாரப் பத்திரிகைகள், தமிழ் சஞ்சிகைகள் மற்றும் ஓடியோ, வீடியோ, CD
தொடர்பு முகவரி:

RAMESH. R
TEGL VAERKSGAEDE 10, 2MF, 4800
NYKOBING-F, DENMARK.
T.P: 0045/54 82 91 50 - 0045/40 63 83 19
0045/54 8227 49

# புகலிட நிகழ்வுகள்

## சுவிசில்
## 'நீலப்பறவையின்' மனிதாபிமானம்

கடந்த 16.04.95 அன்று பாசல் மாநகரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திய முத்தமிழ் விழாவில், பாசல் 'நீலப்பறவை' விளையாட்டுக் கழகமும் இணைந்து இவ் விழாவினை நடாத்தி; நம் நாட்டில் அல்லலுறும் எம்மின மக்களின் துயர் துடைக்க தங்களால் முடிந்த உதவியினை வழங்கியது. விளையாட்டுக் கழகத்தின், தலைவர் செயலாளர், ஏனைய வீரர்கள் சகிதம் விழாவின் இறுதியில் முதற்கட்ட உதவியாக 4000 சுவிஸ் பிராங்குகளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் திரு. ந சண்முகநாதனிடம் வழங்கினார்கள். அத்தோடு பாசல் 'நீலப் பறவைகள்' விளையாட்டுக் கழகம் தன்னால் இயன்ற உதவிகளை எதிர்காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்குவதாக உறுதியளித்தனர்.

## ஜேர்மனி - சார்லாண்டில்

ஜேர்மன் சார்லாண்ட் மாநில தமிழாலயங்கள் ஒன்றிணைந்து மே மாதம் 6ம் திகதி தமிழாலய விழாவை நடாத்தவுள்ளனர். THEATRE AM RING SAARLOUIS மண்டபத்தில் அத்தினம் 5 மணிக்கு இவ்விழா நடைபெறும். இவ்விழாவில் ஹரிதாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த WERNER KALLEMBORN பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் பேச்சு, பிரதம விருந்தினர் உரை, சிறப்புரை, சிறுவர் கதை சொல்லல், அபிநயம், கவிதை, கும்மி, கோலாட்டம், நடனம், நாளயம், நாடகம், ஆகியவை இடம் பெறும்.

தமிழாலய மாணவரின் தாய்மொழிக்கல்வியூடாக கலை பண்பாட்டு வளர்ச்சியினைக் கண்டுகளிக்குமாறு சார்லாண்ட் வாழ் தமிழ்மக்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றார்கள்.

## நாடகப் போட்டி 1995

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மனிக் கிளை 1995 ம் ஆண்டுக்கான நாடகப் போட்டி ஒன்றை ஐரோப்பிய அளவில் நடாத்த உள்ளது.

தமிழீழ விடுதலையை ஆதரிக்கும் கலைஞர்கள் இப் போட்டியில் பங்குபற்றலாம் என்றும், தாய்மண் பற்றோடு அன்னிய மண்ணில் வாழும் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாகவே இதனை நடாத்தவிருப்பதாகவும் அறிவித்துள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கான முகவரி,

MR.E.ANANDARAJAH
HOMPESCH STR - 16
41189 MONCHEN GLADBACH

## மாபெரும் மேதின ஊர்வலங்கள்

உலகெங்கும் வாழுகின்ற, ஒடுக்கி அடக்கப்படும் மக்களின் எழுச்சிக் குரல் ஓங்கி ஒலிக்கின்ற நாள். உரிமை கீதங்கள் சங்கமிக்கும் நாள். 1829-ல் சிக்காக்கோ நகரில் 8 மணி நேர வேலைக்காக தொழிலாளர்கள் சிந்திய குருதி மே எழுச்சி நாளாக பிரவாகித்தது.

தமிழீழ மக்களே!

இந்த மேதின எழுச்சியிலே நாங்களும் வீதிக்கு வருவோம். எமது உரிமைக் குரலை உலக அரங்கிலே உரத்து ஒலிப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் மாபெரும் மேதின ஊர்வலங்கள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளன.

### சுவிஸ்:

இரண்டு இடங்களில்

சூரிச் - காலை - 10 மணி
புகையிரத நிலையத்திற்கு அருகே

ஜெனிவா - பி.ப. 2 மணி
புகையிரத நிலையத்திற்கு அருகே

### பாரிஸ்:

காலை - பிற்பகல் 2 மணி
ஆரம்பம் - Republique
முடிவு - Nation

# சைவத் தமிழ்ச் சங்கம்
# அருள்மிகு சிவன் கோயில்

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே"

## 08.04.1995 இல் நடாத்தப்பட்ட பரீட்சை முடிவுகள்

| | விசேட சித்தி | திறமைச் சித்தி | சாதாரண சித்தி |
|---|---|---|---|
| **தாய்மொழி** | | | |
| கீழ் பிரிவு | 100 | 90 | 80 |
| மத்திய பிரிவு | 90 | 80 | 70 |
| மேற் பிரிவு | 80 | 70 | 55 |
| **சைவ சமயம்** | | | |
| கீழ் பிரிவு | 100 | 90 | 80 |
| மத்திய பிரிவு | 90 | 80 | 70 |
| மேற் பிரிவு | 80 | 70 | 55 |

பங்கு பற்றியமைக்கான சான்றிதழ் பெறும் மாணவர்கள்.

| | சுட்டெண் | தாய் மொழி | சைவசமயம் |
|---|---|---|---|
| **துர்க்கா மாநிலம்** | | | |
| கீழ் பிரிவு | | | |
| செல்வன் இலங்கநாதன் திலீபன் | 133 | திறமைச் சித்தி | .......... |
| செல்வன் நடராசா கயூரன் | 206 | விசேட சித்தி | விசேட சித்தி |
| செல்வன் சிவநாதன் ஜெயந்தன் | 167 | சாதாரண சித்தி | .......... |
| செல்வன் சிவநாதன் பிரந்தன் | 168 | .......... | .......... |
| செல்வன் சண்முகநாதன் சயந்தன் | 184 | திறமை சித்தி | விசேட சித்தி |
| செல்வன் பிறேம் பார்த்திபன் | 185 | .......... | |
| செல்வி வேளாமினி பவித்திரா | 166 | சாதாரண சித்தி | |
| செல்வி ரதீனா யோகேஸ்வரன் | 209 | சாதாரண சித்தி | |
| செல்வி வக்சலா வரதராஜன் | 208 | .......... | |
| **சூரிச் மாநிலம்** | | | |
| கீழ் பிரிவு | | | |
| செல்வன் விக்னேஸ்வரன் கனிஸ்ரன் | 165 | | .......... |
| செல்வன் சிவலிங்கம் ராகுலன் | 189 | .......... | சாதாரண சித்தி |
| செல்வி சுஜிதா செல்வராஜா | 190 | .......... | திறமைச் சித்தி |
| செல்வி நதீஜா அருட்கணராஜா | 191 | திறமைச் சித்தி | திறமைச் சித்தி |
| செல்வி தனஜா தெய்வேந்திரம் | 192 | திறமைச் சித்தி | விசேட சித்தி |
| செல்வி றுஷானி நிமலகுமார் | 193 | திறமைச் சித்தி | |
| செல்வன் பரமேஸ்வரன் மயூரன் | 197 | சதாரண சித்தி | திறமைச் சித்தி |
| செல்வி சிந்துஜா ஆனந்தசேகரன் | 198 | திறமைச் சித்தி | விசேட சித்தி |
| செல்வி சாலினி ஆனந்தசேகரன் | 199 | திறமைச் சித்தி | விசேட சித்தி |
| செல்வன் தியாகராஜா லோவிதன் | 293 | சாதாரண சித்தி | விசேட சித்தி |
| செல்வி கீர்த்திகா சிறீஸ்கந்தவேள் | 200 | திறமைச் சித்தி | விசேட சித்தி |
| செல்வி கார்த்திகா சிறீஸ்கந்தவேள் | 201 | சதாரணம் சித்தி | விசேட சித்தி |
| செல்வன் முத்தையா சுஜீதரன் | 203 | .......... | விசேட சித்தி |
| செல்வி மேகலா செல்வராஜா | 204 | திறமைச் சித்தி | திறமைச் சித்தி |
| செல்வி மிதுலா செல்வராஜா | 205 | .......... | சாதாரண சித்தி |
| செல்வன் சிவநாதன் உமாசங்கர் | 207 | .......... | சதாரண சித்தி |
| செல்வி மீரா கணேஸ்வரன் | 235 | திறமைச் சித்தி | |
| செல்வி நிவாணி கணேஸ்வரன் | 236 | சதாரண சித்தி | |
| செல்வி சுதானி அருமைநாயகம் | 176 | சாதாரண சித்தி | சாதாரண சித்தி |
| செல்வன் புஸ்பராஜ் ஜதீஸ் | 196 | திறமைச் சித்தி | |
| செல்வன் இராசலிங்கம் நிரோசன் | 160 | திறமைச் சித்தி | |
| செல்வி தாரணி கணேசமூர்த்தி | 161 | சதாரான சித்தி | சாதாரண சித்தி |
| செல்வி சர்மிளா புஸ்பநாதன் | 162 | சதாரண சித்தி | |
| செல்வி ரொனிக்கா பீற்றர் | 163 | சதாரண சித்தி | |
| செல்வி குமுதினி தர்மகுலசிங்கம் | 164 | .......... | .......... |
| செல்வி அபிராமி சிவகுமார் | 169 | திறமைச் சித்தி | திறமைச் சித்தி |
| செல்வன் நல்லநாதன் தர்சன் | 170 | திறமைச் சித்தி | திறமைச் சித்தி |
| செல்வி தாரணி தங்கராஜா | 171 | சாதாரண சித்தி | சாதாரண சித்தி |
| செல்வன் சண்முகநாதன் சிந்துயன் | 172 | திறமைச் சித்தி | விசேட சித்தி |
| செல்வன் ரவி கண்ணன் | 173 | திறமைச் சித்தி | சாதாரண சித்தி |
| செல்வி டிளோயா குருநாதன் | 174 | திறமைச் சித்தி | .......... |
| செல்வன் உதயசீலன் தனுசாந்தன் | 175 | | .......... |
| செல்வி ரேனுசா ஜெயதேவன் | 177 | | சாதாரண சித்தி |
| செல்வி நிபா சுப்பிரமணியம் | 178 | | சாதாரண சித்தி |
| செல்வன் மகேந்திரன் ரதீபன் | 179 | திறமைச் சித்தி | விசேட சித்தி |
| செல்வி காயத்திரி நடேஸ்வரன் | 189 | திறமைச் சித்தி | விசேட சித்தி |
| செல்வி விநோதா லங்கநாதன் | 181 | திறமைச் சித்தி | திறமைச் சித்தி |
| செல்வி சிந்துயா உலகநாதன் | 182 | .......... | .......... |
| செல்வன் உலகநாதன் நிசாகரன் | 183 | திறமைச் சித்தி | திறமைச் சித்தி |
| **அரோ மாநிலம்** | | | |
| கீழ் பிரிவு | | | |
| செல்வன் சற்குணசிங்கம் நிசான் | 186 | திறமைச் சித்தி | .......... |
| செல்வி சற்குணசிங்கம் ஜெமிதா | 187 | திறமைச் சித்தி | திறமைச் சித்தி |

(மிகுதி விபரங்கள் அடுத்த இதழில்)

# ஜேர்மனியில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு விழா

தமிழீழ விடுதலை உணர்வு ததும்பும் எழுச்சி விழாவாக அன்னை பூபதி ஏழாம் ஆண்டு நினைவு நாள் ஜேர்மனியில் நடைபெற்றது. பேச்சு, கவிதை, கலை நிகழ்ச்சியில் அனைத்தும் தமிழீழத்தை நினைவுக்குக் கொண்டுவந்தன. ஜேர்மனியின் தென்பகுதி நகரமான KIRCH-HEIM-TECK என்ற நகரில் 15.04.95 அன்று இவ்விழா நடைபெற்றது. அன்னை பூபதி தொடர்பான பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் காலையில் நடைபெற்றன. பிற்பகல் நடைபெற்ற எழுச்சி நிகழ்ச்சிகள் ஜேர்மனி உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் திரு.



காங்கேயமூர்த்தி அன்னை பூபதியின் படத்திற்கு தீபம் ஏற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். தீபாஞ்சலி நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஜேர்மனி தமிழர் கலைப் பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. கா. சிவநாதன் உரையாற்றினார். அவர் தமது உரையில் கூறியதாவது, "பசித்த வயிற்றில் விடுதலையைக் கருக்கொண்ட தாயே ஆயுதக்குவியலொன்றை உன் ஆன்ம பலம் எதிர்த்தது. உண்மை புலிகள் பக்கம் இருக்கிறதென்ற உண்மையைச் சொல்ல உன்னை நீ தியாகம் செய்தாய் தேவன் சந்நிதானத்தில் நியாயத்துக்காகப் போராடினாய் மனித இனம் ஒடுக்கப்படுகின்றபோது அதற்காகப் போராடி மறைவதுதான் உண்மையான துறவறம் என்பதை நிரூபித்த வீரத் தாய்! இன உணர்வற்ற, தமிழீழ விடிவில் அக்கறை செலுத்தாத எந்தத் தமிழனையும் மனிதனாகவே கணிக்க முடியாது. விடுதலைக் களைகட்டும் விழாக்கள் இலை தமிழீழ முனைப்போடு இவை கொண்டாடப் படுகின்றன" என்றார்.

அன்னை பூபதி நினைவாக இடம் பெற்ற கட்டுரை பேச்சு கவிதைப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியடைந்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஜேர்மனி தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மாநிலப் பொறுப்பாளர் திரு. சிறிரவி, ஜேர்மனி செஞ்சோலைப் பொறுப்பாளர் திரு. இராஜசுந்தரம் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். 'வானத்துப் பறவைகள்' என்ற சிறுவர் நடனம் முதலில் இடம் பெற்றது. நடன ஆசிரியை திருமதி வானதி தேசிங்க ராஜாவின் மாணவிகள் இதனை வழங்கினர். 'காட்டிக் கொடுப்பவன் எங்கே' என்ற இசை நடனத்தை தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினர் தயாரித்து வழங்கினர். கலை பண்பாட்டுக் கழக நடன ஆசிரியைகளான திருமதிகள் சாவித்திரி இம்மானுவேல், வானதி தேசிங்கராஜா ஆகியோரின் மாணவிகளும் நடன ஆசிரியைகளான ரேணுகா காந்தராஜா, எழிலி காந்தராசா, யாழினி சர்வானந்தா ஆகியோருடன் அவர்களின் குழுவினரும் இந் நடனத்தை வழங்கினர்.

சிறுவர் சிறுமியர் வழங்கிய வில்லிசை பலரின் பாராட்டுதலைப் பெற்றது. செல்விகள் சுபாஜினி விக்கினேஸ்வரன், வித்தியா விக்கினேஸ்வரன், ரபி இராசையா, செல்வன் வினேஸ் விக்கினேஸ்வரன், செல்வன் தனேஸ் விவேகானந்தா, செல்வன் சிவசுந்தர் ஆகியோர் இணைந்து இந்த வில்லிசையை வழங்கினர்.

அன்னை பூபதி நினைவு நாள் எழுச்சி விழாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தென் மாநிலப் பொறுப்பாளர் திரு சிறிரவி உரையாற்றினார். "இனி மேல் ஏமாற்றத்திற்கு இடம் இல்லை என தமிழீழ விடுதலைப்புலிகள் தெளிவாகத் தமிழ் மக்களுக்குத் தெரியப் படுத்தியுள்ளனர். இதுவரை நடைபெற்ற தமிழீழப் போரில் ஏழாயிரம் போராளிகளும், 35ஆயிரம் பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். இது



ஒரு முக்கியமான காலகட்டம். உலகில் உயிராயுதத்தை எவரும் விலை கொடுத்து வாங்கி விட முடியாது. பனைபலத்திற்கு அப்பாற்பட்ட ஆயுதம் இது. உயிராயுதத்தை பயன்படுத்தும் எம்மவர் தியாகம் வார்த்தையில் வர்ணிக்க முடியாது" என்று அவர் தமதுரையில் தெரிவித்தார்.

எழுச்சி விழாவின் இறுதியில் எழுச்சி இசை நடனம் இடம் பெற்றது. இந்நடனத்தில் நடன ஆசிரியைகளான திருமதி. சாவித்திரி இம்மனுவேல், திருமதி வானதி தேசிங்கராஜா, ரேணுகா காந்தராஜா, எழிலி காந்தராஜா, பவித்திரா செல்வகாந்தன், சுகன்யா சிவநாதன் ஆகியோரும் அவர்களின் மாணவிகளும் பங்கு பற்றினர்.

இந்நடனம் மண்டபம் நிறைந்த கைதட்டலைப் பெற்றது.

### அன்னை பூபதி நினைவுப் போட்டிகள்

உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த உலகில் முதல் பெண் மணி அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவு பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் ஜேர்மனியில் இரண்டு இடங்களில் நடாத்தப்பட்டன. இவற்றை DORTMOND நகரிலும், KIRCHHEIN TEEK நகரிலும் ஜேர்மனி தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் சிறப்பாக நடாத்தி முடித்துள்ளது.

இறுதிப் போட்டிகள் வருமாறு:

கீழ்ப்பிரிவு - பேச்சு:

1. யதூஷன் குமாரச்சந்திரன்
2. உமா சிறிவிக்கினேஸ்வரமூர்த்தி
3. சோபிதா சோமசுந்தரம்

சிறப்புப் பரிசு:
யுவானி குணாளன்

கீழ்ப்பிரிவு - கட்டுரை:

1. சுதர்சன் இரத்தினசிங்கம்
2. லதீபன் இரத்தினசிங்கம்
3. செந்தூரன் சத்தியசீலன்

நடுப்பிரிவு - பேச்சு:

1. காந்தரூபன் பாலசுப்பிரமணியம்
2. ரூபாசினி பாலசுப்பிரமணியம்
3. வித்தகன் ஆனந்தராஜா

நடுப்பிரிவு - கட்டுரை:

1. பிரசாந்தி உமாபதிசிவம்
2. காந்தரூபன் பாலசுப்பிரமணியம்
3. ரூபாசினி பாலசுப்பிரமணியம்

மேற்பிரிவு - பேச்சு:

1. ராஜ்குமாரன் தர்மலிங்கம்
2. றஜிதா ரகுபதி
3. மோகன்தாஸ் கனகசபை

மேற்பிரிவு - கவிதை:

1. மோகன்தாஸ் கனகசபை
2. றஜிதா ரகுபதி
3. சுபாசினி கமலைநாதன்

மேற்பிரிவு - கட்டுரை:

1. கிருஜாந்தி உமாபதிசிவம்
2. மோகன்தாஸ் கனகசபை
3. கமலைநாதன் சுபாஜினி

அதி மேற்பிரிவு - பேச்சு:

1. சிறிபிரகாஸ் சிவராஜா
2. பிரேமினி ரஞ்சித்
3. நித்தியானந்தன் கந்தசாமி

அதி மேற்பிரிவு - கவிதை:

1. புவனேந்திரராஜா சுப்பிரமணியம்
2. நித்தியானந்தன் கந்தசாமி
3. கலாவதி நாகநாதன்

## ஜேர்மனி
# தமிழர் புனர்வாழ்வுக் கழக நடாத்தும் "புனர்வாழ்வு கலைத்தென்றல்"

### பேர்லின்

'புனர்வாழ்வு கலைத்தென்றல்' பேர்லின் நகரில், கடந்த 22.04.95 அன்று நடைபெற்றது. விசேட நிகழ்ச்சியாக தமிழீழ இசைக்குழுவின் விடுதலை கீதங்கள் இடம்பெற்றது.

அத்துடன், தமிழாலய மாணவர்களின் நடனம், தனி நடிப்பு, ஜூஸ் மாஸ்ரர், வீணை இசை, வில்லிசை, அபிநய, கதாபிரசங்க ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

### மெசடே

'புனர்வாழ்வு கலைத்தென்றல்' மெசடே நகரில் எதிர்வரு மே மாதம் 20ம் திகதி பிற்பகல் 4.00-மணிக்கு "KOPLINGHAUS" KOPLINGHAUSER STR, MESCHEDE என்ற இடத்தில் நடைபெற உள்ளது.

### பிறேமன்

'புனர்வாழ்வு கலைத்தென்றல்' பிறேமன் நகரில் எதிர்வரும் ஜூன் மாதம் 17ம் திகதி 4.00 மணிக்கு BURGER UND SOZIAL ZENTRUM HUCHTING, AMERSFOOTER STR , 28252 BREMEN என்ற மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

### கைன்ஸ்பேர்க்

'புனர்வாழ்வு கலைத்தென்றல்' கலைத்தென்றல் கைன்ஸ்பேர்க் நகரில் எதிர்வரும் ஜூன் மாத 17 திகதி FESTHALLEN RESTAURANT, CARL DIEM STR., 5225 HEINSBERG, OBERPRUCH என்ற மண்டபத்தில் நடைபெறும்.

ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உதவும் கரங்களைத் தேடி இந் நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது. இதன் மூலம் சேகரிக்கப்படும் நிதி தாயகத்தில் துயருறும் மக்களின் புனர்வாழ்வுக்கு பயன்படுகிறது.

கலை நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக ஜேர்மனியின் சகல நகரங்களிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# சுவிசில் தமிழர் எழுச்சி விழா

சுவிஸ் 'வோ' மாநிலத்தில் கடந்த 22.04.95 அன்னை பூபதி ஞாபகார்த்தமாக தமிழர் எழுச்சி விழா நடைபெற்றுள்ளது.

அன்னை பூபதியின் உருவப் படத்திற்கு ஈகைச் சுடரேற்றும் வைபவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

அன்னை பூபதி நினைவாக நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அத்துடன் நடனங்கள், நாடகங்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளது.

நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும் என்ற கவியரங்கமும் நடைபெற்றுள்ளது. இவ் விழாவிலே இருப்பாய் தமிழா நெருப்பாய் என்னும் ஒலிநாட்டு (CD) வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிவந்துள்ளது

## இருப்பாய் தமிழா நெருப்பாய்

### எழுச்சிப் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு






புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், எழுச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் இயற்றிய பாடல்கள் கலைமாமணி தேனிசை செல்லப்பா, சாந்தி செல்லப்பா ஆகியோரால் பாடப்பட்டுள்ளது. எழுச்சி பொங்கும் 10 பாடல்கள் அடங்கியுள்ளது.

இசை - தேனிசை செல்லப்பா

# போத்தல்.. பித்தளை.. அலுமேனியம்... சீட்டு.. வட்டி.. நகைஅடைவு...?

சீட்டு. வட்டி.. நகை அடைவு பிடிக்கலையோ.. சீட்டு..? இப்பிடி தெருத்தெருவா கூவி வியாபாரம் செய்யிற நிலமை இப்ப வெளிநாட்டில வந்திட்டுது.

முந்தியெல்லாம், ஊரில தலைச்சுமையாக் கொண்டு திரிஞ்சு உடுபிடவை வியாபாரம் செய்த மாதிரி, ஊர் உலக மெல்லாம் தெருத்தெருவாத திரிஞ்சு, போத்தல்.. பித்தளை, அலுமீனியம்.. பழைய பாத்திரபண்டம்.. எண்டு கூவித் திரிஞ்சு வியாபாரம் செய்த காலங்களை நினைவுபடுத்துகிறமாதிரி, இஞ்சை சீட்டும் வட்டியும் வந்திட்டுது. ஒவ்வொரு நாட்டிலேயும் கேள்விப்படுகிற செய்தியள் அப்பிடித்தான் யோசிக்க வைக்குது.

நாங்கள் கனபேர், இஞ்சையும் சீட்டுப்போட்டு காசு சேர்த்து, மிச்சம் பிடிக்க வெளிக்கிட்டு உள்ளதையும் இழந்திட்டு நிக்கிற அவலத்தைப் பற்றி கிட்டடியிலையும் ஒருக்கால் உங்களோடை பகிர்ந்து கொண்டனான்.

சீட்டு எண்டிறது, வங்கி வசதி ஏதும் இல்லாத காலங்களிலை எங்கடை ஆக்களின்ரை சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிச்சிருக்கலாம். அந்தக் காலங்களிலை அது வசதிப் பட்டிருக்கலாம். ஆனால் இண்டைக்கும் இதை விடமுடியாமல் நிக்கிறமெண்டது பழக்க தோசம்தானாக்கும். சந்திக்குச் சந்தி வங்கிகள் இருக்கிற நாடுகளிலை இருந்து கொண்டும் சீட்டு, சீட்டு எண்டு ஆலாப்பறக்கிறம்.

ஒரு வழியிலை பார்த்தால், இஞ்சை சீட்டுப் போடுறதுக்கு நியாயமான காரணங்களும் இருக்குது எண்டதும் உண்மைதான். வங்கியிலை நிலையான சேமிப்புக் கணக்கில போட்டால், அந்தரம் ஆபத்துக்கு நினைச்ச நேரத்துக்கு எடுக்கிறது கஷ்டமாயும் இருக்கலாம்.

## ஆருக்குச் சொல்லி அழ?

சீட்டு; அதுவும் கேள்விச் சீட்டெண்டால் எல்லாரும் விரும்புவினம். ஒவ்வொருவரும் தங்கடை தேவைகளுக்கும் அவசரங்களுக்கும் ஏத்த மாதிரி கேட்டு, கழிச்சு எடுக்கலாம். சில வேளை சீட்டு எடுக்கிறவரின்ரை அவசரம், எக்கச்சக்கமான கழிவிலை கொண்டுபோய் விடும். கட்டிற ஆக்களுக்கு சுக்கிர திசைதான்.

இப்பிடியெல்லாம் வசதியாயும், அந்தரம் ஆபத்துக்கு கை குடுக்கிறதாயும் இருக்குமெண்டு நினைச்சு எக்கச்சக்கமா கலர் கலராய் கனவு கண்டு கொண்டிருக்க, சில வேளையில எல்லாம் போச்சு கோவிந்தா எண்ட கதைதான் மிஞ்சுது.

இப்ப சுவிஸ் நாட்டில ஒரு துண்டுப் பிரசுரம் பார்த்தனான். ஒரு ஆளின்ரை போட்டோவைப் போட்டு, அதுக்குக் கீழே அவரின்ரை சொந்தப் பெயர், புனைபெயர், ஊரில அவர் இருக்கிற விலாசம், சுவிசில அவர் இருக்கிற விலாசம் எல்லாம் போட்டிருந்தது. அதைப் பார்த்தவுடனை ஏதோ மரண அறிவித்தலாக்கும் எண்டு நினைச்சிட்டன். வாசிச்சுப் பார்க்கத்தான் மெள்ள விசயம் பிடிபட்டுது.

மோசடி நபர் தம்பித்துரை இந்திரன்.

(மின்னி, வெட்டு இந்திரன், இந்திரராஜா) ஆறுகால் மடத்தைச் சேர்ந்தவர். சீட்டு, நகை அடைவு எண்டு லட்சக் கணக்கான சுவிஸ் பிராங்குகளை எக்கச்சக்கமான ஆட்களிட்டை வாங்கி ஏமாத்தி ஏப்பம் விட்டுட்டு தலைமறைவாகி விட்டாராம். அவரைக் கண்டு பிடிச்சுத் தருகிறவைக்குச் சன்மானம் தருவினமாம். தொடர்பு கொள்ள வேண்டிய ரெலிபோன் நம்பர் எல்லாம் குறிச்சிருக்கினம்.

அந்தத் துண்டைப் பார்க்க ஆத்திரமாயும், வேதனையாயும் கிடக்குது.

> **ஊரில தலைச்சுமையாக் கொண்டு திரிஞ்சு உடுபிடவை வியாபாரம் செய்த மாதிரி, ஊர் உலக மெல்லாம் தெருத்தெருவாத் திரிஞ்சு, போத்தல்... பித்தளை, அலுமினியம்... பழைய பாத்திரபண்டம்... எண்டு கூவித் திரிஞ்சு வியாபாரம் செய்த காலங்களை நினைவு படுத்துகிறமாதிரி, இஞ்சை சீட்டும் வட்டியும் வந்திட்டுது.**

சொந்த நாட்டை விட்டு இவ்வளவு தூரத்துக்கு இஞ்சாலை வந்திருந்துகொண்டும் எங்கடை சனத்தை, எங்கடை சனமே தலையைச் சுத்துறதைப் பார்க்க கோபமாய்க் கிடக்குது.

வங்கி வசதியள் மலிஞ்சு போய்க் கிடக்கிற நாடுகளிலை இருந்து கொண்டு இப்பிடி சீட்டு, வட்டி எண்டு ஒருசில ஏமாத்துக்காரரிட்டை குடுத்துப்போட்டு எல்லாத்தையும் இழந்து கையறு நிலையில நிக்கிறமே எண்டு வருத்தமாய்க் கிடக்குது.

கஸ்ரப்பட்டு, இரவு பகலா அடிபன் அடிச்சு உழைக்கிறம். வாயைக்கட்டி, வயித்தைக்கட்டி, தேவையளைச் சுருக்கி சீட்டுப்பிடிக்கிறம். அக்காவுக்கும் தங்கச்சிக்கும் சீதனம் குடுக்கவும், அம்மா அப்பாவுக்கு சாப்பாடுச் செலவுக்கு காசு அனுப்பவும், தம்பி தங்கச்சிமாரை படிப்பிக்கவும், அடைவு நகையை எடுக்கவும், ஈடுவைச்ச காணியை மீட்கவும் எண்டுதான் இப்படிக் கஷ்டப்பட்டு காசு சேர்க்கிறம். அது எங்களுக்குப் பிரயோசனப்படாமல் ஆராவது கொண்டு ஓடினால்...?

நாங்கள் இனியாவது யோசிக்க வேணும். இப்பிடியே ஆரும் ஏமாத்துப் பேர்வழியளிட்டைக் குடுத்து ஏமாற வேணுமோ எண்டு..?

சுவிசில நான் சொன்ன ஆள் மட்டுமில்லை, இன்னும் கனபேர் இப்பிடி சொல்லாமல் கொள்ளாமல் தலைமறைவாகிவிட்டினம். சனம் எல்லாம் வாயிலையும் வயித்திலையும் அடிச்சுக் கொண்டு அலறியடிச்சுக் கொண்டு திரியுது.

சீட்டை ஒரு தொழிலாச் செய்யிற கனபேரை எனக்கு நீண்டகாலமாத் தெரியும். அனேகமானவை அதிலையும் நேர்மையாத்தான் நடக்கினம். ஆனால் ஒண்டுரண்டு பேர் இப்பிடித் தலையைச் சுத்துறதாலை எல்லாருக்கும்தான் மனக்கஷ்டமும், பணக்கஷ்டமும்.

**ஆசைத்தம்பி**

# கிடைக்கப் பெற்றோம்

தாயக மண்ணிலே உறுதியோடு மிடுக்காய் நிமிர்ந்து நிற்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி. புகலிட மண்ணிலே அக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், தாம் பயின்ற கல்லூரிப் பற்றுதலின் வெளிப்பாடாய் அவர்களின் செயற்பாடுகள். அதில் ஒன்றாய் மகாஜனக் கல்லூரி ஆண்டு மலர் 95.

## மகாஜனன் 1995 (ஆண்டு மலர்)

கடந்த 09.04.95 ஞாயிறு அன்று பாரிசில் வெளியிட்டு வைக்கப்பட்ட இம்மலர், இவர்களின் இரண்டாவது மலராகும். பல சிறப்பம்சங்களை உள்ளடக்கியுள்ளது இம்மலர், எழிமையான சிறப்பான வடிவமைப்பு. அறிமுகங்கள், வாழ்த்துக்கள், தலைமை உரை எனத் தொடரும் வழமையான வகையறாக்களோடு, க.ஆதவனின் 'பட்டம் விடும் நினைவுகள்' கட்டுரையுடன் ஆக்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இக்கட்டுரை எமது பாடசாலை இளமைக்கால பழைய நினைவுகளை நினைவுறுத்திய சுவையான கட்டுரை. நாங்கள் கட்டிய பட்டங்களும் மனதில் பறக்கின்றன.

"சுவர் மேல் எழுத்து", "இன்னும் மறையாத அந்த முகம்", "கத்தப்பிள்ளை சங்கரப்பிள்ளை", 'பூமறாங் மாஸ்டர்', 'கவிதைகளைக் கடன் தந்து காற்றோடு கலந்து விட்ட கதிரேசன்' என அநேகமானவை கல்லூரி நினைவு மீட்புகளாகவே இருக்கின்றன. ஒவ்வொன்றும் சுவையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

திரு.நா.சண்முகரத்தினத்தின் 'கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையே நோர்வே வாழ் தமிழர்களின் தடுமாற்றங்கள்', திரு.பொ.கனகசபாபதியினுடைய 'மேற்குலகக் கல்வி முறையும் எமது தேசக் கல்வி முறையும்' போன்ற ஆக்கங்கள் புகலிட வாழ்வில் எம்மவர் பலரின் யதார்த்த வாழ்வியல் வெளிப்பாடுகளை வெளிக்காட்டி நிற்கின்றன. திரு.ந.சச்சிதானந்தன் அவர்களின் "பிரெஞ்சு மொழி அறிமுகம்" கட்டுரை அம்மொழியின் சிறப்பினை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகின்றது.

இ. பி. அரவிந்தன் புலம் பெயர்ந்தோர் கதைகள் பற்றியும், சி. திவாகர் பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் எமில் சோலா பற்றியும் பிரதிபலித்திருக்கின்றார்கள்.

இம் மலரின் சிறப்பம்சமாக புகலிடத் தமிழ் சிறார்களின் உணர்வு வெளிப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருத்தமை மலரின் சிறப்புத் தன்மைக்கு மேலும் பலம் சேர்க்கின்றது. புகலிட மண்ணின் தேவையை மகாஜனன் நன்கு புரிந்துள்ளமையை உணர முடிகின்றது. இந்த இயந்திர வாழ்வியலுக்குள் இருந்து முகிழ்த்த மகாஜனன் வரவேற்கப்பட வேண்டியது. அனைவராலும் வாசிக்கப்பட வேண்டியது.

நிற்க,

இம் மலர் மகாஜனா கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்களின் கடந்தகால வாழ்வியலை நினைவு மீட்டுவதில் அதிக அக்கறை கொண்டுள்ளமையினை உணர முடிகின்றது. தேவை; ஆனால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேச விடுதலைப் போரிலே இக் கல்லூரியில் இருந்து எத்தனையோ மாணவர்கள் தம்மை தியாகம் செய்திருப்பார்கள். அவை நினைவு மீட்கப்படாதமை ஏன்? அல்லது மகாஜனாக் கல்லூரியில் எவருமே தேசவிடுதலையில் பங்கு கொள்ளவில்லையா?

மகாஜனன் மலர் பற்றிய தொடர்புகட்கு,

எஸ். மனோ
210, Av du 8 Mai 1945,
93150 Le Blanc,
Mesnili, France.

- நிலவன் -




அண்மையில் சுவிசில் நடைபெற்ற 'சமாதானத்தை நோக்கி' எனும் கருத்தரங்கில், இடையிடையே நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்வாக இத் தமிழ்ச் சிறுமி பரதநாட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.




சுவிஸ் பிறிபேர்க் மாநில தமிழ் மன்றத்தினால் கடந்த 17.04.95 ல் நடாத்தப்பட்ட புதுவருட விழாவில் ஒரு நிகழ்வு



# சிறுவர் முற்றம்



## வித்தை காட்டும் விலங்குகள்

### ஜிம்னாஸ்டிக் வீரன்

சிலந்தியை பார்த்திருக்கிறீர்களா? தன் வாயிலிருந்து சுரக்கும் சுரப்பின் மூலம் தான் நினைத்த இடத்திற்குப் பாய்கிறது. இது சிலந்திக் குரங்கு. இதன் அற்புதமான கால்களின் துணையுடன் ஜிம்னாஸ்டிக் கலையில் தேர்ச்சி பெற்றிருக்கிறது. மிகமிக மெல்லிய கிளைகளில் கூட இதனால் தொங்க முடிகிறது. அதிலிருந்து பல மீற்றர்கள் உயரத்திற்கு அற்புதமாகப் பாயவும் முடிகிறது. சிலவேளைகளில் கிளைகளைப் பற்றிக் கொள்ள ஐந்தாவது காலாக தனது வாலையும் பயன்படுத்துகிறது. ஆள் குரங்கானாலும் சூராதி சூரன்தான்.



### கால்களே ஏணியாய்...

தரையிலிருந்து 2 மீற்றருக்கு மேற்பட்ட உயரமரங்கள்; அவற்றின் தளிர்களை ஏணியின்றி எப்படி எட்டி உண்பது? இந்தக் கஸெல் மான்கள் எட்டி உண்ணும் கலையில் தேர்ச்சி பெற்றவை. பின்னங் கால்களில் உடலைத் தாங்கி நேராக நீட்டி நிமிர்ந்து முன் னங்கால்களால் கிளைகளைப் பற்றித் தளிர்களை எட்டிவிடுகின்றன.

### உச்சாணிக் கொப்பில் உல்லாச நித்திரை



சாப்பாடு முடிந்ததும் இலேசான நித்திரை நமது கண்ணைச் சுழற்றும். ஓய்வு எடுப்பதற்காக கட்டிலில் சரிகிறோம். இதோ இந்தச் சிறுத்தைக்கும் உண்ட களைப்பு. ஓய்வு எடுக்கும் இடம் எது தெரியுமா? மரத்தின் உச்சாணிக்கொப்பு ஆச்சரியமாக இல்லையா? நீண்ட மரக்கிளையில் தனது உடலை நிமிர்த்தி ஓய்வெடுக்கிறது. அதன் வாலும் பாதங்களும் கவலையற்றுத் தொங்கிய படி இருக்க கண்கள் நித்திரையில் சொருக ஆனந்தமாக இளைப் பாறுகிறது இச்சிறுத்தை.

### கயிற்றில் நடக்கும் விந்தை



ஒரு ஆடு மரத்தில் ஏறி இருப்பதை எங்காவது கண்டிருக்கிறீர்களா? ஆனால் இந்தப் புகைப்படம் ஏமாற்று வித்தையல்ல. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. இந்த மொரோக்கோ ஆட்டிற்கு பசி இந்த வலிமையை

கொடுத்திருக்கிறது. உண்மையிலேயே ஒரு கயிற்று நடை வீரரின் சாகசத்துடன் இந்த ஆடு மெல்லிய மரக்கிளைகளில் கால் பதித்து நடக்கிறது.



### சுழியோடிகள்



தென்துருவத்தில் வாழும் இந்தச் சின்னப் பென்குயின் பறவைகள் ஆழ நீந்துகின்றன. பனிக் கட்டிகளை பல மீற்றர் உயரத்திற்கு மேலே தள்ளுகின்றன. இறால்களைத் தேடி வேட்டையாடுவதற்காகவே இவ்வாறு பனிக்கட்டிகளை மேலே மேலே பந்தாடுகின்றன.

### கம்பத்தில் குத்துக்கரணம்



கம்பத்தில் தொங்கிச் சுழன்று கரணமடிக்கும் வீரர்களைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த நர்சுத் தவளை கரணமடிப்பதில் படு சூரன். கவ்விப்பிடிக்கும் அதன் விரல்களின் உதவியால் மரக்கிளைகளில் அது நினைத்தபாட்டிற்கு குதித்து கூத்தாட முடிகிறது.

## கவிதை பாடுவோம்

### சிறிசுகள் சபதம்

எங்கள் உலகம் இனிமையானது
இளமை வழியும் செழுமையானது.
அன்பும் பண்பும் அருமையானது
அதனால் வாழ்வு எளிமையானது

பொய்யும் புரட்டும் அழிவின் பாதைகள்
போகோம் என்றும் பொய்யர் வழியிலே
மெய்யில் இறைவன் மேன்மை கொள்கிறான்
மெய்யே எமக்கும் மேன்மை செய்குமே

கருணை, அஹிம்சை கதையில் உள்ளது
உலகில் எதுவும் உண்மையில் இல்லை
கதையிலுள்ளவை எமது பூமியில்
நனவு ஆகிடும் நாளை நம் கையில்

ஒன்று கூடுவோம் உரக்கப்பாடுவோம்
நன்று காணட்டும் நாளை நம்பூமி
சென்ற நாட்களை இன்றே மறந்திட்டோம்
ஒன்று நம் குலம் என்றே கூடுவோம்

### பணம் குப்பையிலே



பிரான்சில் அண்மையில் புதிதாக 500 பிராங் தாள்கள் அச்சிடப்பட்டன. ரேடியோ கதிரியக்கத்தின் பெற்றோர் எனக் கருதப்படும் பியர் மற்றும் மேரி கியூரி அம்மையார் ஆகியோரின் உருவப் படங்கள் இத்தாள்களில் அச்சிடப்பட்டுள்ளன. இத்தாளில் வரையப்பட்டிருந்த ரேடியத்தின் அணுவமைப்பில் தவறு உள்ளதை பியர் மேரி கியூரி கழகம் கண்டுபிடித்தது. விளைவு பல மில்லியன் கணக்கான அச்சிடப்பட்ட தாள்கள் குப்பையில் கொட்டப்பட்டுவிட்டன.

## ஜனாதிபதிகள் பலவிதம்



### மிக வயதான ஜனாதிபதி

பெலிக்ஸ் ஹோப்ஹு-யெற் புவனி ஐவறி கோஸ்ற் என்னும் ஆபிரிக்கநாடு ஒன்றின் ஜனாதிபதி. 90 வயது ஆகிறது இவருக்கு 34 வருடங்களுக்கு மேலாக அந்த நாட்டை ஆட்டிப் படைத்திருக்கிறார்.

### மிக இளமையான ஜனாதிபதி

லத்தீன் அமெரிக்க நாடான பெருவின் ஜனாதிபதியாக அலன் கர்சியா பதவியேற்றபோது இவரது வயது 36. 1985-இல் இவர் பதவியேற்றார்.

### மிகநீண்டகால ஜனாதிபதி

மக்களால் தெரிவு செய்யப்பட்டு மிக நீண்டகாலம் பதவி வகிப்பவர். பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்சுவா மித்தரான்ட். அதற்கடுத்து அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட் 12 வருடம் ஜனாதிபதியாயிருந்தார்.

# இணைதல்

மதிப்பிற்குரிய ஈழமுரசுக்கு,

என் இதயபூர்வமான நன்றிகள்.

ஆக்கங்கள் அனைத்தும் சிறப்பாகவே அமைந்துள்ளன. அதிலும் நக்கீரன், யமுனா ராஜேந்திரன், ஆசைத்தம்பி போன்றவர்களின் ஆக்கங்கள் எமது சமூகத்திற்கு மிகவும் வேண்டியவை. எமது சமூகத்தின தேவையை உங்கள் பத்திரிகை நன்கு உணர்ந்துள்ளது.

சமூக சீரழிவுக்கு எதிரான குரலாகவும், பல்வேறு தரமான ஆக்கங்கள் தாங்கியும் ஈழமுரசு வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தொடரட்டும உங்கள் பணி.

அன்புடன்
கே. கணேசன், ஜேர்மனி.

அன்புள்ள ஆசிரியருக்கு,

தொடர்ந்த வீரமுழக்கமிடும் ஈழமுரசு கண்டு, அதனை எதிர்பார்த்து ஆவலுடன் வாசிக்கும் அபிமான வாசகர்களில் நானும் ஒருவனாகிவிட்டேன். உங்களது அனைத்து ஆக்கங்களும் என்னைக் கவர்ந்துவிட்டன. எனினும் இந்திய சினிமாவை, அரசியலை விமர்சிப்பதற்கு இடம் ஒதுக்கியிருக்கும் நீங்கள், மனித வாழ்வில் முக்கியமானதொன்றான விளையாட்டுத்துறைக்கு இடம் ஒதுக்காததை எண்ணி மனம் வருந்துகிறேன். இனிமேல் இதனைக் கவனத்தில் கொள்வீர்கள் என நான் நினைக்கிறேன்.

மேலும் மலையகத்திலிருந்து வெளிவரும் நாவல்கள் பற்றி எழுதியிருந்தீர்கள். அதில் சிறந்தது ஒன்றை உங்கள் பத்திரிகையில் தொடராகப் போடலாமே? மேலும் உண்மையைக் கூறுவதற்கும், பிழையைச் சுட்டிக்காட்டுவதற்கும், குறை கூறுவதற்கும் உங்களுக்கு நிகர் நீங்களேதான். பிழை, குறை இருப்பின் சுட்டிக்காட்டி கூறுவது பத்திரிகைகளின் கடமைதான். நீங்கள் அதற்கு ஆலோசனையும் கூறுவீர்களாயின் மிகவும் நல்லது. இன்னும் தரமான, புதிய ஆக்கங்களைச் சேர்த்து பத்திரிகையை மெருகூட்டச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வண்ணம், ரவி
Asnieres, France.

ஈழமுரசு ஆசிரியர் குழுவிற்கு,

வணக்கம்

தாங்கள் அனுப்பியிருந்த ஈழமுரசு பத்திரிகைகள் யாவும் கிடைத்தன. நன்றி. ஈழமுரசு ஈரத்தைத் தேடும் முரசாகவே அமைந்துள்ளது. இறுகிய மனம் கொண்ட மக்களிடம் ஈரத்தை தேடும் முயற்சியே இது. தங்களது தொண்டும் பணியும் தொடர வாழ்த்துகிறேன். கடல் தாண்டி வாழும் ஒரு தமிழனின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்
சி. அருணாசலம், மலேசியா

ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களது ஈழமுரசு தொடர்ந்து வாசித்து வருகிறேன்.

அனைத்து அம்சங்களும் நன்றாகவே இருக்கிறது.

நீண்டகால அனுபவம் பெற்ற பத்திரிகை போல் இருக்கின்றது. ஒவ்வொரு இதழும் வரும் போது, அடுத்த இதழ் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றது. இதேபோன்று, தொடர்ந்தும் வித்தியாசம் வித்தியாசமாக வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். முரசு நீண்ட காலம் வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சுகந்தன், பாரிஸ்

அன்புடன் ஈழமுரசு ஆசிரியர் அவர்கட்கு,

காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு வெளிவரும் ஈழமுரசு வார இதழிற்கு ஆசைத்தம்பி எழுதும் 'ஆருக்குச் செல்ல அழ' பகுதியும், நக்கீரன் எழுதும் 'புகலிட வாழ்வின் முரண்பாடுகளும் சுயநலவாதிகளிற்கும் ஊருக்கு மட்டும் உபதேசித்துக்கொண்டு இன்னும் பிற்போக்கு வாதத் தன்மைகளைக் கடைப்பிடித்துக்கொண்டு மேடைகளிலும் வீடுகளிலும் கத்திக்கொண்டு காலத்தைக் கடத்தும் கூட்டத்திற்கு உகந்ததாக இருக்கிறது.

இம் முகமூடிகள் ஆசைத்தம்பியாலும், நக்கீரனாலும் கிழியுமானால் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தான்.

இங்கனம்
ஆ. சாந்தினி, டென்மார்க்.

ஆசிரியர் குழுவுக்கு

தங்களின ஈழமுரசு பத்திரிகையை தொடர்ச்சியாக வாசித்து வருகிறேன். பயன்தரும் பல்வேறு விடயங்களை தாங்கி சிறப்புடன் வெளிவருகின்றது தங்கள் பத்திரிகை.

யமுனா ராஜேந்திரனின் சினிமா பற்றிய கட்டுரை கடந்த வாரம் வெளிவராமையால் ஏமாற்றமடைந்தேன். சினிமா பற்றிய ஆக்க பூர்வமான கருத்துக்களை அவரது கட்டுரைகள் மூலம் உள்வாங்க முடிகின்றது.

ஆதவனின் சிறுகதை அருமையாக இருந்தது. அவரது பேனா ஏன் நீண்ட காலமாக உறங்கிக் கிடந்தது. தொடர்ந்து அவர் படைப்புக்களை நுகர ஆவலாய் உள்ளேன்.

மற்றும் சகல ஆக்கங்களுமே தரமுடையனவாகவே உள்ளன. ஆனாலும் எழுத்துப் பிழைகளை முடிந்தளவு குறைக்க முயற்சிக்கவும். ஈழமுரசு சிறப்புடன் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

நந்தன், பாரிஸ்-10.

கனம் ஆசிரியர் அவர்கட்கு,

தங்களின் 20-26 ஏப்ரல் 95 ஈழமுரசில் பிரசுரிக்கப்பட்டிருந்த நக்கீரனின் கட்டுரை' சார்ந்து ஒரு வேண்டுகோள்;

கட்டுரையின் கடைசிப் பந்தியிலிருந்து முதலில் சில விளக்கங்கள் தெரிவித்தால் வாசகர்கள்+இலங்கைத் தமிழர்களுக்கும் தெளிவான ஒரு கருத்து புலப்படும். அதாவது,

*ஆரிய பார்ப்பனியம் என்பவர் யார்?*
*சனாதன மதம்தானா இந்த மதம்?*
*இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை?*
*தமிழர் மதம் இந்து மதமா?*
*வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடு (சாதி) என்றால் என்ன?*
*வர்ணாச்சிரம தர்மத்திற்கும் இந்து மதத்திற்கும் என்ன தொடர்பு?*
*'எமது எதிரிகளை அம்பலப்படுத்துவது...' யார் எமது எதிரி?*

இவைகளுக்கு சிறிதளவாவது விளக்கம் கொடுத்தால், தாங்கள் இவை பற்றி என்ன மாதிரியான கருத்துக் கொண்டிருக்கின்றீர்கள் என நாம் அறிய வாய்ப்பாக இருக்கும். இதனால் உண்மையான விபரம் வெளிவரவும் சந்தர்ப்பங்கள் இருக்கும்.


ஆதலால், தயவுசெய்து இவற்றிற்கு அடுத்த கட்டுரையில் விளக்கம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி
இப்படிக்கு, மு. நிமலகுமார்,
சூரிச், சுவிஸ்.


# London Shopping Guide

துவாரகா

மேற்கு இலண்டன் தமிழ் மக்களின் அனைத்து வீட்டு தேவைகளையும் பூர்த்தி செய்ய துவாரகா இன்முகத்துடன் சேவையாற்றி வருகிறது. ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்!



199, The BROADWAY,
Southall - Middx.
T.P: 813 9126

Prime Foods

தெற்கு லண்டனில் கடந்த 10 வருடங்களாக தமிழ் வியாபாரத்தில் இருக்கும் நாங்கள், தமிழ் மக்களுக்கு தேவையான நல்ல மீன் வகைகள், உடன் காய்கறி வகைகள், அரிசிமா, மிளகாய்த்தூள் போன்ற மளிகைப் பொருட்கள் யாவற்றையும் நேரடியாக இறக்குமதி செய்து மொத்த விலைக்கே வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

மொத்த வியாபார விசாரணைகள் வரவேற்கப் படுகின்றன.

118, Tooting High Street,
London Sw 17
T.P: 081/ 682 3777
Fax: 081/ 339 9722

மொத்த வியாபாரத்தில் இலண்டனில் முன்னணி வகிப்பவர்கள்! மளிகைப் பொருட்களா, அலங்காரப் பொருட்களா, தமிழ் இன்னிசை நாடாக்களா, அனைத்தும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

SHANKAR & Co Ltd.
231, NORTHOCT ROAD,
SOUTH HARROW.
T.P: 081/ 427 2269

உங்கள் எந்த வித தேவைகளுக்கும் எங்களை அணுகுங்கள், இறைச்சி மீன், நண்டு இறால் - மளிகைப் பொருட்கள், காய்கறி வகைகள் வீடியோ, ஓடியோ, கொம்பக்ட் டிஸ்க்குகள்

BEST FOODS
261, London Road,
Croydon - UK.
T.P: 081/ 684 6269

# விளையாட்டு

## கந்தோனாவுக்கு தண்டனை

இங்கிலாந்தின் மஞ்செஸ்ரர் கழகத்தைச் சேர்ந்த கந்தோனா (CANTONA), பார்வையாளர் ஒருவர் அவரை அவமதித்த காரணத்தால் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதும் விளையாட்டரங்கிலிருந்து வெளியேற்றப்பட்டதும் தெரிந்ததே.





அதனைத் தொடர்ந்து அவருக்கு லண்டன் நகரத்தின் தெற்குப் பேட்டை குறைடோன் மஜிஸ்றேற் நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது.

தண்டனைப் பிரகாரம் திரு. கந்தோனா ஒரு மாதத்துக்கு 120 மணித்தியாலங்களை பொது மக்கள் நலனுக்காக அர்ப்பணிக்கும்படி உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து அவர் அண்மையில் SALFORD ஐ சேர்ந்த சிறார்களுக்கு (நாளொன்றுக்கு 50 சிறார்கள் வீதம்) உதைபந்தாட்ட வகுப்புக்களைத் தொடங்கியுள்ளார்.

ஒரு நாளைக்கு 4 மணித்தியாலங்களை இவர் இதற்காக ஒதுக்கவேண்டியுள்ளது.

கந்தோனா இங்கிலாந்து மக்களால் ஒரு தெய்வத்துக்கு சமமாக கருதப்படும் அதேவேளை பத்திரிகைகளின் அப்பட்டமான சாடல்களை வெறும் பித்தலாட்டமென குற்றம் சாட்டுகிறார்கள்.

உதைபந்தாட்டம் கற்றுக் கொள்ளச் செல்லும் 700 சிறார்களும் யாத்திரைக்குப் போவதைப் போன்று காணப்படுவதாயும், கந்தோனாவை காணத் தவறிய சிறார்களை திருப்திப் படுத்துவதென்பது லண்டனில் உள்ள பெற்றோர்களுக்கு ஒரு புதிய தலையிடியாகி விட்டதெனவும் கூறப்படுகிறது.

## 46 வயதில் ஜோர்ச் போமன் மீண்டும் உலக சாம்பியன்

லொஸ்வேகாஸ் இல் கடந்த 22.04.95 இல் நடைபெற்ற அதிபார (HEAVY WEIGHT) உலக குத்துச் சண்டை சம்பியன் போட்டியில் 46 வயதுடைய ஜோர்ச் போமன் மீண்டும் தனது சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொண்டார்.

இவர் ஜேர்மனியைச் சேர்ந்த அக்ஸல் சூல்ஸ் என்னும் வீரரை புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தார். கடமையாற்றிய மூன்று நீதிபதிகளில் இருவர் 115 இற்கு 113 புள்ளிகள் மதிப்பளித்தனர். மூன்றாமவர் 114 இற்கு 114 மதிப்பளித்திருந்தார்.

இறுதிக் கட்டத்தில் இவர் வலது கையில் தாக்கப்பட்டும், ஒரு கண்ணில் காயப்பட்டும் இருந்தபோதும் தனது நிலையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

கடந்த 20 வருடங்களில் இவர் பல தடவைகள் உலக சாம்பியனாக வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மைக்கல் சாங் வெற்றி பெற்றார்

ஹொங்கொங் இல் நடைபெற்ற சர்வதேச தரத்திலான டென்னிஸ் சுற்றுப் போட்டியில் அமெரிக்கரான மைக்கல் சாங் வெற்றிபெற்றுள்ளார். அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்கரான ஜிம் குறியரை 6:4 - 6:2 என்ற அடிப்படையில் தோற்கடித்த இவர், இறுதி ஆட்டத்தில் சுவீடனைச் சேர்ந்த BJOIRKMAN ஐ 6:3 - 6:1 என்ற அடிப்படையில் தோற்கடித்துள்ளார்.



# உதைபந்தாட்ட விதிமுறைகள்

- ஜேம்ஸ் வெற்றி -

## OFF SIDE (அகல் அருகு விதி)

இந்த விதியானது மிகவும் சுருக்கமானதாகும். ஆனால் நடுவர் அதைக் கையாளும் பட்சத்தில், பலரது கண்டிப்புகளுக்கும், தகுதி கணித்தல்களுக்கும் ஆளாவது மட்டுமின்றி, ரசிகர்கள், ஆதரவாளர்கள், ஏன் கழகங்களைச் சார்ந்தவர்களின் வாக்குவாதங்களுக்கும் உள்ளாகி விடுகின்றனர்.

ஜோசப் மோரியஸ கூறுவதைப் போன்று, நாம் சரித்திரத்தின் 50 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றால், அப்போதே தாக்குதல் வீரர்கள் DEFENDERS இந்த விதியை பலமுள்ள விதத்தில் பாவித்து வெற்றிகண்டனர் என்கிறார். ஆனால் தாவிட் ஆகர் கூறும்பொழுது, இன்றைய கழகங்களில் பெரும்பாலானவை இந்த விதியை ஒரு தந்திரோபாயமாக LA STRATEGIE எதிர் அணிகளுக்கு, எதிராகப் பாவிப்பதை பார்க்கக்கூடியதாக இருக்கின்றது என்கிறார்.

ஈழ விளையாட்டுக் கழகங்களைப் பொறுத்தவரை, சிக்கலான நேரத்தில் அமைதியை இழக்காது, நிதானத்துடன் இந்த விதியை, தந்திரமாக, எதிரணியினருக்கெதிராக பாவித்து, அந்த அணியை திணறடிக்கும் ஆற்றல் பக்குவத்தை அடையவில்லை என்றே கூற வேண்டும். இந்த உபாயத்தை திறமையாகக் கடைப்பிடிப்பதற்கு, வீரர்கள் பந்தைப் பறிகொடுக்காது தங்கள் பாதுகாப்பில் வைத்திருக்கத்தக்க ஆற்றலை நன்கு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இன்று, விளையாட்டானது மிக வேகம் கூடியதாக இருப்பதன் காரணத்தால், மத்தியஸ்தர் இந்த அகல் அருகு விதியை OFF SIDE சரியாக நடைமுறைப்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. எல்லைக் கோட்டு நடுவர் LINESMAN கூட, தொடர்ச்சியாக எல்லைக் கோட்டு ஓரமாக முன்னும் பின்னுமாகச் சென்று கவனிக்க வேண்டும்.

இந்தக் கவனிப்பு நடவடிக்கையின் போது, எல்லைக்கோட்டு நடுவர் LINES MAN ஏக சிந்தனையோடு CONCENTRATION முன்னேறிச் செல்லும் தாக்குதல் வீரன் ADVANCING ATTACKER அல்லது பின்னிற்கும் கடைசி தாங்கல் வீரனுக்கு LAST DEFENDER நேராக தன்னையும் நிலைப்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, மேலே கூறியவண்ணம், சில அணிகள் அகல் அருகு விதியை தங்கள் வெற்றிக்கு வேண்டிய உபாயமாக ஆக்கிக் கொள்வதால், தாக்குதல் வீரர்களை ATTACKING மைதானத்தின் மத்திய பக்கமாக வைத்திருக்கும் நோக்கில், தங்கள் நிலையை முன்னே நகர்த்தி செல்வதைப் பார்க்கமுடிகின்றது. இந்தச் சூழ்நிலைகளில், நடுவர் பங்கேற்பு மிகவும் கடினமானதொன்றாகும். இதற்கு எல்லைக்கோட்டு நடுவர் விதிவிலக்கல்ல. அவர் திறமைசாலியாக இருந்த போதிலும், விளையாட்டு முடிவில், பார்வையாளர்களது தகுதிக் கணிப்பின் போது, தாக்கமான வாக்குவாதத்துக்கு உட்படுத்தப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

மூன்றாவதாக அகல் அருகு விதியை OFF SIDE LAW சற்றுப் பார்ப்போம்.

இதை பின்வருமாறு விளங்கிக்கொள்ள முடியும். மனதில் அடிப்படையாகக் கொள்ளவேண்டியதாவது, நடுவர் பந்து புறப்படுவதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமே தவிர, பந்து வந்தடைவதையல்ல. ஆனால் ஒரு வீரரை பின் வரும் சூழ்நிலைகளில் நடுவர் தண்டிக்க முடியும்.

OFF SIDE POSTION ல் அருகு நிலையில் நின்ற வண்ணம், குறிப்பிட்ட வீரர், அகல் அருகு நிலையில் (தனிப்படுத்தப்பட்ட நிலையில்) விளையாட்டில் அல்லது எதிரணியினருடன் தலையிட்டால்,

அகல் அருகு நிலையில் நின்றவண்ணம், பயனடைய முயற்சித்தால், அவர் தண்டிக்கப்பட வேண்டும்.

மேலே சுருக்கமாகக் கூறப்பட்ட விடயங்களை, அடுத்த இதழில் வரைபடங்களோடு விபரமாக, விரிவாகப் பார்த்து புரிந்து கொள்ளலாம்.

(தொடர்ந்து வரும்)

உதைபந்தாட்ட வீரர்கள், ஆதரவாளர்கள், பார்வையாளர்கள், பயிற்றுனர்கள் மற்றும் போட்டிகளை முன்னின்று நடாத்தும் அனைத்து ஈழத் தமிழர்களுக்கும் உதைபந்தாட்டத்தைப் பற்றியும், அதன் விதி முறைகள் பற்றியும், இன்றைய காலகட்டத்தில் இடம்பெற்ற விதிகளின் (LAW) மாறுதல்களையும், வரைபடங்கள் மற்றும் வரைவிலக்கண வாக்கியங்கள் (DEFINITIONS) என்பவற்றின் உதவியுடன், வாரா வாரம் வெளியாகும் ஈழமுரசு பத்திரிகை மூலம், விளக்கமாகவும், தொடர்ச்சியாகவும் அறியத்தருவதில் பெருமையடைகிறேன்.

இவ்வளவு காலமும் உதைபந்தாட்டத்தை ஒரு சிலர் மட்டும் புத்தகங்கள் வழியாக படித்தறிந்து பயன் பெற்றார்கள். ஆனால் எனது இந்த முயற்சி எல்லோரும் பயனடைய உதவும் என்று நம்புகிறேன்.

கடந்த மூன்று வருடகால தனிப்பட்ட அனுபவத்திலிருந்து, ஒன்றை மட்டும் நான் நன்கு உணர்ந்து கொண்டேன். அதாவது அந்தரங்கத்தில் ஆடி, அரங்கேற்றி பின்பு அம்பலத்தில் ஆடும்போது அதில் அர்த்தம் உண்டு. இது என் வாழ்க்கையில் நான் தீர அறிந்த உண்மையாகும்.

இந்த ஆண்டிற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ள இந்நிலையில், கடந்த வருடங்களில் பொறுப்பற்ற ஆதரவாளர்களின் தவறுகளினாலும், வீரர்களின் விதிகளை மீறிய செயல்களால் கழகங்களும், கழக வீரர்களும் பாதிப்படைந்ததை தவிர்க்கும் முகமாகவே இத்தொடரை எழுத முனைந்துள்ளேன்.

அத்துடன் உலக நாடுகளில் நடைபெறும் விளையாட்டுக்கள், விளையாட்டுக் கழகங்கள், வீரர்களின் விபரங்களையும் தமிழில் அறிந்து கொள்வதால், நம் இளைய பிறப்புக்களுக்கு முன்னோடியாவது மட்டுமன்றி அவர்களை வளர்க்கும் ஆற்றல் படைத்தவர்களாக்கவும் முடியும் எனவும் நம்புகிறேன்.

யாவரும் பயன்பெற ஆசி கூறும் உங்கள் ஜேம்ஸ் வெற்றி-அடம்பன் (சம்பந்திரிசியார் கல்லூரி பழையமாணவன்)

## பாரிஸ் ஈழநாடு நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவுடன் பாரிஸ் ஈழநாடு எதிர்வரும் 30.04.1995 அன்று உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்த உள்ளது.

எட்டுக் கழகங்களைச் சேர்ந்த 10 அணிகள் இப் போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கின்றன.

ஒவ்வொரு போட்டிகளும் 20 நிமிடங்கள் (10 - 5 - 10) கொண்டதாக அமையும்.

முதல் சுற்று லீக் முறையிலும் அடுத்த சுற்றுக்கள் நொக் கவுட் முறையிலும் நடைபெறும் இச் சுற்றுப்போட்டி பிரான்சில், இவ்வருடத்தின் முதலாவது சுற்றுப்போட்டியாகும்.

### பங்குபற்றும் அணிகள்

#### அணி அ

பாடும் மீன் வி. க. (சிவப்பு)
சென். அன்ரனிஸ் வி. க. (மரூன்)
வானவில் வி. க
ஞானோதயா வி. க.
பாரிஸ் தமிழர் கல்வி நிலைய வி. க

#### அணி ஆ

பாடும் மீன் வி. க. (மஞ்சள்)
சென். அன்ரனிஸ் வி. க. (வெள்ளை)
மன்னார் எவர் கிரீன் வி. க.
பரீசியன் வி. க.
வவுனியா எவர் கிரீன் வி. க.

ஈழமுரசு
Eelamurasu Weekly

# வரலாறு தந்த பாடம் போரின்றி விடிவில்லை!

கடந்த சில மாதங்களாக இழுபட்டுக் கொண்டிருந்த பேச்சு வார்த்தை ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

கடந்தகால அரசுகள் போட்டுவைத்திருந்த எல்லாத் தடைகளையும் தான் அகற்றிவிட்டதாக ஒரு தோற்றத்தை சந்திரிகா அரசு உருவாக்கி, தமிழ் மக்களின் இரட்சகராக தன்னைக் காட்டிக் கொண்டிருந்த மாயத் திரை இப்போது கிழிந்து போய்விட்டது.

வட-கிழக்கு அபிவிருத்தி என்பது யாழ். மாநகர அபிவிருத்தியாக சுருங்கிய போதே அரசின் கபடத்தனம் தமிழ் மக்களுக்கு புரியத்தொடங்கி விட்டது.

ஆனாலும், அவ்வப்போது தடைகளை நீக்குவதாக வெளியிட்ட அறிக்கைகள் மூலம், பேச்சுவார்த்தையை ஒரு முடிவுக்கு வரவிடாமல் சந்திரிகா அரசு இழுத்துப் பிடித்திருந்தது. இறுதியில், எரிபொருள் தடையை முற்றாக அகற்றுவதாகவும், கடல் வலயத் தடைச் சட்டத்தை தளர்த்துவதாகவும் அறிவித்தது. ஆனால் அவ் அறிவிப்பு வெறும் அறிவிப்பாகவே போய்விட்டது. எரிபொருள் தடை நீக்கப்பட்டதை வர்த்தமானியில் அறிவிப்பதாக சொன்ன செய்தி வர்த்தமானியில் வெளிவரவில்லை. தடைவிதித்த செய்தி உடனடியாகவே வெளிவந்தது.

ஆனால், நிலமைகளைப் பார்க்கும்போது, கடந்த கால அரசுகள் போலவே பேச்சுவார்த்தை, சமாதானம் என்று தமிழ்மக்களை ஒரு சுகமான கனவில் ஆழ்த்திவிட்டு, கிடைக்கின்ற இடைவேளையில் பலவீனப்பட்டுப் போன தனது இராணுவத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலேயே அரசு கவனம் செலுத்திக் கொண்டிருந்ததே தவிர, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையோ, அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியோ அக்கறைப்பட்டதாக தெரியவில்லை.

பாரிசில் நடக்கின்ற மகாநாட்டில் நிதி உதவியை அதிக அளவு பெறும் நோக்குடனேயே, அண்மைக்காலத்தில் பேச்சு வார்த்தை என்ற நாடகத்தின் மூலமாக சர்வதேசத்தையும், தமிழ் மக்களையும் சந்திரிகா அரசு ஏமாற்ற முனைந்து கொண்டிருந்தது.

இப்போது விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகி போரைத் தொடங்கிய பின்பும், மிகப் பெரிய தாக்குதலைத் தொடுத்த பின்பும், அத் தாக்குதல் பற்றியோ அழிவுகள் சேதங்கள் பற்றியோ எதுவிதமான செய்திகளையும் வெளியிடாமல் மறைக்க முயலும் அதேவேளை, இப்போதும் தாம் பேச்சு வார்த்தைக்கும் சமாதானத்துக்கும் தயாராக இருப்பதாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இராணுவ முகாங்கள் மீது மட்டுமே தாக்குதல்களை நடாத்துகின்றனர். ஆனால் சமாதானத்திற்கு இப்போதும் தயாராக இருப்பதாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசோ, அப்பாவித் தமிழ் மக்களை கைது செய்வதிலும், துன்புறுத்துவதிலும், சிறையில் வைத்திருப்பதிலுமே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இதைவிட பொது மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்கள் எல்லாவற்றையும் மீண்டும் தடை செய்துள்ளதுடன், கடலில் மீன்பிடிப்பதையும் தடை செய்துள்ளது. குறிப்பாக பாரிசில் மகாநாடு நடைபெறுகின்ற எல்லாக் காலங்களிலும், எல்லா அரசுகளும் எடுக்கின்ற சமாதானக் கரவடியையே சந்திரிகாவும் எடுக்கிறார்.

ஆனால் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் அவதானமாக இருந்தபடியால்,போரலிச் சமாதானம்- வந்தவழியே திரும்பிப் போய்விட்டது.

# கொலைஞர் படைக்கு சந்திரிகா அரசு நிதி ஒதுக்கீடு

ஐக்கிய தேசியக் கட்சி அரச காலத்தில் சிறீலங்கா பொலிஸ் படையில் செயல்பட்ட பச்சைப் புலிகள் எனும் கொலைஞர் படைபோல், சந்திரிகா அரசிலும் ஒரு படையை நிர்மாணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுக்கு விரோதமானவர்கள் என நினைக்கும் மக்களை யாருக்கும் தெரியாமல் அழிக்கும் மும்முரமான மிகக் கொடிய வேலைகளில் ஈடுபட்டிருந்த பச்சைப் புலிகள் படை, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் தன் கைவரிசையைக் காட்டியது யாவரும் அறிந்ததே.

எனினும் அப் படை சந்திரிகா அரசு பீடம் அமைத்தபின் செயற்படாமல் இருந்தது. அண்மையில் சந்திரிகாவின் அரசு இப் படையை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இந்த நிதி ஒதுக்கீடு, விடுதலைப் புலிகளுடனான சமாதானம், பேச்சுவார்த்தை என அரசு அறிவித்த காலத்திலேயே நடந்துள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறீலங்காவின் பழுத்த கடற்படை அதிகாரி வட பகுதிக்கு மாற்றம்

சிறீலங்காவின் கடற்படையில் நீண்ட காலம் சேவையாற்றி அனுபவம் மிகுந்த, முதிர்ந்த அதிகாரி ஒருவரை வடபகுதிக் கடற்படைக்கு பொறுப்பாக அரசால் மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த 19.04.95 அதிகாலையில் திருகோணமலையில் நடந்த கடற்படைக் கப்பல்கள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து, கொழும்பில் கடற்படைத் தலைமையகத்தில் சேவையாற்றிய ஒரு உயர் அதிகாரியை அரசு உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் செய்துள்ளது.

இது கடற்படைக் கப்பல்களை புலிகளின் தாக்குதல்களில் இருந்து காப்பாற்றும் நோக்கமே என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படை முகாம்களுக்கு மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள படை முகாம்களுக்கும் விசேட அதிகாரிகளை அரசாங்கம் அவசர அவசரமாக நியமித்துள்ளது.

# சந்திரிகா - ரணில் ரகசிய சந்திப்பு

பாதுகாப்புப் படைகளோ அன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளோ தாக்குதலில் ஈடுபடும் எந்த விபரமும் தமக்குத் தெரியாது என கூறிய சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 23.04.95 அன்று ஜனாதிபதியுடன் ஒரு ரகசிய சந்திப்பை நடத்தியதாக கொழும்புச் செய்தியொன்று கூறுகிறது.

நடைபெறும் யுத்தத்திற்கு ஐ.தே. கட்சியின் ஆசியைக் கூறு முகமாக சந்திரிகாவைச் சந்தித்தாரா அல்லது யுத்தத்தின் வெற்றிக்கு புதிய ஆலோசனைகளை வழங்கினாரா என்பது தெரியவில்லை.

ஆனால் இறுதியாகக் கிடைத்த செய்திகளின்படி நடைபெறும் யுத்தத்தில் அரசு வெற்றி பெற தன்னால் ஆன முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் யுத்தத்தில் வெற்றிகாண முப்படைகளுக்கும் நல்லாசி கூறியதாகவும் தெரிகிறது.

# வடக்கில் புலிகளின் விமான இறங்குதுறை

புலிகள் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வடபகுதியில் விமான ஓடுபாதைகள் அமைத்து வருவதாக சிறீலங்காவின் உளவுத்துறைச் செய்திகள் கூறுகின்றன.

தமது பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசமான வடபகுதியில் புலிகள் மூன்று விமான ஓடு பாதைகளை அமைத்திருப்பதாகக் கூறும் சிறீலங்கா உளவுத்துறை, இது பற்றி அரசு அச்சம் கொண்டிருப்பதாகக் கூறுகிறது. தற்போது புலிகள் நடாத்திக் கொண்டிருக்கும் இராணுவ ரீதியிலான தாக்குதல்களை கிழக்கில் பூரணமாகச் செயற்படுத்தப் போவதாகவும், இத் தாக்குதல்களை சமாளிக்கும் முகமாக அரச படையினர் உசார் நிலையில் வைக்கப்பட வேண்டுமெனவும் அரசுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள் ஐ.தே.கட்சி எம்.பி.

கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு அம்பாறை மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. தயாரத்தினா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் கிழக்குமாகாண எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களின் பாதுகாப்புக்காக விசேட கவனம் செலுத்தப்பட்டது. இன்று அத்தகைய பாதுகாப்பு கிடையாது என்பதனை நாம் அறிவோம். இன்று புலிகளால் எல்லைப்புறக் கிராமங்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பை அரசு பலப்படுத்த வேண்டும் எனவும் எம்.பி. தயாரத்தின அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பத்திரிகைகள். சஞ்சிகைகள், இறக்குமதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள் மரக்கறி கடலுணவு வகைகள் அன்பளிப்புப் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள




காயத்திரி

210, Rue du Fg. St. Denis, 75010 Paris.
Metro: La Chapelle ou Gare du Nord
Tel: 42 09 22 43 Fax: 46 07 90 34

GAYATHIRY

எம்மால் 19.04.95 அன்று வெளியிடப்பட்ட விசேட பதிப்பில் வெளியாகியவற்றை இங்கே பிரசுரிக்கிறோம்.

## மூன்றுமாத மோதல் தவிர்ப்பு முறிந்தது....

# இரு பீரங்கிப் கப்பல்கள் அழிப்பு! கடற்படையினர் 11 பேர் பலி

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையிலான மூன்றுமாதகால தாக்குதல் தவிர்ப்பு முறிவடைந்துள்ளதாகவும் இது புலிகளால் அரசுக்கு அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்தில் திருகோணமலைத் துறைமுகத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய கடற்படைத் தளத்தில் நங்கூரமிட்டிருந்த இரண்டு பீரங்கிக் கப்பல்கள் புலிப் போராளிகளால் தாக்கி அழிக்கப்பட்டு 11 கடற்படையினர் கொல்லப்படும், அதிக தொகையினர் படுகாயமடைந்திருப்பதாகவும் சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் போரில் 'ஈழப் போர் - 2' சந்திரிகாவின் வருகையுடன் முடிவுற்றது. முன்னைய யு. எம். பி. அரசாங்கம் தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்துவிட்ட யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவும் விடுதலைப் புலிகள் புதிய அரசிற்கு சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு பேச்சுவார்த்தை, மோதல் தவிர்ப்பு போன்றவற்றிற்கு ஆதரவு அளித்திருந்தது தெரிந்ததே. ஆனால், சந்திரிகா அரசு தன்னை சமாதானப் புறா என வெளியுலகிற்கு காட்டிக் கொள்ளும் அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினையை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுக முற்பட்டது. முன்னைய அரசுபோல ஒரு இராணுவ தீர்விற்கே சந்திரிகா அரசும் முக்கியத்துவம் கொடுக்க முனைகிறது.

நாளாந்தப் பிரச்சினைகளைக் கூடத் தீர்ப்பதற்கு அரசு தயக்கம் காட்டியதால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பேசித் தீர்க்கப்பட்ட, தமிழ் மக்களின அடிப்படைப் பிரச்சினைகளை மார்ச் 28-ம் திகதிக்கு முன்னர் தீர்க்கவேண்டுமென அரசுக்குக் காலக்கெடு விதித்தார்.

ஆனால் சந்திரிகா எரிபொருள்களுக்கான மற்றும் கடல் வலயத் தடையை உடனடியாக நீக்குவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இக் காலக்கெடு ஏப்ரல் 19 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஆனால் இக்காலப் பகுதிக்குள் அரசு எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுத்ததாக அறியவரவில்லை. மாற்றாக இராணுவம் புலிகளைச் சீண்டியும் தமிழ் மக்கள் மேல் கெடுபிடிகளை அதிகமாக்கியும் வந்துள்ளது. இந்நிலையில் புலிகள் தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து விலகியிருப்பதும் இது அறிவிக்கப்பட்டு ஒரு சில மணி நேரத்திற்குள் பெரும் தாக்குதல் நிகழ்ந்திருப்பதும் 'ஈழப் போர் 3' இன் ஆரம்பமா என எண்ணத் தோன்றுகின்றது. இதனால் ஏற்படப்போகும் பேரழிவிற்கு சந்திரிகாவே பொறுப்பேற்க வேண்டுமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## ரத்வத்த அவசர இந்தியப் பயணம்

சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, விடுதலைப் புலிகளின், சிறீலங்கா கடற்படைக் கப்பல்கள் மீதான தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா விரைந்துள்ளதாக நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகாவிற்கு, மோதல் தவிர்ப்பையும், சமாதானப் பேச்சுவார்த்தையையும் முடிவுக்குக் கொண்டுவருவதாக கடிதம் மூலம் தெரிவித்ததையும், அதனைத் தொடர்ந்து திருகோணமலையில், 19.05.1994 அன்று அதிகாலை கடற்படைக் கப்பல்கள் இரண்டு தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் அவசரப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு ரத்வத்த இராணுவக் கூட்டுக்கானதும், இராணுவ உதவிகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவார் என்றும் நம்பப்படுகிறது. சந்திரிகா அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்து இந்தியப் பிரதமரையும், அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்தபோது இவ் இராணுவ உடன்படிக்கைக்கான அடித்தளம் இடப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. மோதல் தவிர்ப்பு காலத்தை, அரசாங்கம் யுத்த முஸ்தீப்புக்கு பயன்படுத்துவதாக தனது கடைசிக் கடிதத்தில் தலைவர் பிரபாகரன் குற்றஞ்சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## சமாதானப் பேச்சிலிருந்தும் மோதல் தவிர்ப்பிலிருந்தும் புலிகள் விலகுவதாக அறிவிப்பு

**காலக்கெடுவிற்குள் கோரிக்கைகளை நிறைவேற்ற சிறீலங்கா அரசாங்கம் தவறிவிட்டது.**

சமாதானப் பேச்சுக்களிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விடுதலைப் புலிகள் இயக்கம் 19ம் திகதியிலிருந்து விலகிக்கொள்வதாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு, நேற்று கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கைகள் சம்பந்த மட்டில் அரசாங்கத்தின் பதில்கள் மழுப்பல்களாகவும் நழுவல்களாகவும் இருந்த காரணத்தினால் புலிகளின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் திட்டமிட்ட முறையில் அரசாங்கம் காலம் தாழ்த்தியமையுமே விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்களிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் இருந்தும் விலகிக் கொள்வதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதாரத் தடையும் கடல் வலயத் தடையும் மீண்டும் அமுல்

19 பொருட்கள் மீதான பொருளாதாரத் தடையை அரசாங்கம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. மேலும் கடல்வலயத் தடை மீதான தளர்வுகள் அனைத்தும் நீக்கப்பட்டு, மீண்டும் முழுமையான கடல்வலயத் தடை அமுல்படுத்தப்படுவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. அதேவேளை தாம் சமாதானத்திற்கு தயாராக இருப்பதாகவும் அரசு கூறியுள்ளது.

இவை ஏறகனவே நடைமுறையில் அமுலில் இருந்து வருபவையே என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## விசேட பதிப்பு 19-04-1995

## தலைவர் பிரபாகரன் சந்திரிகாவிற்கு கடிதம்

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்;
யாழ்ப்பாணம்.
18.04.1995

கனம் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க,
சிறிலங்கா ஜனாதிபதி
ஜனாதிபதி செயலகம்,
கொழும்பு.

உங்களது 12.04.1995 திகதியிட்ட கடிதம் கிடைத்தது. நன்றி. உங்களது கடிதத்தில் வெளியிட்ட கருத்துக்களை மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்தோம். நாம் எழுப்பிய முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக நீங்கள் தெரிவித்த பதில் உரைகள் எமது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யத் தவறியமையால் நாம் மிகவும் அதிருப்தியடைந்துள்ளோம். கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நடந்த கருத்துப் பரிமாற்றம் மூலம் உங்களுக்கு உண்மை நிலையை எடுத்துரைத்தோம். அதன் பலாபலனாக பொருளாதாரத் தடைநீக்கம் என்ற ஆக்கபூர்வமான முடிவை மட்டும் உங்களிடமிருந்து நாம் பெறமுடிந்தது.

இந்த முடிவானது 24 மார்ச் 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட போதும் அதை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் திட்டமிட்ட முறையில் காலம் தாழ்த்தப்பட்டது. நாம் விதித்த காலக்கெடுவை முறியடிக்கும் நோக்கிலேயே இந்த திட்டமிட்ட இழுத்தடிப்பு நேர்ந்திருக்கின்றது.

நாம் முன்வைத்த மற்றைய பிரச்சினைகள் சம்பந்த மட்டில் உங்களது பதிலுரைகள் மழுப்பல்களாகவும், நழுவல்களாகவும் எதிர்காலப் பேச்சுக்களில் முடிவெடுக்கவேண்டியவையாகவும் அமையப்பெற்றுள்ளன.

மீன்பிடி சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு சில தளர்வுகள் மட்டும் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் பெரும்பகுதி கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்குத் தடைகள் தொடர்ந்து இருக்கவே செய்கின்றன.

24 மார்ச் 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில் மீன்பிடி மீதான சகல தடைகளும் நீக்கப்படுமென நீங்கள் உறுதியளித்தும் தடைகள் முற்றாக நீக்கப்படவில்லை.

பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்திற்கு பாதையைத் திறந்துவிடுதல், கிழக்கு மாகாணத்தில் எமது ஆயுதப் போராளிகளின் நடமாட்டம் ஆகிய அதிமுக்கிய பிரச்சினைகள் சம்பந்தமட்டில் உங்களது முடிவுகள் எமக்கு ஏற்புடையதாக இல்லை. எதிர்காலப் பேச்சுக்களின் போது இவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என சொல்லப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது.

இந்த முக்கிய பிரச்சினைகளை ஓரந்தட்டிவிட முனையும் எத்தனிப்பு ஒன்றை இது தெளிவாகக் காட்டுகின்றது. அதாவது உண்மையான சமாதானத்தையும் இயல்புநிலையையும் தோற்றுவிக்கும் நோக்கம் எதுவும் உங்களது அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. பதிலாக இராணுவத்தின் நலனைப் பேணுவதிலேயே நீங்கள் அதிக அக்கறை காட்டுகிறீர்கள். அதுமட்டுமன்றி மோதல் தவிர்ப்பு ஒப்பந்த சூழ்நிலையை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஆயுதப்படையினரின் பலத்தை கட்டியெழுப்புவதில் அரசு கவனம் செலுத்துகிறது என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

19 ஏப்ரல் 1995 என்று நாம் விதித்த காலக்கெடுவிற்குள், அந்த கால அவகாசத்தில் மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைகள் எதையும் நீங்கள் நிறைவுசெய்யத் தவறியமையால் நாம் ஏற்கனவே தெரிவித்தது போல இத் திகதியில் இருந்து சமாதானப் பேச்சுக்களில் இருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக் கொள்வது என்ற வேதனைக்குரிய முடிவை எடுத்துள்ளோம். இந்த முடிவை எடுப்பதைத் தவிர எமக்கு மாற்றுவழி எதையும் நீங்கள் விட்டுவைக்கவில்லை. இந்த துரதிஷ்டமான சூழ்நிலை குறித்தும் நாம் மிகவும் வருத்துகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

வே. பிரபாகரன்
தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்

## இரு பீரங்கிக் கப்பல்கள் மீதான தாக்குதலில் பெண் கரும்புலிகள்

19-04-1995 அதிகாலை திருகோணமலையில் சிறிலங்கா கடற்படைத் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு கப்பல்கள் மீதான தாக்குதலின் பின்னர், 11 கடற்படையினரின் உடல்களும், 4 விடுதலைப் புலிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் இதில் இருவர் பெண் புலிகள் எனவும் அரசு அறிவித்துள்ளது. இதுபற்றிய புலிகளின் உத்தியோகபூர்வமான செய்திகள் கிடைக்கப் பெறவில்லை.

# உரிய உபகரணங்கள் இல்லாமையே விபத்துக்குக் காரணம்

## - கடற்படை அதிகாரி -

19.04.95 இல் திருகோணமலை கடற்படைத் தளத்தில், கப்பற் படைக் கப்பல்கள் இரண்டு விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த கடற்படை அதிகாரி ஒருவர், இவ்வகையான தாக்குதல்களை முன்னரே அறிந்து கொண்டு நம்மைப் பாதுகாக்கக் கூடிய உரிய கருவிகள் எம்மிடம் இல்லாமைதான் கடற் தாக்குதல்களில் நாம் பெருமளவு பாதிக்கப்பட வேண்டியிருப்பதற்கு முக்கிய காரணமாக உள்ளது.

தாக்குதல்களை நடத்தியவர்களும், மீனவர்கள் போன்ற உருவிலேயே வந்து தாக்குதல்களை நடத்தியதாகவும் அவர் விபரித்துள்ளார்.

இவரின் கருத்துப் பற்றி செய்தி தெரிவித்த செய்தித் தாபனமொன்று இத் தாக்குதல் நடந்திருப்பது அரசினால் தடை செய்யப்பட்ட பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயே. எனவே படையினரைத் தவிர எவரும் போக முடியாத இப் பிரதேசத்துக்குள் மீனவர்கள் போல் சிலர் வந்தார்கள் என்னும் கூற்று குழப்பமாகவே இருக்கிறது என தெரிவித்துள்ளது.

# பிரான்ஸ் இலங்கைக்கு உதவி

சலுகை வர்த்தக கடன்களை உள்ளடக்கிய 45 கோடி ரூபா பெறுமதியான நிதி உடன்படிக்கையில் இலங்கையும் பிரான்சும் கைச்சாத்திட்டுள்ளன. கடந்த 12 ம் திகதி பாரிசில் இந்த உடன்படிக்கையில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டன.

அம்பத்தல நீர் வளங்கள் பிரிவிலை அபிவிருத்தி செய்தல், கொழும்பு நகரப் பகுதியில் புதிய தொலைபேசி பரிவர்த்தனை இணைப்பு வினியோகம் என்பவற்றுக்கு இந் நிதியுதவி பயன்படுத்தப்படும்.

# வாகனங்கள் குண்டுவைத்துத் தகர்ப்பு

## 'படை அதிகாரி சொல்கிறார்,

புலிகள் நடத்திய தாக்குதலின்போது இராணுவத்தினர் முகாமை கைவிட்டு காட்டுக்குள் ஓடிவிட்டதாகவும், முகாமை கைப்பற்றிய புலிகள் முகாமில் இருநத பல வாகனங்களை குண்டு வைத்துத் தகர்த்துவிட்டு சகல ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுவிட்டதாக, பெயர் குறிப்பிட விரும்பாத கிழக்கு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பொருளாதாரத் தடையை அரசு உடன் நீக்க வேண்டும்

## வாசுதேவ நாணயக்கார

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டு வரும் அரசு, வட பகுதிக்கான பொருட்களுக்குத் தடை விதித்தது ஒரு முரண்பாடான செயல் என இரத்தினபுரி பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கூறியிருக்கின்றார்.

அவர் மேலும் இது பற்றிக் குறிப்பிடுகையில், அரசு யுத்தம் செய்வது புலிகளுடன்தான். எனவே அப்பாவி மக்களுக்குரிய பாவனைப் பொருட்களுக்கு தடை விதிப்பதால் அரசு பெரியதொரு வெற்றியைத் தேடிக்கொள்ளப் போவதில்லை.

அண்மைக் காலத்தில் சந்திரிகா அரசு மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை எதிர்பார்ப்பை மீண்டும் பொருளாதாரத் தடை என்னும் கொடூரச் செயல் மறக்கச் செய்துவிடலாம்.

சிறீலங்கா அரசு விதிக்கும் பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள், நம்மை விட்டு விலகிப் போவதையே நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. துரதிஷ்டவசமாக பின்தோக்கிப் போன இந்த சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் இரு பகுதியினரும் ஈடுபட வேண்டுமென நாம் பிரார்த்திக்கின்றோம் எனவும் கூறினார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## அமெரிக்காவில்...

கள் துக்கம் அடைந்துள்ளனர். இத்தகைய அழிவுகளை ஏற்படுத்துகின்ற, ஜனநாயக மரபுகளைச் சீர்குலைக்கின்ற பயங்கரவாத நடவடிக்கைகளை இலங்கை வன்மையாகக் கண்டிக்கின்றது. நாகரிகமடைந்த சமுதாயத்தில் அத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளை ஊகிக்க முடியாது. அமெரிக்க மக்களுக்கும், அரசுக்கும், உயிரிழந்தோரின், குடும்பத்திற்கும் எமது அனுதாபங்களை தெரிவிக்கின்றோம் என்று அவ்வறிக்கையில் மேலும் குறிக்கப்பட்டுள்ளது.

# கதிர வெளி இராணுவத்தின் மீதும் புலிகள் ஆவேசத்தாக்குதல்

கட்டுமுறிவுத் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை கதிரவெளி முகாமில் இருந்து புறப்பட்டு வெளியே வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் விசேட படையணி அதிவேகத்தாக்குதல் நடாத்தியுள்ளது.

இத்திடீர் தாக்குதலால் நிலைகுலைந்து போன இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் மீண்டும் தமது இராணுவ முகாமுக்குள் போய் முடங்கிக் கொண்டனர். பின் தாக்குதல் முற்றாக முடிந்து விடுதலைப் புலிகள் தளம் திரும்பிய பின்னரேயே தமது முகாம்களை விட்டு இராணுவத்தினர் வெளியேற முடிந்தது.

# கொழும்பு விமான நிலையத்துக்கு விசேட பாதுகாப்பு

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தியதொடர் தாக்குதல்களினால் நிலைகுலைந்து போயுள்ள சிறீலங்கா அரசு, கொழும்பு விமான நிலையத்துக்கும் அதி விசேட பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

கொழும்பு விமான நிலையத்தில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ள அவ் வேளையிலும், எந்த அவசர வேளையிலும் எவ்வித தடங்கல்களும் இன்றி எந்தவொரு இடத்துக்கும் தொடர்பு கொள்ளக்கூடிய அதி சக்தி வாய்ந்த தொலைத் தொடர்பு சாதனம் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜெர்மனியில்...

ஒன்றில் இலங்கையரும் அடங்கியிருந்தனா என தெரிய வந்துள்ளது. இந்த நியோ நாஜி தாக்குதல் குழுவைச் சார்ந்த 50 பேரை ஜெர்மன் பொலிசார் கைது செய்திருப்பதாகவும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மூலம் இலங்கையர், துருக்கியர், உள்ளிட்ட ஜெர்மன் வாழ் வெளிநாட்டவர்களை தாக்குவதற்கான திட்டம் அறியப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை பிரபல நியோ நாஜிக்கட்சியான FBD ஆதரவுத தலைவர் ஒருவருக்கு ஜெர்மன் நீதிமன்றம் 2 வருட சிறைத்தண்டனை விதித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## கிளாலிப்...

களின் கட்டுப்பாட்டிற்குள், அவர்களின் பாதுகாப்புடன் தொடர்ந்தும் நடந்து வருகிறது.

ஏற்கவேவே அரசின் தளம் இப்பகுதியில் இருந்துவந்த போதிலும் அரசபடையினரால் இப்பகுதியை நெருங்க முடியாது கடற்புலிகள் பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்தி வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அரசின் இவ் அறிவிப்பானது கிளாலிப் பயணிகள் மீது விமான தாக்குதல்களை மேற்கொண்டு அப்பாவி மக்களை கொல்வதற்கான முயற்சியா என அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## கொழும்பில்...

அப்பாவி மக்களே இத் தேடுதல் வேட்டைகளில் சிக்கியிருப்பதாக தெரிய வருகின்றது. சமாதான சூழ்நிலையில் தமது சுயதேவைகளை பூர்த்தி செய்வதற்காக வடக்கு கிழக்கிலிருந்து கொழும்பிற்கு வந்திருந்த பல தமிழ் மக்கள், வயது வித்தியாசமின்றி கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவர் அங்கு தயாராக நிற்கும் முகமூடி மனிதர்களால் காட்டிக் கொடுக்கப் படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளைத்...

ஊடுருவுவதைத் தடுக்க எல்லா இடங்களிலும் தடுப்பு நிலையங்களை ஏற்படுத்தி சோதனைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸார் பணிக்கப்பட்டுள்ளனர்.

இது இப்படியிருக்க தற்காப்பு நடவடிக்கையில்தான் படையினர் ஈடுபட்டுள்ளனர் என பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## 14 புலிகள்...

மேஜர் அச்சுதன், லெப். கண்ணதாஸ், லெப். சிவம், லெப். ராஜேந்திரன், லெப். சைலதாஸ், 2வது லெப். சிவராஜ், 2வது லெப். இலக்கியன், வீரவேங்கை தனபாலசிங்கம், வீரவேங்கை ஈழவர்மன், வீரவேங்கை மாவேந்தன், வீரவேங்கை யேசு, வீரவேங்கை ஞானமூர்த்தி, வீரவேங்கை இசைவாணன், வீரவேங்கை தனபாலசிங்கம் ஆகியோருக்கு புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளார்கள்.

திருமண வைபவங்கள், பிறந்தநாள் விழாக்கள், கலந்துரையாடல்கள் போன்ற கலை விழாக்களுக்கு
மூன்று மண்டபங்கள் தன்னகத்தே கொண்டுள்ள பெருமையுடன்

மணவறை, குருக்கள், மாலை, வீடியோ, புகைப்படங்கள் யாவற்றிற்கும் உங்கள் எண்ணம்போல் எங்கள் சேவை

☎: 42 55 61 31

அர்ச்சனா கலையரங்கம்
திருமண மண்டபம்
SELVAM'S
S.A.R.L
46, RUE DE SIMPLON, 75018 PARIS.

FAX: 42 55 22 23

சுத்தம், சுவை, தரம் குன்றாத உணவு வகைகள், கேக், சிற்றுண்டிகள் யாவும் உங்கள் எண்ணம் போல் எங்கள் சேவை

பரதம், சங்கீதம், மிருதங்கம் போன்ற கலை வகுப்புக்கள் இங்கு நடைபெறுகின்றன

அரச அங்கீகாரம் பெற்ற திருமண மண்டபம்

① M° → SIMPLON
② M° → GARE DE L'EST
③ M° → MARX DORMOY

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU" JOURNAL TAMOUL HEBDOMADAIRE

136, Bd de la Villette, 75019 Paris.

Tel: 42 05 93 30 / Fax: 42 05 99 02



தங்க நகைகளா...? தரமான வீடியோ ஓடியோ பிரதிகளா...? ரெடிமேட் ஆடைகளா...?

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை

குமார்ஸ்

**Kumars Shop**
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 35 10
Fax: 42 59 35 00

**K.T.C. Jewels**
193, Rue du Fg. S'.Denis, 75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 42 05 41 36

**Kumars Jewels**
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 11 52
Fax: 42 59 35 00


# கொழும்பில் வீடுவீடாகத் தேடுதல் 1000 க்கு மேற்பட்டோர் கைது



கொழும்பு நகரில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடும் படையினர்

போர் ஆரம்பித்த பின்னர் 1500க்கும் மேற்பட்டோர் கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில், கன்னிலப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகளையெல்லாம் படையினர் விசாரணைக்கு உட்படுத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை இரவு மட்டும் பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தலைநகருக்குள் ஊடுருவியிருந்தால் அவர்களைக் கண்டு பிடிக்கவே இத் தேடுதல் வேட்டை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பிராந்தியத்தில் உள்ள சுமார் 19 பிரதான பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸார் இத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழர்கள் வாழும் வீடுகள், விடுதிகள், லொட்ஜ்கள் என்பனவே இத் திடீர் வேட்டைக்கு இலக்காகின.

## காட்டிக் கொடுக்க முகமூடிகள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## அமெரிக்காவில் குண்டுவெடிப்பு
### இலங்கை மக்களும் துக்கம் அடைந்துள்ளனராம்

அமெரிக்க நகரமான, ஒக்கலஹோமாவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை இலங்கை அரசு வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

ஒக்கலஹோமா குண்டுவெடிப்புச் சம்பவத்தினால் ஏற்பட்ட உயிர் இழப்புகளாலும் அழிவுகளாலும் இலங்கை மக்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஜேர்மனியில் வெளிநாட்டவர் மீது தாக்குதல் திட்டம் பட்டியலில் இலங்கையரும் அடங்குவர்

ஜேர்மனியில் நியோ நாஜிகள் வெளிநாட்டவர்களுக்கு எதிராக தொடர்ந்து அவ்வப்போது தாக்குதல் நடத்திவருவது தெரிந்ததே. இந்த வகையில் நியோ நாஜிக் குழுவொன்று வெளிநாட்டவர் மீது மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த தாக்குதல் திட்டமொன்று, ஜெர்மன் பொலிசாரால் முறியடிக்கப் பட்டுள்ளது.

ஹிட்லரின் பிறந்தின நினைவு நாளிலே ஒரு தாக்குதல் நடத்துவதற்கு நியோ நாஜிகள் திட்டமொன்றினை மேற்கொண்டிருந்தனர் என்றும் அவர்களின் திட்ட வரையறைப் பட்டியல்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கிளாலிப் பயணத்துக்கும் சிறீலங்கா அரசு தடை
### மீண்டும் படுகொலைக்கு இராணுவம் தயாராகிறதா?

திருமலையில் நடைபெற்ற கடற்படை மீதான தாக்குதலைத் தொடர்ந்து மீண்டும் சிறிலங்கா அரசு பொருளாதாரத் தடையை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்நிலையில் கிளாலிப் பயணத்துக்கும் தாம் தடை விதித்திருப்பதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

நீண்டகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இக் கிளாலிப் பயணம் விடுதலைப் புலி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## முல்லைத்தீவு முகாம் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல்

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முகாமை நோக்கி சிறு பீரங்கிகள், மோட்டாரகள் மூலம் பலமணி நேரம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் முகாமின் காவரலன்கள் சில பலத்த சேதம் அடைந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இத்தாக்குதலின் மூலம் இராணுவத்திற்கு ஏற்பட்ட சேத விபரங்கள் என்ன என்பது இதுவரை அறியப்படவில்லை.

## புலிகளைத் தாக்கவும் முப்படைகளுக்கும் பணிப்பு

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துமாறும் புலிகளைத் தேடி எல்லாப் பகுதிகளுக்கும் நடவடிக்கை எடுக்குமாறும் முப்படையினருக்கும் அரசாங்கம் பணிப்புரை வழங்கியுள்ளது.

இதே வேளை விடுதலைப் புலிகள் நகரப்பகுதிகளுக்கும்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## 14 புலிகள் வீரமரணம்

கடந்த 23.04.95 அன்று கட்டுமுறிவுக் குளம் அதிரடிப்படை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் மேஜர் அச்சுதன் உட்பட 14 போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)


புதிய நிர்வாகத்துடன் லாச்சப்பலில் மீண்டும் கீதா மளிகை

அனைத்து மளிகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் மிகவும் மலிந்த விலையில் பெற்றுக் கொள்ள

குறுகிய காலத்தில் மக்களினதும் நண்பர்களினதும்
நன் மதிப்பையும் அன்பையும் ஆதரவையும்
பெற்று வரும் கீதா மளிகை உங்கள்
அனைவரையும் சிறப்புடன் வரவேற்கிறது உங்கள்
கீதா மளிகை

59, Rue Louis Blanc,
75010 Paris.

Metro: La Chapelle
Tel: 42 05 64 32

கீதா மளிகை

# ஆனையிறவு - பூநகரி - பலாலி முகாம்கள் மீதும் புலிகள் தொடர் தாக்குதல்

வடக்கே பலாலி, ஆனை யிறவு, பூநகரி முகாம்கள் மீதும், விடுதலைப் புலிகள் கடந்த வாரம் தொடர்ச்சியான தாக்கு தல்களை நடாத்தி படையி னரை நிலைகுலையச் செய்துள் ளனர்.

மோட்டார் மற்றும் சிறு ரகப் பீரங்கிகள் கொண்டு புலி கள் தாக்குதலை நடாத்தியுள் ளனர். இராணுவத்தின் முன் நிலைக் காவலரண்கள் பல சேதமடைந்துள்ளதுடன் பல இராணுவத்தினரும் காயம டைந்தோ அல்லது இறந்தோ இருக்கலாம் எனவும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் பெரும் தாக்குதலை நடாத்திய விடுத லைப் புலிகள், ஏக காலத்தி லேயே வடக்கின் முகாம்கள் மீதும் இத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். அத்து டன் குறிப்பிட்ட முகாம்களைச சூழ்ந்து பெரும் தொகையான விடுதலைப் புலிகள் நிலை கொண்டிருந்ததாகவும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இத் தாக்கு தல் நடவடிக்கைகளை ஒத்துக் கொண்டுள்ள சிறீலங்கா அரசு தாம் மேற்படி புலிகளின் தாக் குதல்களை முறியடித்து விட்ட தாக கொழும்பில் தெரிவித்துள் ளனர். இதேவேளை கிழக்கே பெரும் தாக்குதல்களை நடாத் திய வேளையில் வடக்கே ஒரு எச்சரிக்கையாகவே புலிகள் வடக்கு முகாம்கள் மீது தாக்கு தல் நடைத்தியிருப்பதாக அவ தானிகள் தெரிவிக்கின்றனர்.

## திருமலையில்
# ரோந்துப் பொலிசார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

நிலாவெளி சாம்பல்தீவுப் பாதையில் நடை பவனியாக ரோந்துச் சேவையில் ஈடுபட்டி ருந்த பொலிசார் மீது விடுத லைப் புலிகள் திடீர் தாக்குதல் நடாத்தியதில் 5 பொலிசார் கொல்லப்பட்டிருப்பதாகவும், 6 பேர் படுகாயமடைந்திருப்பதா கவும், ஒருவரைக் காணவில்லை எனவும் அரசு தெரிவித்துள் ளது.

இச் சம்பவம் கடந்த வெள் ளிக்கிழமை மாலை வேளை யில் நடந்திருப்பதாக தெரிவிக் கப்படுகின்றது. சுமார் 25 பேர் கொண்ட புலிகளின் குழுவே இத் தாக்குதலை நடாத்தியதாக வும், தாக்குதல் இறுதியில் அனைத்து ஆயுதங்களையும் புலிகள் அபகரித்துச் சென்றுள் ளதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தாக்குதல் சம்பவத்திலிருந்து வடகிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா வும் குழுவினரும் மயிரிழையில் உயிர் தப்பியிருப்பதாகவும் பிறி தொரு செய்தி தெரிவிக்கின்றது.

# சுமூகமான சூழ்நிலை படையினருக்கு மகிழ்ச்சியைத் தந்தது
## தாண்டிக்குளத்தில் படையதிகாரி

தாண்டிக்குளம் தடை முகா மில் தீவிர சோதனை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக அங் கிருந்து வரும் செய்திகள் தெரி விக்கின்றன. வவுனியா - மன் னார் பகுதிகள் எதுவித அசம் பாவிதங்களும் நடைபெற வில்லை எனவும் அச்செய்தி கள் கூறுகின்றன.

மீண்டும் சோதனை முடுக்கி விடப்பட்டிருப்பது பற்றி அங் குள்ள உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில் பொதுமக்க ளுக்கு தீங்கு இழைக்காத வகையிலேயே சோதனை நட வடிக்கைகளை மேற்கொள்ள படையினருக்கு பணிக்கப்பட் டிருப்பதாகக் கூறியிருக்கிறார்.

அத்துடன் சில மாதங்க ளாக இங்கு நிலவிய சமூக நிலைமை படையினருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இப்போது மீண்டும் மோதல் நிலைமை உருவாகியிருப்பது எமக்கெல்லாம் கவலையைத் தரும் விடயமாகும். வடபகு திக்கு பொருள்களைக்கொண்டு செல்வதை தடைசெய்யும் சூழ் நிலை எமக்கு ஏற்பட்டிருப்பது உண்மையில் வேதனைதான் எனவும் அந்த உயர் அதிகாரி தாண்டிக்குளத்தில் தெரிவித் துள்ளார்.

# வடமராட்சிக் கடலில் கடற்படை அட்டகாசம்

வடமராட்சியின் கரையோ ரப் பகுதிகள் நோக்கி சிறீ லங்கா கடற்படையினர் பீரங் கித் தாக்குதல்களை நடாத்தி வருவதாக கூறப்படுகின்றது. கரையோரத்தில் மீன்பிடித்துக கொண்டிருந்த மீனவர்கள் மீது படையினர் தொடர்ந்து துப் பாக்கிப் பிரயோகமும் மேற் கொண்டுள்ளனர்.

2 டோராப் படகு உள்ளிட்டு 4 படகுகள் வெற்றிலைக்கே ணிப் பகுதிக் கடலில் வந்த படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். இத் தாக்குதல்களால் மீனவர்க ளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் எதுவும் அறியப்படவில்லை.

இதேவேளை மன்னார் கடற் பரப்பில் படையினர் மீன்பிடி க்க முற்றாகத் தடை விதித் துள்ளனர். கடந்த 19-ம் திகதி தொழிலுக்காகச் சென்றிருந்த மீனவர்களை திடீரெனச் சுற்றி வளைத்த கடற்படையினர், அனைவரையும் உடனடியாக திரும்பிச் செல்லுமாறு பணித் துள்ளனர். அத்துடன் மீனவர் கள் எவரையும் கடற்பகுதிக்கு வரக்கூடாது எனவும் மன்னார் கடற்படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# வாகரைக்கு பொருட்கள் செல்ல இராணுவம் மீண்டும் தடை

மட்டக்களப்பு மாவட்டத் தில உள்ள வாகரைப் பிரதே சத்திற்கு பொதுமக்கள் அன் றாட பாவனைப் பொருட் களை எடுத்துச் செல்வதற்கு இராணுவம் மீண்டும் கட்டுப் பாடு விதித்துள்ளது.

இரண்டு கொத்து அரிசி, 2 தீப்பெட்டி, 1 கிலோ சீனி, 1 போத்தில் மண்ணெண்ணெய் ஆகியவைகளையோ ஒரு குடும் பம் தங்களது பாவனைக்காக எடுத்துச் செல்லலாம் என இராணுவம் அறிவித்துள்ளது. இந்தகைய கட்டுப்பாடானது கடந்த ஜனவரி மாதம் 8-ம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந் தம் ஏற்படுவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்தது. பின் இக்கட்டுப்பாடு தளர்த்தப்பட் டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த வியாழக்கிழமை யன்று மாங்கேணி முகாம் இராணுவத்தினர் அப்பகுதி மக்களை ஒன்றாகக் கூடும்படி அழைப்பு விடுத்தே இவ் அறி விப்பை விடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாபாரிகளும், கடை உரி மையாளர்களும் கூட குறிப் பிட்ட பொருட்களையே எடுத் துச் செல்லமுடியும் என இரா ணுவம் அறிவித்துள்ளது.

# கிழக்கில் அன்னை பூபதி நினைவுநாள் நிகழ்வினை தடுத்தனர் படையினர்

கடந்த 19-ம் திகதி கிழக்கில் பல இடங்களில் நடைபெற இருந்த அன்னை பூபதி நினைவு நாள நிகழ்வுகளையும், ஊர்வ லங்களையும் தடுத்து நிறுத்தி யுள்ளது சிறீலங்கா அரசு.

பல இடங்களில் அமைக்கப் பட்டிருந்த நினைவுநாள் மேடைகளையும் படையினர் அழித்தொழித்துள்ளனர். அத்து டன் களவாஞ்சிக் குடியில் அன்னை பூபதியை நினைவுகூ ரும் முகமாக அமைக்கப்பட் டிருந்த தண்ணீர்ப் பந்தல் ஒன் றையும் படையினர் கலைத்துள் ளனர்.

இதேவேளை வெல்லாவெ ளிப் பகுதிகளில் விசேட அதிர டிப் படையினர் தேடுதல் வேட்டை நடாத்தி பலரை விசாரணை நடத்தியுள்ளனர்.

# கைலாசபதி அரங்கில் விவேகானந்தர் விழா

அண்மையில் யாழ். பல்க லைக்கழக கைலாசபதி அரங் கிலே சுவாமி விவேகானந்தர் விழா மிகவும் சிறப்பாக நடை பெற்றுள்ளது. திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் இவ் விழாவினை ஒழுங்கு செய்திருந் தது.

அமைப்பின் பலிப்பாளர் இராஜ மகேந்திரசிங்கம் யாழ். மருத்துவ பீடாதிபதி வை. பரமேஸ்வரன், கோப்பாய் ஆசி ரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் திருமதி. வி. இராமநாதன் ஆகி யோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார் கள்.

இவ்விழாவில் சுவாமி விவே கானந்தர் நினைவாக நடாத் தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மாணவ மாணவியர் களும் உரை நிகழ்த்தினார்கள். போட்டிகளில் வெற்றியீட்டிய வர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# வவுனியாவிலும் தேடுதல் நடவடிக்கையில் படையினர்

வவுனியாவிலும் இராணு வம் திடீர் தேடுதல் நடவடிக் கையை மேற்கொண்டு வருகின் றது. இப் பகுதியில் உள்ள வீடுகளில் புதிதாக எவராவது வந்து தங்கியிருக்கிறார்களா என்பதை அறிந்துகொள்வதற் காக பொலிஸாரும் இராணு வத்தினரும் இணைந்து கூட் டாக தேடுதல் நடத்தி வருவ தாக அறிவிக்கப்படுகிறது.

சில பகுதிகளில், சுற்றிவளைக் கும் படையினர் வீடுகளிலே உள்ளோரின் அடையாள அட் டைகளை கடுமையாகப் பரி சீலிப்பதாகச் சொல்லப்படு கின்றது.

# திருமலையில் இருந்து கொழும்பு வந்த ரயில் மருதானையில் படையினரால் தடுக்கப்பட்டது

அண்மையில் திருமலையில் இருந்து கொழும்பு வந்த ரயில் மருதானையில் வைத்து சோத னையிடப்பட்டுள்ளது. ரயிலில் பயணம் செய்த அனைவரும் கீழே இறக்கப்பட்டு சோதனை க்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அந்த ரயிலில் பிரயாணம் செய்த பல தமிழ் இளைஞர்களையும் சந்தேகத் தின் பேரில் படையினர் கைது செய்து சென்றுள்ளனர். அவர் கள் விசாரணை செய்த பின் னரே விடுவிக்கப்படுவர் என படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பற்றி இதுவரை எவ்வித விபரங்களும் வெளிவர வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## பிரிட்டிஷ் இராணுவம் வவுனியாவில்

பிரித்தானிய இராணுவ அதிகாரிகள் இருவர் அரசாங்கத் தினால் வவுனியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

அங்கு சூழ்நிலைகளை ஆராய்ந்த அதிகாரிகள் ஈ. என். குமரன், மேஜர் மக்கீன் மரயா ஆகியோர் புலிகள் சமாதானத்துக்கு இடையூ றாக உள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். அரசின் திட்டமிட்ட பிரச்சார நடவடிக்கையாக இதனை அவதானிகள் கருதுகின்றனர்.

துரித - சிறந்த மொழிபெயர்ப்புத் தேவைகளுக்கு
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மாஸ்ரர்
மொழி பெயர்ப்புச் சேவை

Tel: 42 46 37 22

90, Passage Brady, 75010 Paris.
Metro: Strasbourg / Chateau d'Eau

# விடுதலைப் புலிகள் இல்லாமல் சமாதானமா? மீண்டும் தவறான வழியில் ஜனாதிபதி

கொழும்பிலிருந்து
தமிழரசன்

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முறிவைத் தொடர்ந்து உடனடியாக தீவிரமான ஒரு யுத்தம் தமிழ்ப் பகுதிகளில் ஆரம்பமாகிவிட்டது. மூன்றாவது ஈழ யுத்தம் என வர்ணிக்கப்படும் இந்த யுத்தத்தின் திடீர் ஆரம்பமும் அதன் பரவலும் இலங்கை அரசியலில் ஒரு அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசியல் பரிமாணத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆரம்பமாகியுள்ள இந்த யுத்தத்தை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளும் பலமாக மேற்கொள்ளப்படுகின்றன. மூன்றாவது தரப்பினரின் மத்தியஸ்தத்தின் மூலம் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான இந்த முயற்சிகள் உடனடியாக வெற்றியளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவுமே தென்படவில்லை. இப்போதைக்கு யுத்தத்தை விட வேறெதுவும் இல்லை என்ற நிலையே இலங்கையில் காணப்படுகின்றது.

திருமலையில இரண்டு கடற்படைப் படகுகள் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டன. 12 கடற்படையினர் கொல்லப்பட்டனர். மூன்றாவது ஈழ யுத்தத்தின் ஆரம்பத்தை இத்தாக்குதல் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த யுத்தம் எதிர் பார்க்கப்படாத ஒன்றல்ல ஆயுதப்படைகள் நீண்ட காலமாகவே தம்மைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன. விடுதலைப் புலிகளும் இவற்றை எதிர்பார்த்தே இருந்தார்கள். பாதுகாப்புக்கென பெருமளவு நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்தது. யுத்தமொன்றை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளமையை தெளிவாகவே காட்டியது. பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் அனுருத்த ரத்வத்த ராணுவ முகாம்களுக்கு சென்று படையினரை ஊக்கப்படுத்தி வந்தார்.

இதற்கு மறுபுறத்தில் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் உறுதியளிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதில் வேண்டுமென்றே அசமந்தப் போக்கில் அரசாசாங்கம் நடந்துகொண்டது. அரசின் இந்தப் போக்கு விடுதலைப் புலிகளுக்கு மட்டுமன்றி சாதாரண தமிழ் மக்களுக்கும் எரிச்சலையே ஏற்படுத்தியது. தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பொருள்கள் கூட வவுனியாவில் வைத்து இராணுவத்தால் தடுக்கப்பட்டது அல்லது மட்டுப்படுத்தப்பட்டது. மீன்பிடித்தடை பெருமளவு தளர்த்தப்பட்டதாக அரசு அறிவித்தாலும் கூட மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்தது.

இந்தப் பின்னணியிலேயே விடுதலைப் புலிகள் தமது முடிவை அறிவித்தார்கள். இதற்கு முன்னர் மட்டக்களப்பில் ஏனைய தமிழ்க் குழுக்களின் தலைவர்களையும் விடுதலைப் புலிகளின் பிரதேச தளபதிகள் சந்தித்துப் பேசியுள்ளார்கள். மூன்றாவது ஈழ யுத்தத்தில் தம்முடன் இணைந்து செயற்படுமாறும் புலிகள் அந்த அமைப்புக்களைக் கேட்டார்கள். மூன்றாவது ஈழயுத்தம் இறுதி யுத்தமாக இருக்கும் எனவும் இதனால் ஏனைய குழுக்கள் தம்முடன் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினார்கள். இரண்டாம் ஈழ யுத்தத்தின் ஆரம்பத்துடன் பாலகுமார் தலைமையிலான ஈரோஸ் இயக்கம் தம்முடன் இணைந்ததையும் புலிகள் சுட்டிக் காட்டினார்கள். எனினும் தமிழ் குழுக்கள் இக்கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டன. இருந்த போதிலும் தமக்கு எதிராக அநாவசியமாக அறிக்கைகளை வெளியிடாமலாவது இருக்குமாறு புலிகள் அவர்களிடம் கேட்டதாகத் தெரிகின்றது.

இப்போது ஆரம்பமாகியுள்ள இந்த யுத்தம் இறுதி யுத்தமாக அமையுமென புலிகள் கருதுவதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதே வேளையில் யுத்தத்துக்காக அல்லாமல் பேச்சுவார்த்தைகளை சரியான வழிக்குக் கொண்டுவரும் நோக்குடன் கூடப் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனவும் பல விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு அதற்கு இசைவான நடவடிக்கைகளை மேற்கொண்டால் யுத்தம் தொடர்வதை தவிர்க்க முடியுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார். குறிப்பாக பொருளாதாரத் தடைத் தளர்வு, மீன்பிடி அனுமதி போன்றவற்றை நடைமுறைச் சாத்தியமாக்குவதன் மூலம் சமாதான சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்க முடியுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால், அரசாங்கத்தின்

## உதவி செய்யாவிடினும் உபத்திரமாவது செய்யாதிருங்கள்

### தமிழ் குழுக்களிடம் புலிகள் வேண்டுகோள்

இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் கட்ட பேச்சுவார்த்தைகளின் முடிவு சமாதான முயற்சிகள் முறிவடையும் நிலையைத் தெளிவாகவே எடுத்துக் காட்டியது. தம்முடைய கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படாத பட்சத்தில் பேச்சுவார்த்தையில் இருந்தும், தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்தும் விலகும் முடிவை புலிகள் அப்போது வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். 19ம் திகதி இதற்கான காலக்கெடுவாகவும் புலிகளால் அறிவிக்கப்பட்டிருந்தது.

நிலைமையின் தீவிரத்தை அரசாங்கமும் தெளிவாக உணர்ந்தே இருந்தது. பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கம் இரண்டு நாள்களாக மௌனம் சாதித்த அதேவேளையில், இது பற்றி உயர் மட்டத்தில் ஆராயப்பட்டது இறுதியில் பொருளாதாரத் தடையிலும் மீன்பிடித் தடையிலும் சில தளர்வுகளை செய்வதாக பிரபாகரனுக்கு ஜனாதிபதி அறிவித்தார்

எனினும் நடைமுறையில் எதுவுமே செய்யப்படவில்லை. இந் நிலையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகும் தமது முடிவை பிரபாகரன் ஜனாதிபதிக்கு அறிவித்தார். இதனைத் தொடர்ந்து நடவடிக்கைகள் அனைத்தும் இதற்கு முற்றிலும் முரண்பட்டதாகவே அமைந்துள்ளது. நான்கு முக்கிய தீர்மானங்களையிட்டு அரசாங்கம் தனது நிலையை யுத்தம் ஆரம்பமானவுடனேயே அறிவித்தது. புலிகளுக்கு எதிராக வரையறுக்கப்பட்ட இராணுவத் தாக்குதலை மேற்கொள்வது, வடக்குக் கிழக்கில் மீன்பிடியை முற்றாகத் தடைசெய்வது, 19 பொருள்களுக்கான தடையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருவது, கிளாலியூடான போக்குவரத்தை தடைசெய்வது ஆகியனவே அரசின் நான்கு நடவடிக்கைகளாகும். அரசின் இந்த நடவடிக்கைகள் மீண்டும் பழைய பாதையில் செல்வதற்கு அரசு முற்பட்டுள்ள நிலைமையையே சுட்டிக் காட்டுவதாகவுள்ளது.

மூன்றரைமாத கால அமைதியின் பின்னர் இன்று ஏற்பட்டுள்ள யுத்தத்துக்கு இப்போதைக்கு முடிவு இல்லையென்பதையும் அரசின் இந் நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டியுள்ளன.

அத்துடன் மற்றுமொரு விடயத்தையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. புதன்கிழமை அதிகாலை கடற்படையினர் மீது திருமலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருந்து சனிக்கிழமை மட்டக்களப்பில் இராணுவமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வரையிலான மூன்று தாக்குதல் சம்பவங்களும் கிழக்கு மாகாணத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தை நோக்கி தமது யுத்த கள



-த்தை புலிகள் நகர்த்தியுள்ளமையையே இது காட்டுகிறது.

வடபகுதியைப் பொறுத்த வரையில் அங்கு ஒரு சில இராணுவ முகாம்கள் உள்ளபோதிலும் அது முழுமையான விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனால் கிழக்கு மாகாணத்தில் தமது கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் நோக்கத்துடனேயே இத்தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டுள்ளார்கள். மூன்றாவது ஈழப் போரில் கிழக்கு மாகாணமே பிரதான யுத்த களமாக இருக்குமென இராணுவ வல்லுனர்கள் கருதுகிறார்கள். இதன் ஆரம்பமாகவே கடந்த நான்கு நாட்களாக அங்கு நடைபெறும் யுத்தம் உள்ளது.

வடபகுதியைப் பொறுத்தவரையில் கடற்படையினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையிட்டே புலிகள் அதிகளவில் கவனம் செலுத்துவார்கள் எனவும் பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில் தரை வழியில் பாதுகாப்புப் படையினரின் நடமாட்டம் வடக்கில் ஏற்கனவே கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் காரணமாக ஆயுதப் படையினரைப் பொறுத்த வரையில் வடக்கில் குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதை விட அவர்களால் வேறு எதையும் செய்ய முடியாத நிலையே உள்ளது. கடந்த நான்கு ஐந்து நாட்களாக இடம் பெற்ற இவ்வாறான தாக்குதலால் யாழ்ப்பாணத்தில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

பெருமளவிலான எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஆரம்பமான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து மீண்டும் யுத்தம் ஆரம்பமாகியுள்ளது. மக்களுக்குப் பெருமளவு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது.

இந் நிலையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள தனது அக்கறையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டிருக்கின்றார். இதற்கான சகல முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் எனவும் மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சம்மதத்துடனேயோ அல்லது அவர்களின் சம்மதமின்றியோ சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அவர் அங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்விடத்தில் ஜனாதிபதி மீண்டும் தவறான ஒரு பாதையில் செல்ல முற்பட்டுள்ளமையை காணக் கூடியதாகவுள்ளது. இலங்கையின் இனப் பிரச்சனையைப் பொறுத்த வரையில் விடுதலைப் புலிகள் ஒரு பிரதான பலம் வாய்ந்த சக்தியாக உருவாகியுள்ளனர். அவர்களைச் சம்பந்தப்படுத்தாத எந்த ஒரு தீர்வு முயற்சியும் வெற்றி பெறப்போவதில்லை. புலிகளைத் தனிமைப் படுத்திவிட்டு மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் அனைத்தும் அர்த்தமற்றவையாகவே போய்விட்டன என்பதையே கடந்த காலச் சரித்திரம் கூறுகின்றது. இதனையே இன்றும் சந்திரிகா செயற்படுத்த முனைந்திருப்பது சமாதானத்தை அவரால் உண்மையாகவே கொண்டு வர முடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முற்பட்டபோது எதிரணியின் பலத்தைப் புரிந்து கொண்டு அதற்கிசைவான நடவடிக்கைகளே மேற்கொள்ள வேண்டும். ஆனால் அரசாங்கம் தமிழர்களுக்குத் தாம் ஏதோ பெரிதாகச் செய்யயவுள்ளது போலவும், புலிகள்தான் அதற்குத் தடையாகவுள்ளது போலவும் பாரிய பிரச்சார மொன்றை ஆரம்பித்துள்ளது. கடந்தகால அரசுகள் மட்டுமன்றி, இந்தியா கூட இதே தந்திரோபாயத்தை கையாண்டு தோல்வியடைந்தது.

## வாகன சேவை

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

மங்கள வைபவங்கள், நெடுந்தூர சுற்றுலாக்கள், பொருட்களை இடம் மாற்றுதல் மற்றும் அனைத்துத் தேவைகட்கும்

பாரிசில் 24 மணிநேர மக்கள் சேவை



தொடர்புகளுக்கு:
Tel: 42 09 21 43
48 95 01 77

# மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து விலகியது ஏன் ?

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து தாம் ஏன் விலகவேண்டி வந்தது என விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் கடந்த 23.04.95 அன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்ட இவ் அறிக்கை பி.பி.சி மற்றும் செய்தி ஸ்தாபனங்களால் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

## புலிகள் அறிக்கை

அவ் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இருந்து தாம் விலகிக் கொண்டதையிட்டுச் சர்வதேச சமூகம் கவலை தெரிவித்ததை நாம் உணராமலில்லை. அதே வேளை, இச் சமாதானப் பேச்சுவார்த்தை அனுகூலமாக அமைய வேண்டுமென்பதில் மற்றெல்லோரையும் விட, தமிழ் மக்களாகிய நாங்களே மிகவும் அதிக அக்கறை உடையவர்களாக இருந்தோம்.

தமிழ் மக்களும் தமது நாட்டுப் பிரசைகள் எனக் கூறும் இலங்கை அரசாங்கம் அதே நேரத்தில் முன்னைய அரசின் பொருளாதாரத் தடையை தளர்த்தினாலும் இது சம்பந்தமாக கொடுத்த வாக்குறுதிகளை பூரணமாக நிறைவேற்றவில்லை.

அதே நேரம் வாழ்வின் அடிப்படைத் தேவையான உணவுப் பொருட்கள், மருந்துகள், போன்றவற்றை ஆகக் குறைந்த அளவில் தந்துவிட்டு, ஏதோ தமிழ் மக்களுக்குத் தாம் பெரிய சலுகைகளைத் செய்துவிட்டதாக சொல்லுகின்றது. இவை அடிப்படை மனித உரிமைகளே தவிர சலுகைக்குரியவை அல்ல.

இவற்றைவிட சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா, பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில், இச் சலுகைகளை இதை விட கூடுதலான அளவுக்குச் செய்வது நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகமானது எனவும் கூறியிருப்பது, சலுகைகளைக் கூட சிறிலங்கா அரசினர் இராணுவ கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர் என்பதைப் புலப்படுத்துகின்றது.

முன்னைய அரசுகள் யாழ்குடாநாட்டை சுற்றிவர இராணுவ முற்றுகைகளை ஏற்படுத்தி வைத்திருந்தன. சந்திரிகா அரசும் தொடர்ந்தும் அவற்றையே செய்து வருகின்றது.

பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்தை கவனத்தில் கொண்டு, பூநகரி முகாமை மட்டும் அகற்றும்படி எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அரசு நிராகரித்து வருகின்றது.

தரையில் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் அரசு, மீன்பிடித்தடை மூலமாக கடற் பிராந்தியத்திலும் மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி வருகின்றது.

எந்த நாட்டு மக்களும் தங்கள் நாட்டுக்குள் சுதந்திரமாக நடமாட உரிமை உண்டு என ஐ. நா. வின் சாசனங்களில் ஒன்று கூறுகின்றது. ஆனால், தரையில் மட்டுமல்ல, கடலிலும் சுதந்திரமாக நடமாடுவதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மிகப்பெரிய மனித உரிமை மீறலை அரசு நிகழ்த்தி வருகின்றது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து யாராவது ஒரு தரப்பினர் விலகிக் கொள்வதானால் 72 மணித்தியாலங்களுக்கு முன், முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். அதை புலிகள் மீறிவிட்டார்கள் என்ற குற்றச் சாட்டைக் குறிப்பிடுகையில்;

மார்ச் 16ம் திகதியே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 14 யுத்தக் கைதிகளை விடுவித்த நேரத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் மார்ச் 28 ற்கு முன்பாக, தீர்க்கப்படாத விடயங்களுக்கு தீர்வுகாணப்படாது விட்டால் தாங்கள் சமாதானப் பேச்சு வார்த்தையிலும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்தும் விலக வேண்டிய நிர்ப்பந்தம் வரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



இதுபற்றிய ஒரு அசட்டைப் போக்கைக் கடைப்பிடித்த ஜனாதிபதி, எரிபொருள் அனுமதிக்கும் விடயத்திலும், கடல் வலைத் தளர்வு விடயத்திலும் மறுபரிசீலனை செய்வதாக குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, புலிகள் முதலில் விடுத்த காலக்கெடுவை ஏப்ரல் 19 வரை பின் தள்ளினர். ஆகவே, மோதல் தவிர்ப்பில் இருந்து விலகுவதான முன் அறிவுப்பு கொடுக்க வேண்டிய கால இடைவெளியை, புலிகள் மீறிவிட்டார்கள் எனும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள முடியாது.

இதுவரை நடந்த சமாதான பேச்சுவார்த்தைகளில் இருந்து நாம் விலகுவதாக, கவலைக்குரிய முடிவை எடுத்திருந்தாலும், நாங்கள் சமாதானக் கதவுகளை நிரந்தரமாக மூடிவிட்டதாக கருதத் தேவையில்லை. சிறிலங்கா அரசாங்கம் ஒரு இராணுவத் தீர்வு மூலமே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற எண்ணத்தைக் கைவிடும் வரை, எமது மக்களின் பாதுகாப்பின்மீது நாம் அக்கறை உள்ளவர்களாகவே இருக்க முடியும்.

நிலையான சமாதானம் தோன்ற வேண்டுமானால் அரசின் புதிய அணுகு முறையிலேயே அது தங்கியுள்ளது.

எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு - புலிகள்

# ஏப்ரல் மாதத்தில் என்ன நடந்தது ?

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அண்மைக் காலமாக தொடர்ந்து பலவிதமான இழுபறிகளுடாக பேச்சுவார்த்தை தகர்ந்து வந்தாலும் கடந்த மார்ச் மாத இறுதிப் பகுதி தொடக்கம் பேச்சுவார்த்தை முன்னோக்கி நகர்வதற்கான வழிகள் ஒவ்வொன்றாக அடைபட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் அது பூரணமானதொரு தேக்க நிலையை அடைந்தது. குறிப்பாக,

• மார்ச் 28க்கு முன் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டுமென புலிகளால் அரசாங்கத்துக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சந்திரிகா, இந்தக் காலவரையறை பற்றி கருத்து எதுவும் தெரிவிக்காமல், இன்னும் சில பொருட்களுக்கான தடையை அகற்ற யோசிப்பதாகவும், மீன்பிடித் தடையைத் தளர்த்துவது சம்பந்தமாக பரிசீலனை செய்வதாகவும் கூறியதைத் தொடர்ந்து புலிகள் தமது காலவரையறையான மார்ச் 28 ஐ ஏப்பிரல 19 ஆக அறிவித்தனர்.

• மார்ச் 31 இல் இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய சந்திரிகா, 'அரசுக்கு யாரும் காலக்கெடு விதிக்க முடியாதெனவும், புலிகளுக்கு அந்த உரிமை இல்லை' எனவும் கொழும்பில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கூறினார். மேலும் ஏப்பிரல் 1ம் திகதி பேச்சுவார்த்தைக்கு வரும்படி புலிகள் விடுத்த அழைப்பை, போதிய நேரம் இல்லாத காரணத்தால் ஏற்க முடியாது எனவும் அங்கு கூறினார்.

அத்துடன் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு தீர்வு காண்பதென்பது உடனடியாகச் சாத்தியமில்லை எனவும் கூறியிருந்தார். (ஆட்சிக்கு வந்தவுடன் பிரேமதாசாவின் அரசைப் போல் 14 மாதங்கள் என பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தை வீணடிக்க மாட்டேன். உடனடியாக ஒரு தீர்வை கொண்டு வருவேன் எனக் கூறியிருந்ததும் கவனிக்கத் தக்கது)

• 29 மார்ச் விடுதலைப் புலிகளின் மண்டூர் பொறுப்பாளர் தம்பிராசா. நவநீதன் (லெப். சிறிவிராசவ) மண்டூரில் இருந்து களுவாஞ்சிக்குடி நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பொலிசாரின் சோதனைச் சாவடி ஒன்றினுள் தாக்கப்பட்டு, சைனைட் அருந்தி வீரமரணம் அடைந்தார்.

இது மோதல் தவிர்ப்பு ஒப்பந்த காலத்தில் அரசதரப்பு நடத்திய மிகப்பெரிய ஒப்பந்த மீறல் என புலிகள் அரசுக்குக் கண்டனம் தெரிவித்திருந்தும் அரசு இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

• ஏப்ரல்10ம் திகதி

மட்டக்களப்பில் அன்னை பூபதி நினைவுநாள் நிகழ்ச்சியின்போது 3000 ற்கு மேலான மக்கள் ஒன்று கூடி சமாதானத்தை நோக்கி நடாத்திய ஊர்வலத்தை பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும், ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் குழப்பினர்.

கிழக்கில் புதிய இராணுவ முகாம்களும் பொலிஸ் முகாம்களும் அமைக்கப்பட்டது.

திருகோணமலையில் ஈச்சிலம்பத்தை இராணுவமுகாமில் புதிய துருப்புக்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டது.

திருகோணமலை தோப்பூர் மகாவித்தியாலய கட்டிடத்தில் பொலிசார் அத்துமீறி உட்புகுந்து பாடசாலையை பொலிஸ் முகாமாக மாற்றியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக, சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கைகளையும் சந்தேகம் என்ற பெயரில் கைதுகளும் நடைமுறைப் படுத்தப்பட்டன. இது ஒரு போர்ச் சூழலை ஒத்திருந்தது.

• மே 10 ம் திகதி

யாழ்ப்பாணத்தில் நாலாம் கட்டப் பேச்சு வார்த்தை எந்த விதமான பலனும் இன்றி முறிவடைந்ததைத் தொடர்ந்து புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் இருந்து விலகிக் கொள்வதைத் தவிர தமக்கு வேறு வழி ஏதும் தென்படவில்லை என, அரசதரப்பு தூதுக்குழுவின் தலைவர் திரு.பாலபட்ட பெந்தியிடம் தெரிவித்தார்.

• மே 12ம் திகதி

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத்தில் பூநகரி முகாம் தொடர்பாகவும், கிழக்கில் புலிகள் ஆயுதத்துடன் கூடிய நடமாட்டம் பற்றியும் உடனடியாக அல்லாமல் காலம்தாழ்த்தியே யோசிக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஏப்பிரல் 19 என்ற புலிகளின் காலக்கெடுவை பெரியதொரு விடயமாக அரசு முக்கியப் படுத்தவில்லை.

• மே 18 ம் திகதி

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்தும், பேச்சுவார்த்தையில் இருந்தும் இருந்தும் தாம் விலகிக் கொள்வதாக சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதமூலம் தெரிவித்தார்.

# சமாதானச் சூழலில் எம்மை பலவீனப்படுத்த நினைத்தது அரசு

கடந்த 19.04.95 அன்று வடமராட்சியில் நடைபெற்ற அன்னை பூபதியின் 7வது நினைவு தினப் பொதுக் கூட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகள்:-

முதலாம் கட்டப் பேச்சு வார்த்தையில் நாம் என்ன அடிப்படையில் கலந்து கொள்வது? என்ன விடயங்களை முன்வைத்துக் கதைப்பதென சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது, அரசு எமக்கு ஒரு நிகழ்ச்சி நிரலை அனுப்பிவைத்தது. அந்த நிகழ்ச்சி நிரலில், அன்றாடப் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை முதலில் பேசுவோம் என்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது.

## முதலாம் கட்டப் பேச்சு

பொருளாதாரத் தடை நீக்கம், யுத்த நிறுத்தம், கடல்வலயத் தடை நீக்கம், மீளக் குடியமர்வு, புனரமைப்பு அதன் தொடர்ச்சியான அத்தியாவசியப் பிரச்சனைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அதனை நாம் வரவேற்று முதலாம் கட்டமாக அன்றாடப் பிரச்சனைகளுக்கான தீர்வு; இரண்டாம் கட்டமாக அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு; என்ற வகையில் பேச்சுக்களில் கலந்து கொள்வதென்ற முடிவை எடுத்தோம். அந்த அடிப்படையில், முதலாம் கட்டப் பேச்சும் நடந்தது. ஆனால் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்கான முழுமையான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை.

## இரண்டாம் கட்டப் பேச்சு

இரண்டாம் கட்டப் பேச்சில், தாக்குதல் நிறுத்த உடன்பாடு காணப்பட்டது. அதற்கு அடுத்த கட்டமாக, கடல் வலயத் தடை நீக்கும் திட்டம் என்ற முடிவிற்கு இரண்டு தரப்பினரும் ஒப்பு. அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், அடுத்தநாள் அவர்களது வெகுஜன தொடர்பு சாதனங்களிலும், பத்திரிகைகளிலும், கடலில் இரவில் மீன்பிடிக்க முடியாது என்றும், குறிப்பாக நாலு கிலோ மீற்றர் தூரம் மட்டுமே மீன்பிடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. முதலில் ஒப்புக் கொண்டு கைச்சாத்திடப்பட்ட விடயம் அடுத்த நாளே அவர்களால் மீறப்பட்டது.

## புனரமைப்பு

முதற்கட்ட பேச்சு வார்த்தையின் போது வடகிழக்கு புனரமைப்பு என்று நாம் வரைந்த திட்டத்தில், வடகிழக்கு புனரமைப்பு செய்யப்பட்டால், எமது மக்களின் பொருளாதாரச் சுமை இறங்கும் என்றும் நாம் குறிப்பிட்டோம். அவர்கள் நாலாயிரம் கோடி ரூபாய்க்கான திட்டம் ஒன்றை முன்வைத்தனர் ஆனால், பல மடங்கு கோடியான அழிவுகள் இங்கு ஏற்பட்டுள்ளன. எனவே இதில் மாற்றம் வேண்டும் என்ற அடிப்படையில் முப்பத்தி ஓராயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் திட்டம் ஒன்றை வரைந்து அவர்களிடம் கொடுத்தோம். முதலாம் கட்டப் பேச்சு வார்த்தையில், வடகிழக்கு புனரமைப்பு என்றார்கள்; இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தையில் கிழக்கு அல்ல, வடக்கு மட்டுமே புனரமைப்பு என்றார்கள். பின்பு வடக்கு அல்ல யாழ் மாவட்டம்தான் என்றார்கள்.

## அரசின் கடிதம்

நாலாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு வர முன்பே, அரசு கடிதம் ஒன்றை எமக்கு அனுப்பிவைத்தது. யாழ் மாவட்டத்தைவிட யாழ் மாநகரப் பகுதி மட்டுமே புனரமைக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஏன் அவர்கள் விரைவாக அக் கடிதத்தை அனுப்பினார்கள்? ஏன் மாநகரசபைப் பகுதியை மட்டும் புனரமைப்பது என்ற முடிவுக்கு வந்தார்கள்?

அரசு ஆணித்தரமாக மனந்திறந்து செயற்பட்டிருக்குமேயானால், எமக்கும் எமது மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என விரும்பினால், அரசு ஏன் அப்படி நடந்து கொள்கிறது?.



காலக்கெடு பற்றிச சிந்திக்க வேண்டும்!

அந்தக் கட்டத்தில்தான் நாம் ஒரு காலக் கெடுவை விதித்தோம். இது ஏன்?

## இழுத்தடிப்பு

அரசு நாலாம் கட்டப் பேச்சுக்கான திகதியை தெரிவிக்காமல் இழுத்தடித்தது. இதனுடைய பின்னணியும் மர்மமும் என்ன? ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் சார்க் மாநாடு; அதற்கு முன் நடைபெற உள்ள இலங்கைக்கு நிதி வழங்கும் நிதி நிறுவனங்களுக்கான மகாநாடு ஆகியவை அவை. இக் கூட்டங்களில் இலங்கை ஜனாதிபதியோ, அல்லது அவரின் அமைச்சர்களோ கலந்து கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் கலந்து கொள்ளும் போது இங்கு அமைதி நிலவுகின்றது; அதன் அடிப்படையில் எமக்கும், புலிகளுக்கும் இடையில் உடன்பாடு இருக்கின்றது; புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன; இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் இவை எனக்கூறி, அபிவிருத்தியைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது என மாநாட்டில் கோரமுடியும்.

**- இளம்பரிதி -**

இவ்வகையான கோரிக்கைகளை விடுத்து பெருந்தொகை பணத்தை பெற்று, திறைசேரியை நிறைத்துத் தம்மைப் பலப்படுத்துவதுதான அரசின் திட்டம். உண்மை அடிப்படையில், எமக்கு சரியான நம்பிக்கையை தராத பட்சத்தில் நாம் எமது ஆதரவை அரசிற்கு நல்கினால், அரசு அதனை பயன்படுத்தி தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும்.

## காலக்கெடு

பொருளாதார வீழ்ச்சிக்குள் இடக்கும் அரசு, அதிலிருந்து தன்னை மீள்வித்துக் கொண்டு பலமான நிலையில் எங்கள் மீது ஒரு போரைத் திணிக்கும் அப்படியான நிலையில் எமது மக்களுக்கும் சொத்துகளுக்கும், சுதந்திரப் போராட்டத்திற்கும் உத்தரவாதம் இல்லாத நிலை பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதனால்தான் நாங்கள் காலக்கெடுவை முன்வைத்தோம்.

எமது மக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடாது; சொத்துக்களை இழக்கக்கூடாது; எமது சுதந்திரம் பின்தள்ளப்படக் கூடாது. இதன் அடிப்படையிலேயே அரசுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டது.

சர்வதேச ரீதியில் அரசுக்கு ஓர் அழுத்தத்தை ஏற்படுத்தவும், எமது போராட்டத்திற்கான நியாய பூர்வமான கோரிக்கைகளை முன் வைப்பதும் எமது அடுத்த கட்டம், போரை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யவில்லை. நாம் யுத்தப் பிரியர்கள் அல்ல. ஆனால் நாம் மக்களை பெரும் அழிவினில் கொண்டு போய் விடக்கூடாது. இதில் நாம் மிகவும் கவனமாக இருக்கிறோம்.

முதலாவது காலக்கெடு மார்ச் 28ல் முடிவடையும் நிலையில், மார்ச் 24ம் திகதி அரசு ஒரு பதிலை அனுப்பியது. எரிபொருள், பொருளாதாரத்தடை, கடல்வலயத் தடைகளை நீக்குவதாக கூறியது.

## இரண்டாவது காலக்கெடு

எமது தலைவர் ஏமாறுபவர் அல்ல. இழுத்தடித்துக் கொண்டுபோய் எம்மை நலிவடைய முயல்வது எங்களுக்கு நன்கு தெரியும். இதனால் இரண்டாவது காலக்கெடுவை விதித்தோம். ஏப்ரல் 19ம் திகதி வரை அரசுக்கு இரண்டாவது காலக்கெடு சம்மந்தமான கால அவகாசத்தை வழங்கினோம்.

மார்ச் 24ம் திகதி தடைநீக்க அறிவிப்பை விடுத்த அரசு, ஏப்ரல் மாதம்கூட அதை அமுல்படுத்தவில்லை. தடை நீக்கம் பற்றிய அறிவிப்பு உத்தியோக பூர்வமாக அரசினால் அறிவிக்கப்படவில்லை. வர்த்தமானியிலோ, அரசின் உத்தியோக பூர்வ சாதனங்களிலோ இதுபற்றிய அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதற்கான பணிப்புகள் இடப்படவில்லை.

அதே சமயம் சர்வதேச ரீதியில் திட்டமிடப்பட்ட முறையில் அரசு, பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றது. தென் தமிழீழ மக்கள் யுத்த காலத்தைவிட இச் சமாதான காலத்தில் மிகவும் கொடுமைப் படுத்தப் படுகின்றார்கள். அதே சமயத்தில், குடாநாட்டில் இராணுவ நிலைகளும் அகற்றப்படவில்லை.

## மூன்றாம் கட்ட ஈழப்போர்

இன்று, சமாதானம் நின்று மூன்றாம் கட்டப் போர் பிறந்திருக்கின்ற ஒரு நாள். சமாதான சூழ்நிலை முழுமையாக குலைந்து விட்டது. ஏனெனில், பலவீனமாக இருந்த அரசு தற்போது தன்னைப் பலப்படுத்தி விட்டது. பலமான நிலையிலிருந்த எங்களை, இந்தச் சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி பலவீனமாக்க நினைக்கின்றது. எம்மையும், எமது மக்களையும் பலவீனப்படுத்தி அழிவைச் சந்திக்க வைப்பதே அரசின் நோக்கம். இதை நாம் அனுமதிக்க முடியாது.

என்று திரு. இளம்பரிதி குறிப்பிட்டார்.

22 கரட் நகைத் தேவைகளை நம்பிக்கையுடன் பூர்த்தி செய்திட
நங்கையரே, ஆடவரே விஜயம் செய்யுங்கள்

கோல்டன் ஸ்டார்
GOLDEN STAR

திருமண வைபவங்களுக்குரிய பட்டுச் சேலைகள், பட்டு வேஷ்டி, தலைச்சோடனை மற்றும் அன்பளிப்புப் பொருட்களும், நகைகள், நவீன உடைகள், கைக்கடிகாரங்கள், அழகுசாதனப் பொருட்கள், எவர்சில்வர், பித்தளைப் பொருட்கள், ஒடியோ கசட்டுகள், C.D டிஸ்குகள், புதிய டிசைன் சாறிகள் அனைத்திற்கும்



GOLDEN STAR
199, rue du Fg. St. Denis,
75010 Paris.
Tel: 42 09 26 50 / 46 07 26 44 Fax: 40 05 94 87
Metro: La Chapelle ou Gare du Nord
தங்கள் Fax சேவைக்கு எம்மை நாடவும்

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

மார்ச் 28ம் திகதி காலக்கெடு குடுத்து, பிறகு ஒரு சின்னச் சந்தர்ப்பம் கொடுக்கிறமாதிரி ஏப்பிரல் 19ம் திகதிவரை தலைவர் காலத்தைப் பிற்போட்டார்; ஆனால் விசயம் நடக்கேல்ல.

அரசாங்கம் மிக. மிகிமிகப் பொறுப போட நடந்து காலத்தை இழுத்தடிச்சுது. கடைசியா வந்து சொலவிச்சினம் எல்லாரும் லீவுக்குப் போட்டினம் வந்த பிறகுதான் செய்யலாம் எண்டு. பத்தொன்பதாம் திகதியோட பேச்சுவார்த்தை முறியும்போல கிடக்கு. சண்டை துவங்

## “சிரிச்சுக் கொண்டு கழுத்தை நெரிக்கினம்; பிறகென்னண்டு கைய நீட்டுறது..?”

கும்போல கிடக்கு எண்டு எல்லாரும் யோசிச்சுக் கொண்டிருக்க, அம்மையாற்ற ஆக்கள், வெரி சிம்பிளா லீவுக் கதைகள் சொல்லிகினம்... உது ஒரு கதையே..? காலத்தக் கடத்த இப்படி சத்தில்லாத சங்கதிகளை அரசாங்கம் சொல்லும்; நாங்கள் அதக் கேக்வேணும்..?

கால இடைவெளி காணாதாம், இடைக்கு முடக்காய் தான் குடுத்திருக்கினம். எண்டு ‘அரசாங்கம் சொலலிப்போட்டு ஒண்டும் செய்யேலாது எண்டு கையவிரிச்சுது. அப்பிடியோ... அப்பிடியெண்டால் இது எங்களுக்குச் சரிப்பட்டு வராது எண்டுபோட்டு எங்கட தலைவர் பேச்சுவார்த்தையில இருந்து விலகிக் கொள்ளிறதா அறிவிச்சுப் போட்டார். சூட்டோட சூடாய் பத்தொன்பதாம் திகதியே திருகோணமலையில இரண்டு கப்பல் சரியாப் போச்சு. இருவத்தியோராம் திகதி ஒரு இராணுவ முகாம் கந்தலாய்ப் போச்சுது..

முதலடியோட அரசாங்கம் அரக்கப் பரக்க முளிச்சு, புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு லீவில போன படையினரின்ர லீவுகளை "கான்சல்" பண்ணிப் போட்டு, உடன வாங்கோ சண்டைக்கு எண்டு அறிவிச்சிருக்குது. எப்பிடி கதை?

என்னண்டு சொன்னால் சமாதானம் ஏற்பட உந்த புதவருட லீவு தடங்கலாய் இருந்திருக்கு அரசாங்கத்துக்கு. ஆனால் சண்டை துவங்கிறதுக்கு உந்த லீவு பிரச்சினையாய் இல்லை. இப்ப சொல்லுங்கோ.. அரசாங்கம் சமாதானத்தில எவ்வளவு நாட்டமாய் இருந்திருக்கெண்டு.

விடுதலைப புலியளோட பேசுறதுக்கு முன்னம் பொடியளைப் பற்றியும், எங்கட தலைவரைப் பற்றியும் கொஞ்சமெண்டாலும் அம்மையார் அறிஞ்சிருக்க வேணும். சொல்லுக்கும் செயலுக்கும்

புலிகள் இடைவெளி விடுகிறதில்லை. முந்திய தமிழ்த் தலைவர்கள் மாதிரி தமிழ்மூத் தலைவர் பிரபாகரன் இல்லை எண்டுறத அம்மையார் சற்றேனும் உணர்த்திருக்க வேணும். அதவிட்டிட்டு-

> சந்திரிகா எண்டால் சமாதானம்; சமாதானம் எண்டால் சந்திரிகா எண்ட தோற்றம் தருகிற மாதிரி கற்பனையளில பிரம்மாண்டமான “கட்அவுட்”டை எழுப்பி விட்டிருக்கிறா அம்மையார். அதுக்குப் பின்னால ஒளிச்சிருந்து கொண்டு இராணுவத்திட்ட பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறா.

இருவத்தெட்டில இருந்து பத்தொன்பதுக்கு அரக்கியிருக்கிறார் பிரபாகரன், அப்பிடியே திகதியளைப் பின்னுக்குப் போட்டுக் கொண்டு வந்து கடைசியில தனக்குப் பின்னால வந்திடுவார் எண்டு யோசிச்சிருப்பாபோல..

அது இருக்கட்டும்.. இந்த கால இடைவெளியை சட்டென்று போட்டு சடக்கெண்டு சண்டையைத் துவக்கின கதையாய்த்தான் சிறிலங்கா பிரச்சாரப் படுத்துது. தொன்னூற்றி நாலாம் ஆண்டு பத்தாம் மாதம் பேச்சுவார்த்தை

### சடையர்

தொடங்கேக்கையே மக்களின்ர அன்றாடப் பிரச்சினைகள் முதல் தீர்க்கப்பட வேணும்; போர் நிறுத்தம்.. பாதை திறப்பு.. எல்லாத்தையும் புலியள் விலாவாரியாக விளங்கப்படுத்திப்போட்டினம். அப்ப அரசாங்கம் சொல்லிச்சுது.. தங்களுக்கு முழு அதிகாரமும் வந்தால் எல்லாவற்றையும் நிறைவேற்றுவம் எண்டு; புலியளுக்கும் வாக்குக் குடுத்துது. அப்ப விஜயதுங்காதானே சனாதிபதி. அவர் பேரினவாதியான ஆள்த்தானே, அம்மையார் வந்தால் ஆறுதல் தருவார் எண்டு சனங்களும் நினைச்சுதுகள், சரி.. அது இருக்க.. பதினோராம் மாதம் அம்மையார் சனாதிபதியாய் வந்திட்டா. அப்ப நல்லது நடக்க வேணாமோ.., புலியளும் அடுத்த நாளே ஒரு வாரகால ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவிச்சினம். புலியள் பச்சைக்கொடி காட்டினா... சமாதானத்தில அக்கறையுள்ள சந்திரிகா அரசாங்கம் பச்சைக்கொடி காட்டும் எண்டு நீங்கள் மோட்டுத்தனமா யோசிப்பியள் எண்டால்... [illegible] பிளக்க இறுக்கிக் குட்ட வேணும். அது மாதிரி நடக்கேல்ல.. சந்திரிகா சனாதிபதியாக வந்து அஞ்சாம் நாளே லெப்டினன் கேணல் மல்லியின்ர கழுத்தை அறுத்துத் துண்டாக்கி சிகப்புக் கொடி காட்டிச்சினம்.

எப்பிடியோ.. சகடை யோகம் கணக்கா ஏறி இறங்கி.. இரண்டாம் கட்டம், மூண்டாம் கட்டம், எண்டு இழுபட்டுக் கடைசியில நாலாம் கட்டத்தில நாறிப் போச்சுது.

புலியளும் சிறிலங்கா அரசின்ர போக்குக் குறித்து நீண்ட காலமாகவே - அதிருப்தி தெரிவிச்சு வந்திருக்கினம். சொன்னதுகளைச் செய்யுங்கோ, சனங்களின்ர பிரச்சினையளைத் தீருங்கோ எண்டு சொல்லிச் சொல்லி வந்திருக்கினம்... ஆனால அரசாங்கம கேட்டாலதானே.. ஒரு தலையாட்டல், ஒரு சிரிப்போட காலத்தைத் தள்ள நினைக்குது. போன மாவீரர் நாள் செய்தியிலயே அரசாங்கத்தின்ர இராணுவ நாட்டம் குறித்துத் தலைவா சொல்லியிருக்கிறார். மூன்று சுத்துப் பேசியும் அரசாங்கம் உருப்படியா ஒண்டையும் செய்யேல்ல; அரசாங்கம் வாக்குறுதிகளை அளித்துக் கொண்டிருக்குதல்லாது ஒண்டையும் நிறைவேற்றிறதாத் தெரியேல்ல இப்பிடி, முதலாம் மாதம் தளபதி கிட்டுவின்ர நினைவு நாளில பேசேக்க பாலசிங்கத்தார் சொல்லியிருக்கிறார்.

### ஓர் அலசல்

இப்ப சொல்லுங்கோ.. புலியள் கனநாள் குடுத்திருக்கினம்.. ஆறு மாதங்கள் குடுத்திருக்கினம்..; அதிகாரம் கிடைச்சதும் செய்வம் எண்டவைக்கு.. அதிகாரம் கிடைச்சு அஞ்சு மாசம் வரையும் புலியள் காலம் குடுத்திருக்கினம். இவை என்னண்டா... புதுவருட லீவுக்குப் போட்டினம்.. அது இது எண்டுறது- புலுடாதானே.

சந்திரிகா எண்டால் சமாதானம்; சமாதானம் எண்டால் சந்திரிகா எண்ட தோற்றம் தருகிற மாதிரி கற்பனையளில பிரம்மாண்டமான "கட்அவுட்"டை எழுப்பி விட்டிருக்கிறா அம்மையார். அதுக்குப் பின்னால ஒளிச்சிருந்து கொண்டு இராணுவத்திட்ட பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறா. “கட்அவுட்” முறிஞ்சு கொட்டுண்டுது எண்டால் ஆபத்து. அப்ப சண்டையை நடத்துறதா வேண்டாமா எண்ட பிரச்சினை. அதோட சமாதானத்தை எப்பிடியும் நிலைநாட்ட வேணும், புலியளுக்கு அழுத்தம் கொடுங்கோ எண்டு உலகத்தைப் பார்த்து குரலெழுப்புவா.. அப்பிடியே பின்னால திரும்பி இராணுவத்துக்கும் கண்ணைக் காட்டுவா.

பிறகென்ன பழைய குருடி கதவைத் திறவடிதான். கதிரையளில ஆக்கள் மாறியிருக்கினம் அல்லாது கருத்துக்கள் மாறயில்ல.


RANUSHAN SALOON

Simplon ல் முன்னர் வாகினி சலூன் என இயங்கிய எமது ஸ்தாபனமே Ranushan சலூன்.

★★★

நீங்கள் விரும்பிய வடிவங்களில் முடி வெட்டிக்கொள்ள, முடி சுருட்ட, டை அடிக்க அநுபவமிக்கவர் உள்ள நிலையம்



ரனுசன் சலூன்



20, rue Simart, 75018 Paris.
Metro: Marcadet Poissonniers
Tel: 42 55 34 37

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், வீடியோ, ஓடியோ, C.D மற்றும் அனைத்துவிதமான பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

யால்ரா

மளிகை & வீடியோ

YALTA
Alimentation & Video



253, Av. Jean Jaures,
93300 Aubervilliers.
TEL: 48 38 26 26
M°: La Courneuve ou
Fort Aubervilliers

# ரணசுரு, சூரயா திருமலைக் கடலில் சங்காரம்

கடந்த 19.04.95 அன்று விடுதலைப் புலிகள் அரசுக்குக் கொடுத்த காலக்கெடு நிறைவு பெற்ற அன்றைய பொழுது விடிந்த போது, அனைவருக்கும் ஒரு அதிர்ச்சிச் செய்தியையும் சுமந்து வந்தது அந்தக் காலைப் பொழுது. "திருமலைக் கடலிலே இரண்டு பீரங்கிக் கப்பல்கள் தகர்ப்பு. கடற் கரும்புலிகள் தாக்குதல்" என்பதே அந்தச் செய்திகள் ஆகும்.

மிகவும் குறுகிய காலத்திலே தம்மை அபாரமாக வளர்த்துக் கொண்ட கடற்புலிகளின் தாக்குதலால் நிலைகுலைந்துபோன களை சந்தித்து விட்டது.

போர்க் கப்பல்கள், சண்டைப் படகுகள் என இதுவரை 17 கடற்கலங்களை இழந்து துவண்டுபோய் நிற்கிறது சிறீலங்கா கடற்படை.

இந்த 4 ஆண்டுப் போரில் மட்டும் சுமார் 400 இற்கு மேற்பட்ட கடற்படையினரை சிறீலங்கா அரசு இழந்துள்ளது. பூநகரி நாகதேவன்துறை தளத்தில் மட்டும் 300 பேர்வரை கொல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இதுவரையும் கண்காணிப்

தற்போது திருமலைக் கடலிலே இரண்டு பெண் கரும் புலிகள் உள்ளிட்டு நான்கு கடற் கரும் புலிகளாலும் தற்கொடை மூலம் தாக்கி அழிக்கப்பட்டுள்ள "ரணசுரு", "சூரயா" இரண்டும் விரைவு பீரங்கிக் கப்பல்களாகும். இவ் இரண்டினதும் பெறுமதி, சுமார் முப்பது கோடி ரூபாவிற்கு மேல் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை வட பிராந்தியக் கடலிலேயே கடற்தாக்குதல் நடாத்திவந்த கடற்புலிகள் திருமலைத் தாக்குதலின் மூலம்



திருமலையில் 19.04.1995 அன்று தாக்கியழிக்கப்பட்ட சூரயா கப்பல்

# சிறீலங்கா கடற்படைப் பலத்தை நிர்மூலமாக்கிவரும் கடற்புலிகள்

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகள் பற்றி இன்னும் அதிகமாகப் படித்துக்கொண்டுள்ளார்கள். சொன்னதை செய்தே திருவார்கள் புலிகள் என்பது அந்தக் கசப்பான படிப்பினை.

திருமலைக் கடலிலே கடற் கரும்புலிகளின் தற்கொடைத் தாக்குதலுக்கு உள்ளாகி கடலிலே சங்கமித்துவிட்ட "ரணசுரு", "சூரயா" என்னும் இரண்டு பீரங்கிக் கப்பல்களும், அரசிற்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளன. அத்துடன், சிறிலங்கா கடற்படை பலம் சம்பந்தமான பலத்த சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடற் போரின் வெற்றியே தமது இலட்சிய வெற்றியை தீர்மானிக்கும் சக்தி என்பதனை விடுதலைப் புலிகள் நன்றாகவே உணர்ந்திருந்தார்கள்.

அந்த வகையிலே, விடுதலைப் புலிகளின் இலக்கு நோக்கிய நகர்விலே, சிறிலங்கா கடற்படைக் கலங்களின் தகர்வு முக்கிய அம்சமாகவே அமைகிறதெனலாம்.

முன்பு தாக்கி அழிக்கப்பட்ட 'சாகரவர்த்தனா' கப்பலின் கப்டன் கமாண்டர் ஓயாங்கொட, விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு அளித்த ஒரு செவ்வியில், "கடற்புலிகளிடம் ஒரு தற்கொலைப் படை இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் ஒரு நல்ல நிலையில் இருக்ககிறார்கள். இதே நிலை தொடருமாக இருந்தால் அரச படைகள் வேறு ஏதாவது ஒரு மார்க்கத்தைத் தேட வேண்டியிருக்கும்." 'என்று குறிப்பிட்டு கடற்புலிகளின் பலத்தை வெளிப்படுத்தியிருந்தார்.


கடந்த 22.10.91-இல் தீவுப் பகுதிக் கடலிலே கடற்கரை ரோந்துப் படகை அழித்து தமது கடற் சங்காரத்தை தொடக்கிவைத்தார்கள் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள். அதிலிருந்து ரணசுரு, சூரையா வரையிலும் புயல் வேகத்துடன் தொடர்கின்றது இந்த கடற் சங்காரம்.

சுமார் 88 போர்க் கப்பல்களையும் 10 ஆயிரத்து 400 மாலுமிகளையும் கொண்ட சிங்களக் கடற்படை கடந்த 4 வருடப் போரிலே அளப்பரிய இழப்புக் கப்பல் ஒன்றும், ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றும், விநியோகக் கப்பல் ஒன்றும், சுப்பர் டோறா ஒன்றும், நீருந்து படகுகள் ஒன்பதும் மற்றும் கரையோர ரோந்துப் படகுகளான சீகாட், கூகர் என்பனவும் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்தியக் கடலிலும் சிறீலங்கா கடற்படையினருக்கு பெரும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கப் போகின்றார்கள் என்பது கவனத்திற்குரியதாகும். அத்துடன் இத்தாக்குதல் கிழக்கில் மிகப்பெரிய கடற்தளமான திருமலையில் அவர்களின் பலத்த பாதுகாப்பு வலயங்களையும் தாண்டி, அவர்களின கோட்டைக்குள்ளேயே நடாத்தப்பட்டுள்ளது என்பதும் கூர்ந்துநோக்கக்கூடியதாகும்.

பலம்மிக்கதொரு தரைப் படையுடன், கரும்புலிகளையும் கொண்டமைந்த பலமானதொரு கடற்படையினரையும் தாங்கள் கொண்டுள்ளார்கள் என்பதை மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் விடுதலைப் புலிகள். இராணுவ ரீதியாக நம்மை அடிபணிய வைத்துவிட முடியாது என்பதை பலமுறை சிறீலங்காவின் முகத்தில் அறைந்து கூறியும் சிறீலங்கா அரசு இன்னும் தமிழ் மக்களின் சுதந்திரவாழ்வின் உரிமையை பேரம்பேச முற்படுவதும், ஏமாற்று விளையாடும் சமாதானமுறைத் தீர்வுக்கு தடையாகவே அமையும். சிறீலங்கா அரசு இதய சுத்தியோடு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துக்கொண்டு சமாதான மேசைக்கு வராத வரையிலும் ரணசுருவும், சூரயாவும் கடலில் மூழ்கிக்கொண்டே இருக்கும்.

## இதுவரை மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள்



சீகாட் - 22.09.1991 தீவகக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டது



நீருந்து விசைப்படகு -
29.12.1991 யாழ் நீரேரியில் மூழ்கடிக்கப்பட்டது
30.08.1992 மண்டைதீவில் 1 படகு கைப்பற்றப்பட்டது
26.08.1993 கிளாலி கடல்நீரேரியில் மூழ்கடிக்கப்பட்டது 2படகுகள் மூழ்கடிக்கப்பட்டன
10.11.1993 பூநகரித் தாக்குதலில் 5 படகுகள் கைப்பற்றப்பட்டன



கூகர் - 01.10.1991 நயினாதீவுக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டது



சாகரவர்த்தனா - இவ் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் சிலாவத்துறைக் கடலில் 19.09.1994 அன்று மூழ்கடிக்கப்பட்டது



சுப்பர் டோறா - 29.08.1993 பருத்தித்துறைக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.



கண்காணிப்புக் கப்பல் - 16.08.1994 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து அழிக்கப்பட்டது.

ஓசன்றோ i - 19.10.1994 அன்று வெற்றிலைக்கேணியில் மூழ்கடிக்கப்பட்டது. →



## சேதமாக்கப்பட்ட கப்பல்கள்



கட்டளைக் கப்பல்



கரையோர ரோந்துப் படகு



தரையிறங்கு கலம்



சாதாரண டோறா